# சுவிசேஷங்கள்

பாடம் 2

மத்தேயு எழுதின சுவிசேஷம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை....6

பின்னணி....7

- **எழுத்தாளர்**....8
  - பாரம்பரிய கண்ணோட்டம்....8
  - தனிப்பட்ட வரலாறு....12
- **முதல் வாசகர்கள்**....14
  - பரலோக ராஜ்யம்....15
  - யூத பழக்கவழக்கங்கள்....18
- **எழுதப்பட்ட தருணம்**....19
  - தேதி....20
  - இடம்....21
  - நோக்கம்....22

அமைப்பு மற்றும் உள்ளடக்கம்....24

- **முன்னுரை: மேசியா ராஜா**....25
  - வம்சவரலாறு....25
  - குழந்தைப் பருவக் கதை....27
- **ராஜ்யத்தின் சுவிசேஷம்**....29
  - மேசியா வந்து விட்டார்....29
  - மலைப் பிரசங்கம்....32
- **ராஜ்யத்தின் பரவல்**....35
  - இயேசுவின் அற்புதங்கள் மற்றும் எதிர்வினைகள்....35
  - ராஜாவின் தூதர்கள்....38
- **அடையாளங்கள் மற்றும் உவமைகள்**....40
  - அடையாளங்கள் மற்றும் எதிர்வினைகள்....40
  - ராஜ்ய உவமைகள்....41
- **விசுவாசம் மற்றும் மகத்துவம்**....43
  - இயேசுவின் மீது வைத்த இடறுகிற விசுவாசம்....44
  - ராஜ்ய குடும்பத்தில் மகத்துவம்....46
- **தற்போதைய எதிர்ப்பு மற்றும் எதிர்கால வெற்றி**....47
  - தீவிரமடையும் எதிர்ப்பு....48
  - எதிர்கால வெற்றி....50
- **இயேசுவின் ஊழியத்தின் உச்சக்கட்டம்**....53
  - மோதல்....53
  - சீஷத்துவம்....54




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெற்றி ..... 54
**முக்கிய கருப்பொருள்கள் ..... 56**
**பழைய ஏற்பாட்டு பாரம்பரியம்** ..... 56
மேற்கோள்கள் மற்றும் குறிப்புகள் ..... 58
பரலோக ராஜ்யம் ..... 60
மேசியா ராஜா ..... 61
விசுவாசிக்காத யூத தலைவர்கள் ..... 61
தாழ்மை மற்றும் சாந்தம் ..... 64
**தேவனுடைய ஜனங்கள்** ..... 65
சபை ..... 66
தேவனின் குடும்பம் ..... 68
அழைப்பு ..... 72
**முடிவுரை ..... 75**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

1919 ஆம் ஆண்டு பெல்ஜியம் மன்னர் ஆல்பர்ட் அமெரிக்கா முழுவதும் ரயிலில் பயணம் செய்தார். அவர் ரயில் என்ஜின்களில் ஏதோ ஒரு அதிகாரியாக இருந்தவர், அதனால் பத்து மைல் தூரத்திற்கு அவர் ஒரு பொறியாளர் உடை அணிந்து ரயிலை ஓட்டினார். அடுத்த நிறுத்தத்தில், ஆரவாரத்துடன் கூடிய கூட்டம் ஆல்பர்ட் மன்னரைத் தேடியது, ஆனால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மன்னர் ஒரு குறிப்பிட்ட விதத்தில் இருப்பார் என்றும் ஒரு குறிப்பிட்ட விதத்தில் செயல்படுவார் என்றும் அவர்கள் எதிர்பார்த்தனர். எனவே, மெல்லிய கம்பளி சட்டையும் ரயில் தொப்பியும் அணிந்த உயரமான மனிதர் உண்மையில் பெல்ஜியத்தின் மன்னர் என்பதை அவர்கள் உணரவில்லை.

ஒரு கண்ணோட்டத்தில், மத்தேயு சுவிசேஷம் இதே போன்ற கதையைச் சொல்கிறது. யூதர்களின் ராஜாவான இயேசுவின் கதை தான் அது. ஆனால் அவருடைய காலத்தில் பலர் அவரை அடையாளம் காணவில்லை, ஏனென்றால் மக்கள் எதிர்பார்த்த விதத்தில் அவர் காணப்படவில்லை, மேலும் அவர்கள் எதிர்பார்த்தபடி அவர் செயல்படவில்லை. அவர் ஒரு வித்தியாசமான ராஜாவாக இருந்தார்.

இதுவே *சுவிசேஷங்கள்* என்கிற நமது தொடரின் இரண்டாம் பாடமாகும். இந்த பாடத்திற்கு ”மத்தேயு எழுதின சுவிசேஷம்” என்று தலைப்பிட்டுள்ளோம், ஏனென்றால் முதல் சுவிசேஷமான மத்தேயு புத்தகத்தில் நாம் கவனம் செலுத்தப்போகிறோம்.

மத்தேயு சுவிசேஷத்தைப் பற்றிய நமது ஆய்வு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், மத்தேயு சுவிசேஷ புத்தகத்தின் பின்னணியைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, அதன் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை ஆராய்வோம். மூன்றாவதாக, மத்தேயு சுவிசேஷத்தில் சில முக்கிய கருப்பொருள்களைப் பார்ப்போம். மத்தேயு சுவிசேஷத்தின் பின்னணியுடன் ஆரம்பிக்கலாம்.

# பின்னணி

”வேதத்தைப் பற்றிய இந்தச் சூழல் சார்ந்த விஷயங்களை நான் ஏன் தெரிந்துகொள்ள வேண்டும்? என்று நிறைய பேர் கேள்வி கேட்கிறார்கள். வேதாகமத்தை ஒரு நல்ல ஆங்கில மொழிபெயர்ப்பில் வாசித்துவிட்டு அதன் அர்த்தம் என்னவென்று என்னால் கண்டுபிடிக்க முடியாதா?” என்கிறார்கள். சூழல் இல்லாத உரையை நீங்கள் எதை அர்த்தப்படுத்த விரும்புகிறீர்களோ, அதற்கான ஒரு சாக்குப்போக்கு தான் என்று நான் கூற விரும்புகிறேன். பிரச்சனை என்னவென்றால், அனைத்து பழங்கால நூல்களும் சில வகையான வரலாற்று, இலக்கிய, சொல்லாட்சி, தொல்பொருள், மத சூழலில் கொடுக்கப்பட்டுள்ளன, மேலும் அந்த சூழல்கள் அனைத்தும் நம் சூழலிலிருந்து வேறுபட்டவைகளாக இருக்கின்றன. கடந்த காலமானது நிகழ்காலத்திலிருந்து மிகவும் வேறுபட்டது. மேலும் கால முரண்பாடு உடைய ஒன்றுக்கு எதிராக இருக்கும் மிகப்பெரிய வேலியை வைத்திருப்பதும் நமது நவீன அனுமானங்கள் அனைத்தையும் கடந்த காலத்தை நோக்கி மீண்டும் வாசிப்பதும் வேதத்தை சூழல் அடிப்படையில் கவனமாக ஆய்வு **செய்வ**தும் ஆ**கும்**.

Dr. பென் விதரிங்டன் III

வேதத்தின் புத்தகங்களை நாம் துல்லியமாக விளக்கும்போது, எழுத்தாளர் யார், வரலாற்றுச் சூழல் என்ன போன்ற பின்னணி சிக்கல்களைப் புரிந்துகொள்வது முக்கியம், ஏனெனில் எழுத்தாளர்கள் புத்தகங்களை எழுதும்போது, தங்கள் வாசகர்கள் பகிரப்பட்ட கலாச்சாரத்தில் செயல்படுகிறார்கள் என்று கருதுகிறார்கள், அவர்கள் கூறும் அறிக்கைகளின் பரந்த சூழலை அவர்களின் வாசகர்கள் அறிந்து கொள்ளப் போகிறார்கள் என்று நினைக்கிறார்கள். எனவே, பல சந்தர்ப்பங்களில், இந்த எழுத்தாளர் யார், அவருடைய கலாச்சாரம் என்ன என்பதைப் புரிந்துகொள்வதே நம் பணியாகும், இதன் மூலம் பரந்த கலாச்சாரம் மற்றும் வரலாற்றிலிருந்து இன்னும் சில வெளிச்சங்களைப் பெற முடியும், இதன் மூலம் இந்த

அனுமானங்கள் மற்றும் கொடுக்கப்பட்ட உண்மைகளில் சிலவற்றை அறிய முடியும்.

Dr. ஜேம்ஸ் எம். ஹாமில்ட்டன்

மத்தேயு சுவிசேஷத்தின் பின்னணியை மூன்று படிகளில் விவாதிப்போம். முதலில், இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளராக மத்தேயுவைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, மத்தேயுவின் அசல் வாசகர்களைப் பற்றி பேசுவோம். மூன்றாவதாக, மத்தேயு எந்த சந்தர்ப்பம் அல்லது சூழ்நிலையில் எழுதினர் என்று பார்ப்போம். முதலில் இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளரைப் பற்றிப் பார்ப்போம்.

## எழுத்தாளர்

ஒரு புத்தகத்தையோ, ஒரு கடிதத்தையோ அல்லது வேறு எந்த நூலையோ நாம் படிக்கும்போதெல்லாம், அதை எழுதியவர் யார் என்பதை அறிவது நமக்கு உதவியாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு எழுத்தாளரையும் அவரது சூழலையும் பற்றி நாம் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறோமோ, அவ்வளவு சிறப்பாக அவருடைய முன்னோக்குகளையும் அர்த்தத்தையும் புரிந்து கொள்ள தயாராக இருப்போம். நாம் வேதத்தைப் படிக்கும்போதும் இதுவே உண்மை. வேதாகம எழுத்தாளர்களைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறோமோ, அவ்வளவு சிறப்பாக அவர்கள் நமக்குக் கற்பிக்கும் பாடங்களைப் புரிந்துகொள்ள நாம் தயாராக இருப்போம். எனவே, நாம் மத்தேயு சுவிசேஷத்தை அணுகும்போது, நாம் கேட்க விரும்பும் முதல் கேள்விகளில் ஒன்று "இந்த புத்தகத்தை எழுதியவர் யார்?" என்பதே.

*மத்தேயு சுவிசேஷத்தின்* எழுத்தாளரை இரண்டு நிலைகளில் கருத்தில் கொள்வோம். முதலில், இந்தப் புத்தகம் இயேசுவின் அசல் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவரான அப்போஸ்தலனாகிய மத்தேயுவால் எழுதப்பட்டது என்ற பாரம்பரியக் கருத்தை உறுதிப்படுத்துவோம். இரண்டாவதாக, மத்தேயுவின் தனிப்பட்ட வரலாற்றை ஆராய்வோம். இந்த சுவிசேஷம் மத்தேயுவால் எழுதப்பட்டது என்ற பாரம்பரிய கண்ணோட்டத்துடன் ஆரம்பிக்கலாம்.

### பாரம்பரிய கண்ணோட்டம்

அப்போஸ்தலனாகிய மத்தேயு தான் உண்மையில் மத்தேயு சுவிசேஷத்தின் எழுத்தாளர் என்பதில் நாம் நிறைய நம்பிக்கை வைக்க முடியும் என்று நான் நினைக்கிறேன், இருப்பினும் சில அறிஞர்கள் இன்று இதை சந்தேகிக்கிறார்கள். ஒன்று, ஆரம்பகால சபை பிதாக்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மிகவும் சந்தேகம் கொண்டிருந்தனர் என்பதை நாம் அறிவோம். அவர்கள் கள்ள புத்தகங்களை வேதாகமங்களின் தொகுப்பைச் சேர்ந்தவைகளாகவும், உண்மையான, நியமனப் படைப்புகள் என்றும் ஏற்றுக்கொள்வதை முற்றிலும் எதிர்த்தார்கள். இரண்டாவதாக, மத்தேயுவின் படைப்புரிமை குறித்து சொந்தம் கொண்டாடும் வேறு பாரம்பரியம் இல்லை. மத்தேயு இந்நூலை எழுதினார் என்பது தான் நமக்கு இருக்கும் ஒரே பாரம்பரியம். மூன்றாவதாக, ஒருவர் பெயரை இந்த புத்தகத்திற்கு வைக்க வேண்டும் என்பதற்காகவோ அல்லது ஏதாவதொரு அப்போஸ்தலனின் பெயர் இதற்கு இருக்க வேண்டுமென்றோ ஆரம்பகால சபை வரலாற்றுக் காரணங்கள் அல்லாத வேறு காரணங்களுக்காக இந்த சுவிசேஷத்துடன் ஒருவரின் பெயரை இணைக்கப் போகிறது என்றால், மத்தேயு ஒரு மோசமான தேர்வாக இருக்கும். காரணம், மத்தேயு ஒரு வரி வசூலிப்பவர் ஆவார். யூத மக்களால் முற்றிலும் வெறுக்கப்பட்ட ஒரு தொழிலை அவர் செய்தார். இருந்தாலும் மத்தேயுவின் சுவிசேஷம் யூத வாசகர்களுக்கு எழுதப்பட்ட ஒரு சுவிசேஷமாகும், இது இயேசுவே மேசியா என்று அவர்களை நம்ப வைக்க முயற்சிக்கிறது. இயேசுவே மேசியா என்பதை யூதர்களுக்கு உணர்த்த இந்த சுவிசேஷம் எழுதப்பட்டுள்ளது, மேலும் அவர்கள் இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளராக மத்தேயுவைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்களா? அதில் எந்த அர்த்தமும் இல்லை. அவர்கள் மத்தேயுவின் பெயரை மத்தேயுவின் சுவிசேஷத்துடன் தொடர்புபடுத்துவதற்கு ஒரே காரணம், மத்தேயு உண்மையில் அதை எழுதினார் என்று நம்புவதற்கு அவர்களுக்கு நல்ல வலுவான காரணம் இருந்ததால் மட்டுமே.
>
> Dr. ஸ்டீவன் கோவன்

மத்தேயு முதல் சுவிசேஷத்தை எழுதினார் என்ற பாரம்பரிய கண்ணோட்டம் சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளில் இருந்தே இருந்து வருகிறது. தலைப்பைக் கொண்ட இந்த சுவிசேஷத்தின் ஒவ்வொரு பண்டைய பிரதியிலும், மத்தேயு தான் இதை எழுதினார் என்று உள்ளது. இந்த சுவிசேஷம் மத்தேயுவின் பெயருடன் இணைக்கப்படாமல் சபைகளில் விநியோகிக்கப்பட்டது என்பதற்கு நம்மிடம் எந்த ஆதாரமும் இல்லை.

மத்தேயுவுக்கு முதல் சுவிசேஷத்தைக் கூறியவர்களில் ஒருவர் எராபோலிஸ் என்கிற இடத்தைச் சேர்ந்த பாபியாஸ் ஆவார். பாபியாஸ் முதல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நூற்றாண்டின் இறுதியில் இருந்து இரண்டாம் நூற்றாண்டு வரை வாழ்ந்தார். சபையின் ஆரம்ப காலத்தில் இருந்த நாம் அணுகக்கூடிய கண்ணோட்டங்களை அவர் எடுத்துரைக்கிறார்.

கி.பி 325 இல் எழுதிய செசரியாவின் சபை வரலாற்றாசிரியர் யாசூபியஸ், மத்தேயு சுவிசேஷத்தின் எழுத்தாளர் பற்றிய பாபியாஸின் சாட்சியத்தை அவரது *எக்ளஸியாஸ்டிக்கல் ஹிஸ்டரி,* புத்தகம் 3, 39, பிரிவு 16 இல் பதிவு செய்தார். பாபியாஸின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> மத்தேயு இயேசுவினுடைய வார்த்தைகளை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட ஏற்பாட்டில் வைத்தார்.

இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், பாபியாஸ் இந்த சுவிசேஷத்தை எழுதியது மத்தேயு தான் என்று கூறுவதை இங்கு பார்க்கிறோம். மத்தேயு முதல் சுவிசேஷத்தை எழுதினார் என்ற தனது சொந்தக் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் யசூபியஸ் பாபியாஸை மேற்கோள் காட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மற்றொரு ஆரம்பகால சபை பிதாவான லியோனை சேர்ந்த ஐரேனியஸ் கி.பி. 180 இல், முதல் சுவிசேஷத்தை மத்தேயு தான் எழுதினார் என்று கூறினார். *எகைன்ஸ்ட் ஹெரஸிஸ்,* புத்தகம் 3, 1, பிரிவு 1 இல் அவர் எழுதியதைக் கவனியுங்கள்:

> அதே நேரத்தில் பேதுருவும் பவுலும் ரோமில் பிரசங்கித்து, சபையின் அடித்தளத்தை அமைத்துக்கொண்டிருந்த போது, மத்தேயு எபிரெயர்களுக்கு சுவிசேஷத்தை அவர்களின் சொந்த மொழியில் வெளியிட்டார்.

டெர்டுல்லியான் சிறிது காலம் கழித்து, கி.பி. 155 முதல் 230 வரை வாழ்ந்தார். *எகைன்ஸ்ட் மார்சியன்,* புத்தகம் 4, அத்தியாயம் 2 இல் மத்தேயு தான் முதல் சுவிசேஷத்தின் எழுத்தாளர் என்று உறுதிப்படுத்தினார்:

> அப்போஸ்தலர்களில், யோவான் மற்றும் மத்தேயு முதலில் நமக்குள் விசுவாசத்தை விதைத்தார்கள் … லூக்காவும் மாற்குவும் பிறகு அதை புதுப்பிக்கிறார்கள்.

ஐரேனியஸ் மற்றும் டெர்டுல்லியான் ஆகியோரைப் பொருத்தவரை, மத்தேயு இந்த சுவிசேஷத்தை எழுதினார். அவர்களின் நம்பிக்கை ஆரம்பகால சபையால் பகிர்ந்து கொள்ளப்பட்டது. முதல் சுவிசேஷத்தை மத்தேயு எழுதியது உறுதியானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மத்தேயு தான் இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்பது பற்றிய இந்த ஆரம்பகால கூற்றுக்கள் மத்தேயுவைப் பற்றிய தெளிவு அதிகமாக இல்லாததால் பலப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உணர வேண்டியதும் முக்கியம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மறைமுகமாக, சபையோ அல்லது வேறு யாரோ ஒரு சுவிசேஷத்திற்கு நம்பகத்தன்மையைக் கொடுக்க விரும்பினால், அதைத் தாங்கள் தேர்ந்தெடுத்த ஒரு அப்போஸ்தலன் தான் எழுதினார் என்று சொல்லி, அவர்கள் ஒருவேளை மிகவும் பிரபலமான அப்போஸ்தலர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்திருப்பார்கள். ஆனால் சுவிசேஷங்களில் மத்தேயு அரிதாகவே குறிப்பிடப்படுகிறார். இந்த சுவிசேஷத்தில் அவரது பெயர் தவறாக இணைக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

> முதலாவதாக, முதல் நூற்றாண்டில் நேரில் கண்ட சாட்சிகளின் முக்கியத்துவத்தை நாம் அங்கீகரிக்க வேண்டும். நேரில் கண்ட சாட்சிகளின் சாட்சி மிகவும் உயர்வாகக் கருதப்பட்டது, மேலும் நேரில் கண்ட சாட்சிகள் இலகுவாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. நடந்த விஷயங்களை சொல்லும் ஒரு தனிப்பட்ட வகை இதுவாகும். இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், மத்தேயுவின் சுவிசேஷம் அப்போஸ்தலனாகிய மத்தேயுவால் எழுதப்பட்டது என்று பாபியாஸ் என்பவர் எழுதியதையும் நாம் அறிவோம். பாபியாஸ் தனது ஆயுட்காலத்தின் காரணமாக அப்போஸ்தலர்களை நேரடியாக அறிந்திருப்பார். மத்தேயு சுவிசேஷத்தை அப்போஸ்தலனாகிய மத்தேயு தான் எழுதியது என்று நாம் உறுதியாக நம்புவதற்கான இறுதிக் காரணம் என்னவென்றால், மத்தேயு சுவிசேஷத்தின் உரையில் மத்தேயுவின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும், மத்தேயு சுவிசேஷம் எல்லா நேரத்திலும் அதன் எழுத்தாளர் மத்தேயு என்கிற தலைப்பில் தான் பல இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

சில நவீன விமர்சன அறிஞர்கள், வேதாகம புத்தகங்களை எழுதிய ஆசிரியர்கள் பற்றிய பல பாரம்பரியக் கருத்துக்களைக் கேள்வி எழுப்பியதைப் போலவே, அப்போஸ்தலனாகிய மத்தேயு முதல் சுவிசேஷத்தை எழுதினர் என்பதை சந்தேகிக்கின்றனர். ஆனால் இந்த சுவிசேஷத்தின் ஆசிரியர் மத்தேயு தான் என்பதற்கான பண்டைய சான்றுகள் வலிமையாக இருப்பதாலும், எந்த பண்டைய சவால்களும் முழுமையாக இல்லாததாலும், அவர் இந்த புத்தகத்தை எழுதினார் என்பதை வலுவாக நம்ப முடியும்.

மத்தேயு இந்த முதல் சுவிசேஷத்தை எழுதினார் என்ற பாரம்பரிய கண்ணோட்டத்தை இப்போது நாம் பார்த்தோம், நாம் மத்தேயுவின் தனிப்பட்ட வரலாற்றைப் பார்க்கப் போகிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## தனிப்பட்ட வரலாறு

மத்தேயுவின் தனிப்பட்ட வரலாற்றைப் பற்றிய சில முக்கியமான உண்மைகளை வேதம் நமக்குக் கூறுகிறது. உதாரணமாக, அவர் ஒரு யூதர் மற்றும் ஒரு வரி வசூலிப்பவர் என்று அது குறிப்பிடுகிறது. மத்தேயு ஒரு யூதர் என்பதில் தொடங்கி, இந்த இரண்டு விவரங்களையும் கருத்தில் கொள்வோம்.

மத்தேயுவின் யூத பாரம்பரியம் பல வழிகளில் வெளிப்படுகிறது. ஒன்று, அவர் இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவர், அவர்கள் அனைவரும் யூதர்களாக இருந்தனர். மற்றொன்று, மத்தேயுவுக்கு யூத பெயர்கள் இருந்தன. மத்தேயு என்ற பெயர் யூதப் பெயராகும், இது எபிரெய பழைய ஏற்பாட்டிலிருந்து வந்தது. மாற்கு 2:14 மற்றும் லூக்கா 5:28 இல் நாம் காணும் அவருடைய மற்றொரு பெயர், லேவி, இஸ்ரவேலின் கோத்திரங்களில் ஒன்றின் பெயராகும். எனவே, இந்த இரண்டு பெயர்களும் மத்தேயு யூதர் என்பதை நிரூபிக்கின்றன. மத்தேயுவின் யூத வம்சாவளியை அவர் எபிரெய மொழியில் எழுதிய பண்டைய கிறிஸ்தவ அறிக்கைகளும் குறிக்கலாம்.

மத்தேயுவின் யூத பாரம்பரியம் அவருடைய சுவிசேஷத்தைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான பின்னணியாகும், ஏனெனில் அது அவருடைய யூத முக்கியத்துவத்தை தெளிவாக விளக்க உதவுகிறது. இந்த சுவிசேஷத்தின் யூதத் தன்மையை இந்தப் பாடத்தில் பின்னர் விரிவாகப் படிப்போம். எனவே தற்போதைக்கு, விளக்கத்திற்காக ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் குறிப்பிடுவோம்.

மத்தேயு 15:24 இல், இயேசு பின்வரும் கூற்றை முன்வைத்ததாக மத்தேயு அறிவித்தார்:

> காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேன் (மத்தேயு 15:24).

மற்ற எந்த சுவிசேஷத்தையும் விட, இயேசு குறிப்பாக இஸ்ரவேல் தேசத்திற்காக வந்தார் என்பதை மத்தேயு வலியுறுத்தினார்.

மத்தேயுவின் யூத பாரம்பரியத்தைத் தவிர, அவர் ஒரு வரி வசூலிப்பவர் என்பது அவரது வாழ்க்கையைக் குறித்த முக்கியமான மற்றொரு விவரமாகும். முதல் நூற்றாண்டில், பாலஸ்தீனத்தில் இருந்த பல யூதர்கள் ரோமப் பேரரசின் சார்பாக வரி வசூலித்தனர். இந்த வரி வசூலிப்பாளர்களில் சிலர் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு கொண்டு செல்லப்படும் பொருட்களின் மீது வரிகளை வசூலித்தனர். அவர்கள் தனியார் தொழில்முனைவோர்களாக இருந்தனர், அவர்கள் வரி வசூலிக்கும் அதிகாரத்திற்காக ஆட்சியாளர்களுக்கு பணம் கொடுத்தனர். மக்களிடம் வசூலித்த வரியை உயர்த்தி லாபம் ஈட்டினார்கள். இதன் விளைவாக, இந்த வரி வசூலிப்பவர்கள் மிரட்டி பணம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பறிப்பவர்களாகவும் திருடர்களாகவும் காணப்பட்டனர் - மேலும் இந்த கெட்ட பெயர் பெரும்பாலும் அவர்களுக்கு பொருந்துவதாக இருந்தது.

இந்த காரணத்திற்காக, யூத வரி வசூலிப்பவர்கள் தங்கள் நாட்டு மக்களின் பார்வையில் இரட்டிப்பு குற்றவாளிகளாக இருந்தனர். முதலில், அவர்கள் ரோமில் இருந்த வெறுக்கப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களின் முகவர்கள் ஆவார்கள். இரண்டாவதாக, அவர்கள் சொந்த லாபத்திற்காக தங்கள் சொந்த மக்களை கொள்ளையடித்தனர். உண்மையில், அவர்கள் மிகவும் தீயவர்களாகவும் நம்பத்தகாதவர்களாகவும் கருதப்பட்டனர், ஆரம்பகால ரபிக்களின் நூல்கள் அவர்கள் யூத நீதிமன்றத்தில் சாட்சியளிப்பதைத் தடைசெய்தன. மேலும், வரி வசூலிப்பவர்களிடம் பொய் சொல்வது அங்கீகரிக்கப்பட்டது மற்றும் நியாயமான கிளர்ச்சியின் செயலாகவும் அது பாராட்டப்பட்டது.

மத்தேயு 9:9-10 இல் இயேசுவிடமிருந்து மத்தேயு தனது சொந்த அழைப்பைப் பதிவுசெய்த விதத்தைக் கவனியுங்கள்:

> ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனை இயேசு கண்டார். "எனக்குப் பின்சென்றுவா" என்றார்; அவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான். பின்பு அவர் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள் (மத்தேயு 9:9-10).

மத்தேயு தன்னைப் பற்றிய விளக்கத்தில் மிகவும் நேர்மையாக இருந்தார், மேலும் இயேசுவின் நாளில் தானும் மற்ற வரி வசூலிப்பவர்களும் "பாவிகளுடன்" தொடர்பு கொண்டிருந்ததை வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். அவ்வாறு செய்வதன் மூலம், மத்தேயு தன்னையும், இயேசுவையும், அவருடைய எழுதப்பட்ட சுவிசேஷத்தையும் யூதத் தலைமையுடன் முரண்பட்டதாகக் காட்டினார். இந்த பிரிவு பெரும்பாலும் மத்தேயுவின் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. உதாரணமாக, மத்தேயு 21:31-32 இல் இயேசு யூதத் தலைமையை விமர்சித்த விதத்தைக் கவனியுங்கள்:

> ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள். அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை (மத்தேயு 21:31-32).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மத்தேயு தனது பாவமான தனிப்பட்ட வரலாற்றைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்குத் தயாராக இருப்பது அவருடைய சுவிசேஷத்தின் மற்றொரு முக்கியத்துவத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம், இந்தப் பாடத்தில் நாம் பின்னர் அதை மிகவும் நெருக்கமாகப் பார்ப்போம். மற்ற எந்த சுவிசேஷ எழுத்தாளரையும் விட மத்தேயு, இயேசு ஒரு தாழ்மையான ராஜாவாக இருந்தார் என்ற உண்மையை வலியுறுத்தினார், அவர் தம்மைப் பின்பற்றுபவர்களை மனத்தாழ்மையாய் இருக்கும்படி அழைப்பு விடுத்தார். தனது கடந்த காலத்தை புரிந்துகொள்வதன் மூலம், மத்தேயு தனது கிருபையின் தேவையை சுதந்திரமாக ஒப்புக்கொண்டார், மேலும் தன்னை அழைத்த மற்றும் மாற்றிய ராஜாவைப் பின்பற்றுவதற்கான தனது விருப்பத்தையும் அறிவித்தார். ஏரோதின் பாவமான வேலைக்காரனிலிருந்து இயேசு அவனை பரலோகராஜ்யத்தின் சுவிசேஷத்தினுடைய தாழ்மையான ஊழியக்காரனாக மாற்றினார்.

> மற்றவர்களுக்கும் நமக்கும் நல்லது நடக்கும்போதும் மற்றவர்கள் முன்னேறும்போதும் நாம் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருப்பது தான் உண்மையான பணிவாகும். மேலும் மற்றவர்களுக்கு கனமும் செழிப்பும் கிடைக்கும் போது நாம் சந்தோஷப்பட வேண்டும். அதற்காக நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், மேலும் முதலில் தேவனை கனம் பண்ணவும் அவருக்கு நன்றி சொல்லவும் விரும்புகிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவனுக்காக வாழ விரும்புகிறோம், வெறுமனே நமக்காக அல்ல. ஆகவே, பணிவு என்பது எனது நலன்கள் நிறைவேறுவதைப் பார்க்காமல், முதலில், தேவனின் நலன்கள் யாரோ ஒருவர் மூலமாகவோ அல்லது என் மூலமாகவோ நிறைவேற்றப்படுவதைப் பார்ப்பது ஆகும்.
>
> Dr. ஜான் இ. மெக்கின்லே

மத்தேயு முதல் சுவிசேஷத்தை எழுதினார் என்ற பாரம்பரியக் கருத்து சரியானது என்றும், அவருடைய தனிப்பட்ட வரலாற்றில் சிறிது பரிச்சயமானது என்றும் இப்போது நாம் முடிவு செய்துள்ளோம், மத்தேயு எழுதிய அசல் வாசகர்களின் அடையாளத்தைப் பற்றி ஆராய்வோம்.

## முதல் வாசகர்கள்

மத்தேயு தனது முதல் வாசகர்களை குறிப்பாக அடையாளம் காணவில்லை. ஆனால் அவர் அவர்களைப் பற்றிய சில குறிப்புகளை நமக்குத்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தந்தார். நாம் பார்ப்பது போல், மத்தேயு முதன்மையாக யூத கிறிஸ்தவர்களுக்காக எழுதியதாகத் தெரிகிறது.

முந்தைய பாடத்தில் நாம் குறிப்பிட்டது போல், அனைத்து சுவிசேஷங்களும் குறிப்பாக கிறிஸ்தவ வாசகர்களுக்காக எழுதப்பட்டவை. ஆனால் மத்தேயுவின் சுவிசேஷத்தில் உள்ள பல வலியுறுத்தல்கள் யூத பின்னணியில் இருந்து வரும் கிறிஸ்தவ வாசகர்களுக்கு மிகவும் பொருத்தமானதாக அமைகின்றன. உதாரணமாக, மற்ற எந்த சுவிசேஷ எழுத்தாளரையும் விட மத்தேயு பழைய ஏற்பாட்டை அதிகம் மேற்கோள் காட்டினார். பழைய ஏற்பாட்டின் எதிர்பார்ப்புகளை இயேசு நிறைவேற்றிய வழிகளை அவர் அடிக்கடி சுட்டிக்காட்டினார். யூதர்கள் பல நூற்றாண்டுகளாக எதிர்பார்த்திருந்த மேசியா ராஜா இயேசு தான் என்பதை அவர் குறிப்பாக வலியுறுத்தினார். அவிசுவாசமுள்ள யூத தலைவர்களுடனான இயேசுவின் மோதல்களில் யூதர்களின் பிரச்சினைகளுக்கு அவர் முக்கியத்துவம் கொடுத்தது தெரிகிறது. மற்ற சுவிசேஷ எழுத்தாளர்களை விட மத்தேயு இதை விவரித்தார். பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்துடனான இயேசுவின் உறவில், குறிப்பாக அதன் கர்த்தராக மத்தேயு அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

இந்த பாடத்தில் பின்னர் இந்த வலியுறுத்தல்களில் சிலவற்றை இன்னும் விரிவாகப் பார்ப்போம். எனவே, இந்த இடத்தில், மத்தேயு ”பரலோக ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதில் தொடங்கி, யூத வாசகர்களுக்கு மத்தேயு எழுதியதைக் குறிக்கும் இரண்டு எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடுவோம்.

## பரலோக ராஜ்யம்

முந்தைய பாடத்தில், நான்கு சுவிசேஷங்களும் தேவனுடைய ராஜ்யம் என்கிற கருப்பொருளால் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனித்தோம். ஆனால் மத்தேயு ”*தேவனுடைய* ராஜ்யம்” என்ற சொற்றொடரை அரிதாகவே பயன்படுத்தினார். அதற்கு பதிலாக அவர் பொதுவாக ”*பரலோக* ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். மத்தேயு சுவிசேஷம் மட்டுமே வேதாகமத்தில் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்திய ஒரே புத்தகமாகும். நாம் பார்த்தபடி, இரண்டு சொற்றொடர்களும் ஒரே பொருளைக் குறிக்கின்றன.

தேவன் மீதுள்ள பயபக்தியின் காரணமாக, தற்செயலாக தேவனின் நாமத்தை வீணாக எடுத்துக் கொள்ளாதபடிக்கு, யூதர்கள் பெரும்பாலும் தெய்வீகப் பெயரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தனர். அல்லது அதற்கு நெருக்கமான எதையும் பயன்படுத்துவதைத் தவிர்த்தனர். அவர்கள் இதைச் செய்த ஒரு வழி, “தேவன்” என்ற சொல்லுக்குப் பதிலாக “பரலோகம்” என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதாகும். மத்தேயு ”பரலோக ராஜ்யம்” என்ற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சொற்றொடரைப் பயன்படுத்தியபோது துல்லியமாக இதைத்தான் செய்தார். முதல் மூன்று சுவிசேஷங்களில் உள்ள இணையான பகுதிகளை நாம் ஒப்பிடும்போது, மற்ற சுவிசேஷ எழுத்தாளர்கள் ”தேவனுடைய ராஜ்யம்” என்ற வார்த்தையைப் பயன்படுத்திய இடத்தில், மத்தேயு ”பரலோக ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்.

> மற்ற சுவிசேஷங்களில், ”தேவனுடைய ராஜ்யம்” என்று இருப்பதை நாம் காண்கிறோம், ஆனால் மத்தேயு தனது சுவிசேஷத்தில் கிட்டத்தட்ட முழு நேரமும், ”பரலோக ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். மத்தேயு ”தேவனுடைய ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்திய இரண்டு சந்தர்ப்பங்கள் உள்ளன என்று நான் நினைக்கிறேன், ஆனால் மத்தேயு ஒரு யூத எழுத்தாளர், கிறிஸ்துவில் யூத விசுவாசியாக இருந்தவர் மற்றும் யூதர்களுக்கு, தேவனின் நாமம் பயன்படுத்த முடியாத அளவுக்கு பரிசுத்தமானதாக இருந்ததே இதற்குக் காரணமாகும் . எனவே, ”பரலோகம்” என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது தேவனைக் குறிப்பிடுவதற்கான மற்றொரு வழியாகும். மற்றொரு சுவிசேஷத்தில், ”நான் வானத்திற்கும் பூமிக்கும் எதிராக பாவம் செய்தேன்” என்று வாசிக்கிறோம். அதன் அர்த்தம், ”நான் தேவனுக்கு எதிராக பாவம் செய்தேன்” என்பதாகும். மேலும், ஆபத்து என்னவென்றால், ”பரலோக ராஜ்யம்” என்ற சொற்றொடரைக் கேட்கும்போது, அதை நாம் தவறாகக் கேட்கிறோம், மேலும், ”ஒ, இது பரலோகம் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது” என்று நினைக்கிறோம். ஆனால், தேவன் உண்மையில் இப்போது இயேசு கிறிஸ்து மூலம் இந்த உலகத்தின் ராஜாவாக வருகிறார் என்ற எண்ணத்துடன் அவர் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி பேசினார். எனவே, கிறிஸ்தவர்கள் பிற்காலத்தில் ”பரலோக ராஜ்யம்” என்பதை சரியாகக் கேட்காவிட்டால் அவர்களுக்கு உண்மையான ஆபத்து உள்ளது. உண்மையில், தேவனே ராஜா ஆவார், தன் மூலமாக ராஜாவாகிறார் என்று இயேசு சொல்கிறார்.
>
> Dr. பீட்டர் வாக்கர்

மாற்கு 4:30-31 இல் உள்ள கடுகு விதையைக் குறித்த உவமையில் மாற்குவின் பதிவைக் கவனியுங்கள்:

> [இயேசு] கீழ்கண்டவாறு சொன்னார் … ”தேவனுடைய ராஜ்யத்தை எதற்கு ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவமையினாலே அதைத் திருஷ்டாந்தப்படுத்துவோம்? அது ஒரு கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அது பூமியில் விதைக்கப்படும்போது பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறிதாயிருக்கிறது” (மாற்கு 4:30-31).

இங்கே மாற்கு தேவனுடைய ராஜ்யம் என்கிற சொற்றொடரின் இயல்பான வடிவத்தைப் பயன்படுத்தினார். ஆனால் மத்தேயு 13:31 இல் உள்ள உவமையில் மத்தேயுவின் பதிப்பைக் கவனியுங்கள்:

> [இயேசு]வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: ”பரலோகராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்” (மத்தேயு 13:31).

இதே நிகழ்வை மத்தேயு விவரித்தபோது, அவர் ”பரலோக ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார், அங்கு மாற்கு ”தேவனுடைய ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்.

> மத்தேயு பரலோக ராஜ்யம் என்று அழைப்பதையும் மாற்கும் லூக்காவும் அதை தேவனுடைய ராஜ்யம் என்று அழைப்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்கள் ஒரே காரியத்தைப் பற்றித் தான் பேசுகிறார்கள் என்பது உறுதியாகிறது. சரி, நீங்கள் மத்தேயுவை ஒட்டுமொத்தமாக வாசிக்கும்போது, பரலோகத்தில் இருக்கும் தேவனையும் பூமியில் உள்ள மனித இனத்தையும் வேறுபடுத்திப் பார்ப்பதில் ஒரு முக்கிய கருப்பொருள் இருப்பதை காண்பீர்கள். தேவன் ராஜ்யத்தை உருவாக்கும் விதத்தை பரலோக ராஜ்யம் என்று அவர் அழை**க்**கிறார், மற்றும் மனித ரீதியில் ஆட்சி செய்வதையும் ஆளுவதையும் ஒருவருக்கொருவர் நடந்துகொள்வதையும்,இந்த உலகத்தின் ராஜ்யங்கள் என்று நாம் அழைக்கலாம். மேலும் மத்தேயு பரலோக ராஜ்யத்தைப் பற்றி பேசுவது, இந்த உலகத்தின் விஷயங்களுக்கும், ஆளுபவரும் ஆட்சி செய்பவரும் மீண்டும் வருவேன் என்று வாக்குத்தத்தம் செய்தவருமான பரலோகத்தில் உள்ள நம்முடைய பிதாவுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணர மிகவும் சக்திவாய்ந்த வழியாகும். ஆக, இன்னும் வரவிருக்கும் தேவனுடைய ஆட்சிக்கும், இந்த பூமியின் அனைத்து ஆட்சிகளுக்கும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நடத்தைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணரவும் ருசி பார்க்கவும் மத்தேயுவின் மொழியில் பரலோக ராஜ்யத்தைப் பற்றிய கருத்து கொடுக்கப்பட்டுள்ளது, அந்த இரண்டு உண்மைகளுக்கும் இடையே வேறுபாடு உள்ளது, மற்றும் மத்தேயு “பரலோக ராஜ்யத்தை” உபயோகப்படுத்துவது, எதிர்காலத்தில் வரவிருக்கும் தேவனுடைய பரலோக ராஜ்யத்தை உணரவும் ருசி பார்க்கவும் நம்பிக்கை கொள்ளவும் உதவுகிறது.
>
> Dr. ஜோனதான் டி. பென்னிங்டன்

யூதக் கூட்டத்தினரிடம் இயேசு பேசிய விதத்தை அப்படியே மத்தேயு தந்திருக்கிறார் என்று பல அறிஞர்கள் நம்புகிறார்கள், மேலும் மாற்கு மற்றும் பிற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசுவின் கருத்தை நிறைய வாசகர்களுக்கு இன்னும் தெளிவுபடுத்துவதற்காக ”தேவனுடைய ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினர். ஆனால் இது உண்மையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், மத்தேயு ”பரலோக ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவது அவருடைய அசல் வாசகர்கள் யூதர்கள் என்பதற்கு அழுத்தம் சேர்க்கிறது.

## யூத பழக்கவழக்கங்கள்

மத்தேயு யூத வாசகர்களுக்குத் தான் எழுதினார் என்பதை நிரூபிக்கும் மற்றொரு அம்சம், யூத பழக்கவழக்கங்களைப் பற்றி தனது வாசகர்களுக்கு கணிசமான அறிவு இருப்பதாக மத்தேயு கருதிய விதம் ஆகும். ஒரு உதாரணமாக, மத்தேயு 15:1-2 இல், மத்தேயு இந்த நிகழ்வைப் பதிவு செய்தார்:

> எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து, உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கைகழுவாமல் போஜனம்பண்ணுகிறார்களே!” என்றார்கள் (மத்தேயு 15:1-2).

இதே கதையை மாற்கு தனது சுவிசேஷத்தில் 7:1-5 இல் சேர்த்துள்ளார். ஆனால் யூதர்களின் கை கழுவும் வழக்கத்தை விளக்குவதற்கு மாற்கு மூன்று வசனங்களைச் சேர்த்தார், அதனால் அவருடைய ரோம வாசகர்கள் அந்த வழக்கத்தைப் புரிந்துகொண்டனர். மத்தேயு தனது வாசகர்களுக்கு அந்த வகையான விளக்கத்தைச் சேர்க்கத் தேவையில்லை என்று உணர்ந்தார்.

மத்தேயு யூத வாசகர்களுக்காக எழுதினார் என்றாலும் அவருடைய சுவிசேஷத்தின் ஒரு சிறப்பியல்பு அந்த கருத்துக்கு எதிராக இருப்பதைப் போல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தோன்றுகிறது. சில சந்தர்ப்பங்களில், மத்தேயு அராமிய மொழியில் இயேசு பேசியதை மேற்கோள் காட்டினார், பின்னர் அந்த அராமிய வார்த்தைகளை அவரது வாசகர்களின் மொழியில் மொழிபெயர்த்தார். ஒரு உதாரணத்திற்கு, மத்தேயு 27:46 இல் உள்ள வார்த்தைகளை கவனிக்கவும்:

> ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: "ஏலீ, ஏலீ, லாமா சபக்தானி?" என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று அர்த்தமாம் (மத்தேயு 27:46).

மத்தேயுவின் வாசகர்கள் முதன்மையாக யூதர்களாக இருந்தாலும் கூட, மத்தேயு ஏன் இவ்வாறு எழுதியிருக்கலாம் என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் உள்ளன. முதலாவதாக, அவரது வாசகர்கள் முதன்மையாக யூதர்களாக இருந்தபோதிலும், வேறு சில வாசகர்களும் இருந்தனர். எனவே, யூதர்கள் அல்லாதோருக்கான இந்த மொழிபெயர்ப்புகளை அவர் வாசகர்களிடையே சேர்த்திருக்கலாம். இரண்டாவதாக, மத்தேயுவின் வாசகர்கள் பாலஸ்தீனத்திற்கு வெளியே அராமிய மொழி தெரியாதவர்களையும் உள்ளடக்கியிருக்கலாம். மூன்றாவதாக, மத்தேயு வேறு மூலத்திலிருந்து தகவலை பெற்றிருக்கலாம். எடுத்துக்காட்டாக, மத்தேயு 27:46 இன் மொழிபெயர்ப்பு மாற்கு 15:34 இல் உள்ளது, மத்தேயு அதை ஒரு ஆதாரமாகப் பயன்படுத்தியிருக்கலாம்.

மத்தேயு தனது சுவிசேஷத்தை முதன்மையாக யூத கிறிஸ்தவர்களுக்காக எழுதினார் என்று நாம் கண்ட அனைத்து ஆதாரங்களின் மூலம் அறிய முடிகிறது, குறிப்பாக அவர்களுக்கு முக்கியமான பல பிரச்சனைகளைத் தீர்ப்பதன் மூலம் இயேசுவின் மீதான அவர்களின் விசுவாசத்தை வலுப்படுத்துவதற்காக மத்தேயு இந்த சுவிசேஷத்தை எழுதினார்.

இப்போது முதல் சுவிசேஷத்தின் ஆசிரியர் மற்றும் வாசகர்களை ஆராய்ந்துவிட்டோம், அதன் தொகுப்பின் சந்தர்ப்பத்தை ஆராய நாம் இப்போது தயாராக இருக்கிறோம்.

## எழுதப்பட்ட தருணம்

ஒரு புத்தகத்தின் "தருணம்" பற்றி நாம் பேசும்போது, அதன் வரலாற்றுச் சூழலுடன் தொடர்புடைய பல விஷயங்களை நாம் மனதில் வைத்திருப்போம். அதாவது அது தொகுக்கப்பட்ட தேதி, அது தொகுக்கப்பட்ட இடம், வாசகர்களின் இடம் மற்றும் அதன் நோக்கம் போன்ற விஷயங்களை நாம் கருத்தில் கொள்வோம். ஒரு புத்தகம் எப்போது, எங்கு, யாருக்கு, எதற்காக எழுதப்பட்டது என்பதை அறிவது அதன் சூழலைப் பற்றிய பல தகவல்களை நமக்குத் தருகிறது. அதன் வரலாற்று அமைப்பு, அதன் இலக்கணம் மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வார்த்தைகள், அதன் மத மற்றும் சமூக அனுமானங்கள் மற்றும் அதன் சொல்லாட்சி உத்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள இது உதவுகிறது. மேலும், இந்தத் தகவல் புத்தகத்தைப் புரிந்துகொள்ளவும் பயன்பாட்டில் கொண்டு வரவும் உதவுகிறது.

மத்தேயு சுவிசேஷத்தின் சந்தர்ப்பத்தின் மூன்று அம்சங்களை நாம் கருத்தில் கொள்வோம்: முதலில், எழுதப்பட்ட தேதி; இரண்டாவதாக, ஆசிரியர் மற்றும் வாசகர்களின் இருப்பிடம்; மூன்றாவது, மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்ட நோக்கம். மத்தேயு சுவிசேஷத்தின் தேதியைப் பற்றி ஆரம்பிக்கலாம்.

## தேதி

முதலாவதாக, பெரும்பாலான அறிஞர்கள் நம்புவது போல், மத்தேயு ஒருவேளை மாற்கு சுவிசேஷத்தை அவருடைய ஆதாரங்களில் ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கலாம். மாற்கு கி.பி.64 இல் எழுதப்பட்டிருக்கலாம் என்பதை நாம் அடுத்த பாடத்தில் பார்க்கப் போகிறோம். இது சரியாக இருந்தால், மத்தேயு எழுதிய தேதி 60 களின் நடுப்பகுதியிலிருந்து பிற்பகுதி வரை இருக்கலாம்.

இரண்டாவதாக, மத்தேயு இயேசுவின் அப்போஸ்தலனாக இருந்தவர். இயேசுவோடு ஊழியத்தில் ஈடுபட்ட சமயத்தில், அநேகமாக கி.பி.30 க்குள் அவர் ஏற்கனவே வயது வந்தவராக இருந்தார் என்பதே இதன் பொருள். எனவே, மத்தேயு ஒரு அசாதாரணமான நீண்ட வாழ்க்கையை வாழ்ந்தால் மட்டுமே, அவர் எழுதியிருக்கக்கூடிய தேதி முதல் நூற்றாண்டின் இறுதியாக இருக்கும்.

இது மத்தேயு எழுதியிருக்கக்கூடிய பரந்த வரம்பைத் தருகிறது. ஆனால் மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட விவரத்தைக் கவனிப்பதன் மூலம் இந்த வரம்பிற்குள் சாத்தியமான தேதிகளை கண்டுபிடிக்கலாம். குறிப்பாக, மத்தேயு அடிக்கடி தேவாலயத்தையும், தேவாலயத்துடன் நெருங்கிய தொடர்புடைய சதுசேயர்களையும் குறிப்பிடுகிறார். இவற்றில் சில குறிப்புகள் பெரும்பாலும் வரலாற்றுப்பூர்வமானவை, ஆனால் ஒரு சில குறிப்புகள் மத்தேயு எழுதிய காலத்தில் தேவாலயம் மற்றும் சதுசேயர்கள் ஆகிய இரண்டு காரணிகளும் இன்னும் குறிப்பிடத்தக்கவைகளாக இருந்தன என்று கூறுகின்றன. கி.பி.70 இல் தேவாலயம் இடிக்கப்பட்டதால், அதற்கு முன் மத்தேயு எழுதியிருந்தால் இந்தக் குறிப்புகள் மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

அனைத்து ஆதாரங்களின் வெளிச்சத்தில் பார்க்கும்போது, மத்தேயு தனது சுவிசேஷத்தை 60 களின் பிற்பகுதியில், ஒருவேளை கி.பி.67 அல்லது 68 இல் எழுதினார் என்று முடிவு செய்வது சிறந்தது. இந்த விஷயத்தில் உறுதியாக இருக்க முடியாது. ஆனால் அதிர்ஷ்டவசமாக, மத்தேயு எழுதிய தோராயமான காலத்தை அறிவது நமக்கு உதவியாக இருந்தாலும், அவருடைய சுவிசேஷத்தின் துல்லியமான காலம் அவரது போதனைகளின் விளக்கத்தை பாதிக்கப்போவதில்லை.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இப்போது இந்த சுவிசேஷம் எழுதப்பட்ட தேதியைப் பார்த்தோம், ஆசிரியர் மற்றும் வாசகர்களின் இருப்பிடத்தைப் பற்றிப் பார்ப்போம்.

## இடம்

இந்த சுவிசேஷத்தின் இருப்பிடத்தை அறிஞர்கள் விவாதித்துள்ளனர் என்பதைக் குறிப்பிடுவதன் மூலம் நாம் தொடங்க வேண்டும், எனவே நாம் நமது முடிவுகளில் பிடிவாதமாக இருக்கக்கூடாது. இருப்பினும், கவனிக்க வேண்டிய பல விவரங்கள் உள்ளன.

மத்தேயு முதன்மையாக யூத கிறிஸ்தவர்களுக்கு எழுதியதால், அவர் தனது சுவிசேஷத்தை கணிசமான யூத மக்கள்தொகை கொண்ட ஒரு பகுதியில் வாழ்ந்த ஒரு குழுவிடம் உரையாற்றியிருக்க வேண்டும். பாலஸ்தீனம் யூதர்களின் பாரம்பரிய தாயகம் என்பதாலும், அவர்கள் அங்கு குவிந்திருந்ததாலும், அங்கிருந்து இது எழுதப்பட்டிருக்கலாம்.

ஆனால் சிரியாவின் சில பகுதிகளும் கணிசமான யூதர்களைக் கொண்டிருந்தன. சிரியாவிலுள்ள அந்தியோகியாவின் பிஷப்பாக இருந்த இக்னேஷியஸ், மத்தேயுவின் சுவிசேஷத்தை நன்கு அறிந்த சபை பிதாக்களில் முதன்மையானவர் ஆவார். இந்த காரணத்திற்காக, சிரியாவின் அந்தியோகியாவில் உள்ள விசுவாசிகளுக்கு மத்தேயு எழுதியதாக பல அறிஞர்கள் வாதிட்டனர். நிச்சயமாக, மத்திய தரைக்கடல் பகுதி முழுவதிலும் பரவலாக இருந்த யூத கிறிஸ்தவர்களுக்கு பொதுவாக மத்தேயு எழுதினார் என்கிற சாத்தியத்தை நாம் நிராகரிக்க முடியாது. பாலஸ்தீனம், சிரியா அல்லது ரோமப் பேரரசிற்குள் குறிப்பிடத்தக்க யூத மக்கள்தொகை கொண்ட பிற பகுதிகள் மத்தேயு தன் சுவிசேஷம் சென்றடைய வேண்டும் என்று விரும்பின இடங்களாக இருக்கலாம்.

> கி.பி முதல் நூற்றாண்டில், யூத மக்கள் ரோமப் பேரரசின் பெரும்பகுதியைச் சுற்றிலும் பரவியிருந்தனர். மேலும் கிழக்கிலும் பரவியிருந்தனர். இது நீண்ட காலம் பின்னோக்கி செல்கிறது. பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட காலத்திலிருந்தே, பாலஸ்தீனத்திற்கு வெளியே யூதர்கள் வாழ்ந்து வருகின்றனர். மேலும் அவர்கள் தூரத்திலுள்ள கிழக்கில் தொடர்ந்து வாழ்ந்து வந்தனர். அது நவீன ஈராக்கின் மெசொப்பொத்தாமியாவில் உள்ளது. பின்னர் அவர்கள் சிரியாவுக்கும் தமஸ்குவிற்கும் வந்தனர், பின்னர் மேற்கே ஆசியா மைனர், நவீன துருக்கி மற்றும் ரோம் வரை அவர்கள் இருந்தார்கள். ரோமில் உள்ள டைபர் நதி வரை பரவியிருந்தார்கள் . வட ஆப்பிரிக்காவிலும் இருந்தார்கள். சிரேனே ஊரானாகிய சீமோன் வட ஆப்பிரிக்காவிலிருந்து



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எருசலேமுக்கு வந்ததை சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறோம். எனவே, ரோமப் பேரரசின் கிழக்குப் பகுதி முழுவதையும், மேலும் கிழக்கே யூதர்கள் வசிக்கும் இடத்தையும் கற்பனை செய்து பாருங்கள்.
>
> Dr. பீட்டர் வாக்கர்

மத்தேயு சுவிசேஷத்தின் தேதி மற்றும் இடம் இரண்டையும் பற்றி இப்போது நாம் பேசிவிட்டோம், மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்டதன் நோக்கத்தை நாம் பரிசீலிக்கலாம்.

## நோக்கம்

பரவலாகப் பேசினால், இயேசு யார் மற்றும் அவர் என்ன செய்தார் என்பதற்கான உண்மையான வரலாறு விமர்சன ரீதியாக முக்கியமானது. இதுவே மத்தேயுவின் நோக்கமாகும். ஆனால் அவருக்கு குறுகிய, உடனடி இலக்குகளும் இருந்தன. குறிப்பாக, மத்தேயு யூத கிறிஸ்தவர்களுக்கு இயேசுவே தங்கள் மேசியா ராஜா என்ற நம்பிக்கையை வளர்ப்பதற்காக எழுதினார்.

மத்தேயு எழுதிய நேரத்தில், யூத மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய யூதர்கள் யூத அதிகாரிகளாலும், பெரும்பாலும் முன்னாள் நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களாலும் கடுமையாக நிராகரிக்கப்பட்டனர். அன்றைய மத்தியதரைக் கடல் பகுதியில், யூத கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் ஒரு வாழ்க்கை முறையாக மாறியிருந்தது என்பதை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் தெளிவுபடுத்துகிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 8:1 இல் நாம் வாசிக்கிறபடி:

> அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள் (அப் 8:1).

உபத்திரவத்தின் காரணமாக, தங்கள் மேசியாவாக இயேசுவைப் பின்பற்றிய யூதர்கள் நிச்சயமாக தங்கள் முந்தைய வாழ்க்கைக்குத் திரும்பவும் கிறிஸ்தவத்தை கைவிடவும் சோதனையை எதிர்கொண்டனர். இந்த சோதனைக்கு பதிலளிக்கும் விதமாக, பரலோக ராஜ்யத்தை கொண்டு வந்த உண்மையான மேசியா இயேசு என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காக மத்தேயு எழுதினார். அவருடைய சுவிசேஷம் ஊக்கத்தின் கதையாகவும் ஆறுதலின் கதையாகவும் இருந்தது. ஆனால் இது சவாலான கதையாகவும் இருந்தது. ஏனென்றால் அவர்களில் பலர் எதிர்பார்த்தபடி இயேசு ராஜ்யத்தைக்

கொண்டுவரவில்லை, மேலும் ராஜ்யத்தின் கோரிக்கைகள் அதிகமாக இருந்தன.

இந்தச் சூழலில், மேசியா ராஜ்யத்திற்கான பழைய ஏற்பாட்டின் எதிர்பார்ப்புகளை இயேசு நிறைவேற்றத் தொடங்கினார் என்று மத்தேயு தனது வாசகர்களுக்கு உறுதியளித்தார். அதே நேரத்தில், பரலோகராஜ்யம் இன்னும் முழுமையடையவில்லை. எனவே, ராஜாவே எல்லாவற்றையும் சரியாகச் செய்வதற்காக திரும்ப வரும் வரையும் இயேசு தம்முடைய ராஜ்யத்தின் எதிரிகளை அழித்து, விசுவாசமுள்ள மக்களை அவருடைய ராஜ்ய ஆசீர்வாதங்களை முழுமையாக அனுபவிப்பதற்கு வரவேற்கும் வரையும் யூத விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி மத்தேயு அவர்களை ஊக்குவிப்பதற்காக எழுதினார்.

அதனால்தான் மத்தேயு அடிக்கடி பரலோகராஜ்யத்தின் கருப்பொருளைக் குறிப்பிட்டார். உண்மையில், அவர் தனது சுவிசேஷத்தில் ”ராஜா” மற்றும் ”ராஜ்யம்” என்ற வார்த்தைகளை 75 முறைக்கு மேல் பயன்படுத்தினார். மற்ற மூன்று சுவிசேஷ எழுத்தாளர்களும் சேர்ந்து 110 முறைக்கும் குறைவாகவே அவற்றைப் பயன்படுத்தினர். மத்தேயுவைப் பொறுத்தவரை, அவரது யூத பார்வையாளர்களை ஊக்குவிக்கவும் சவால் செய்யவும் சிறந்த வழி, அவர்களின் மேசியா ராஜா மற்றும் அவரது ராஜ்யத்தின் கதையைச் சொல்வதுதான்.

> மத்தேயு சுவிசேஷத்தில் பரலோக ராஜ்யத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைக் காண்கிறோம். இயேசு தான் உரிமையுள்ள வாரிசு என்பதையும் தாவீதின் வழியிலான ராஜா என்பதையும் காட்டும் நோக்கத்துடன் மத்தேயு தனது சுவிசேஷத்தை இயேசுவின் வம்சவரலாறுடன் தொடங்குகிறார். இந்த தாவீதின் ராஜாவே நாசரேத்தின் இயேசு ஆவார். அவரது அசல் வாசகர்கள், முதன்மையாக யூதர்கள் என்று நாம் நம்புகிறோம், மேலும் இந்த புத்தகம் ஜனங்களிடம், ”இதோ உங்கள் ராஜா” என்று கூறுகிறது. மேலும் அவர் இந்த சுவிசேஷத்தில் ”பரலோக ராஜ்யம்” என்பது அனைத்து மக்கள் மற்றும் அனைத்து கோளங்கள் மீதும் கிறிஸ்து ஆட்சி செய்கிறார் என்பதைக் குறிக்கிறது என்பதை அவர் நிரூபிக்கும்போது, பரலோக ராஜ்யத்தை அதன் உறுதியான வெளிப்பாட்டில் வலியுறுத்துகிறார். இது அதிகாரம் பற்றிய கேள்வியாகும். பரிசேயர்களும் சதுசேயர்களும் இயேசுவிடம், “எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறீர்?” என்று எப்போதும் கேட்டார்கள். “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது” என்று இயேசு சொன்ன

> வார்த்தைகளுடன் சுவிசேஷம் முடிகிறது. இந்த ராஜ்ய யோசனை, மக்கள் எதிர்பார்த்த மற்றும் எதிர்பார்க்கும் தேசியவாத, தாவீது ராஜாவின் ராஜ்யத்தை விட மேலான ஒன்றாகும். சிருஷ்டிப்பின் ஒவ்வொரு சதுர அங்குலத்தின் மீதும் கிறிஸ்து ராஜாவாக இருக்கிறார் என்று மத்தேயு கூறும் கூற்று இதுவாகும்.
>
> Dr. ஜிம் மாப்பில்ஸ்

இப்போது நாம் மத்தேயு சுவிசேஷத்தின் பின்னணியைப் படித்தோம், இப்போது இந்த புத்தகத்தின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தைப் பற்றிப் பார்ப்போம்.

# அமைப்பு மற்றும் உள்ளடக்கம்

மத்தேயு சுவிசேஷத்தின் கட்டமைப்பின் சில அம்சங்களைப் பற்றி அறிஞர்களிடையே கணிசமான உடன்பாடு உள்ளது. மத்தேயு நமக்கு மிகவும் உதவிகரமான திறவுகோலை வழங்கியதன் காரணமாக இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. ஐந்து வெவ்வேறு இடங்களில், சுவிசேஷத்தில் நடக்கிற முக்கிய மாற்றங்களைக் குறிக்க, ”இயேசு இவைகளைச் சொல்லி முடித்தபோது…” போன்ற ஒரு சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். சில நேரங்களில் இது போன்ற ஒரு அறிக்கை ஒரு பிரிவின் கடைசி வாக்கியமாக தோன்றுகிறது, மற்ற நேரங்களில் இது ஒரு புதிய பிரிவின் முதல் வாக்கியமாக இருக்கும். ஆனால் அது எப்போதும் ஒரு பெரிய மாற்றத்தைக் குறிக்கிறது.

இந்த கட்டமைப்பு குறிப்பான்களைப் பின்பற்றி, மத்தேயு சுவிசேஷம் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதை பெரும்பாலான அறிஞர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். மத்தேயு 7:28; 11:1; 13:53; 19:1 மற்றும் 26:1 இல் உள்ள இடைமாறுதல் அறிக்கைகளால் ஐந்து முக்கிய பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மத்தேயு ஒரு அறிமுகக் கதையையும், ஒரு முடிவுரையையும் சேர்த்தார்.

மத்தேயு 1:1-2:23 இல் இயேசுவை மேசியா ராஜாவாக முன்வைக்கும் ஒரு கதை அறிமுகத்துடன் இந்த சுவிசேஷமானது தொடங்குகிறது.

முதல் பெரிய பிரிவு மத்தேயு 3:1–7:29 இல் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை விவரிக்கிறது.

இரண்டாவது பெரிய பிரிவு மத்தேயு 8:1–11:1 இல் ராஜ்யத்தின் பரவலை மையமாகக் கொண்டுள்ளது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மூன்றாவது பெரிய பிரிவு மத்தேயு 11:2–13:53 இல் ராஜ்யத்தின் அடையாளங்களையும் உவமைகளையும் பதிவு செய்கிறது.

மத்தேயு சுவிசேஷத்தின் நான்காவது பெரிய பிரிவு 13:54 இல் தொடங்கி 18:35 வரை விசுவாசம் மற்றும் மகத்துவத்தின் மீது கவனம் செலுத்துகிறது.

மத்தேயு 19:1–25:46 இல் ராஜ்யத்திற்கு இருக்கக்கூடிய தற்போதைய எதிர்ப்பு மற்றும் ராஜ்யத்தின் எதிர்கால வெற்றியின் மீது ஐந்தாவது மற்றும் கடைசி பெரிய பிரிவு கவனம் செலுத்துகிறது.

இறுதியாக, மத்தேயு 26:1–28:20 இல் ராஜாவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை விவரிக்கும் ஒரு முடிவுரை உள்ளது.

மத்தேயு சுவிசேஷத்தின் இந்தப் பகுதிகள் ஒவ்வொன்றும் பரலோக ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டு வந்த மேசியா ராஜாவான இயேசுவின் கதையை மேலும் விரிவுபடுத்துகின்றன. மத்தேயு 1:1–2:23 இல் உள்ள அறிமுகத்தில் தொடங்கி, இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனிப்போம்.

## முன்னுரை: மேசியா ராஜா

மத்தேயு சுவிசேஷத்தின் அறிமுகம் இயேசுவை மேசியா ராஜாவாக நமக்கு அறிமுகப்படுத்துகிறது, மேலும் இது இரண்டு பிரிவுகளால் ஆனது, அவையாவன: வம்சவரலாறு மற்றும் குழந்தை பருவ கதை.

### வம்சவரலாறு

மத்தேயு 1:1-17 இல் வம்சவரலாறு காணப்படுகிறது. தொழில்நுட்ப ரீதியாக, முதல் வசனம் உண்மையில் ஒரு அறிமுகம் அல்லது தலைப்பாகும். இதில் மத்தேயு தனது முக்கிய கருத்தை சுருக்கமாகக் கூறினார், அதாவது இயேசு இஸ்ரவேலின் மேசியா ராஜா என்று கூறினார். மத்தேயு 1:1 பின்வருமாறு கூறுகிறது:

> ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு (மத்தேயு 1:1).

ஆரம்பத்திலிருந்தே, மத்தேயு இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதுக்கும், யூத மக்களின் பிதாவான ஆபிரகாமுக்கும் விசேஷ முக்கியத்துவம் கொடுத்தார்.

இந்த அறிமுக அறிக்கையைத் தொடர்ந்து, வம்சவரலாறு வசனம் 2 இல் தொடங்குகிறது. மத்தேயு 1:17 இன் படி, வம்சவரலாறு மூன்று பிரிவுகளாக அமைக்கப்பட்டிருக்கிறது, ஒவ்வொன்றும் பதினான்கு தலைமுறைகளைக் கொண்டுள்ளது. முதலாவது ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையுடன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தொடங்கியது, அதில் ஆபிரகாமுக்கு தனது சந்ததியினர் உலகை ஆளுவார்கள் என்று வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டது.

தாவீதின் வம்சத்தை என்றென்றும் ஸ்தாபிப்பதன் மூலம் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதாக தேவன் செய்த வாக்குத்தத்தத்தைப் பற்றியும் தாவீது ராஜாவைப் பற்றியும் இரண்டாவது பகுதி பேசத் தொடங்குகிறது. தேவனுடைய மக்கள் தங்கள் பாவம் மற்றும் உடன்படிக்கை மீறல் காரணமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து நாடு கடத்தப்படுவதோடு இந்த இரண்டாவது பகுதி முடிவடைகிறது.

வம்சவரலாற்றின் மூன்றாவது பகுதி நாடுகடத்தப்பட்டதிலிருந்து இயேசுவின் பிறப்பு வரையிலான காரியங்களை உள்ளடக்கியுள்ளது. இஸ்ரவேல் தேவனின் உடன்படிக்கையை மீறி, அவருடைய உடன்படிக்கையின் சாபங்களுக்கு ஆளானது. ஆனால் தேவன் ஆபிரகாமுக்கும் தாவீதிற்கும் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதன் மூலம் இஸ்ரவேலை ஆசீர்வதிக்க எண்ணினார். இஸ்ரவேலில் இருந்த கடந்தகால ராஜாக்கள் தோல்வியடைந்தனர். ஆனால் இப்போது இஸ்ரவேலின் கடைசி ராஜாவும் இஸ்ரவேலின் முடிவை நிறைவேற்றுபவருமாகிய ஒருவர் இறுதியாக வந்து விட்டார். இயேசுவினுடைய முன்னோர்களின் பட்டியல் மத்தேயு 1:16 இல் முடிவடைகிறது, அங்கு நாம் இந்த வார்த்தைகளைப் வாசிக்கிறோம்:

> யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான்; அவளிடத்தில் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்தார் (மத்தேயு 1:16).

தனது தகப்பனான யோசேப்பு மூலம் தாவீதின் சிங்காசனத்தில் அமர இயேசுவுக்கு முழுமையாக சட்டப்பூர்வ உரிமை உண்டு என்பதை மத்தேயு இவ்விதமாக நிரூபித்தார்.

> தீர்க்கதரிசன வெளிப்பாட்டின் காரணமாக மேசியா தாவீதின் வழித்தோன்றலாக இருக்க வேண்டும், ஏனெனில் அது ஏற்கனவே கணிக்கப்பட்டது. அது ஆதியாகமம் வரை செல்கிறது. தாவீதுக்குப் பின்வந்த ஒவ்வொரு ராஜாவும் அவருடன் ஒப்பிடப்பட்டு மதிப்பிடப்பட்டார்கள். பின்னர், தாவீதுடன் செய்துகொண்ட உடன்படிக்கையும் நமக்கு உள்ளது. தாவீது தீர்க்கதரிசியான நாத்தானிடம் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட முன்வந்தபோது, நாத்தான் திரும்பி வந்து, “நீர் கர்த்தருக்கு ஒரு வீட்டைக் கட்டப் போவதில்லை; கர்த்தர் உமக்காக ஒரு வீட்டைக் கட்டப் போகிறார்” என்றார். வீடு என்று வம்சத்தைக் குறிப்பிடுகிறார். இது 2 சாமுவேல் 7 இல் உள்ளது, தேவன் அவருக்கு ஒரு வீட்டைக் கட்டுவார்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவருடைய ராஜ்யத்தை என்றென்றும் நிலைநிறுத்துவார், அவருடைய சந்ததி தாவீதின் சிங்காசனத்தில் என்றென்றும் ஆட்சி செய்யும் என்ற தீர்க்கதரிசனம், அதைத் தொடர்ந்து வந்த மேசியா குறித்த தீர்க்கதரிசனங்களுக்கு அடித்தளமாக அமைந்தது. எனவே, சரிவுக்குப் பிறகு தாவீதின் வம்சத்தைக் குறித்து தீர்க்கதரிசிகள் தாவீதினுடைய வம்சத்தின் மகிமையை தேவன் மீட்டெடுப்பார் என்ற நம்பிக்கையை எதிர்நோக்கினார்கள். தாவீதின் வம்சத்தின் வழியாக தேவன் ஒரு ராஜாவை எழுப்புவார் என்று கூறப்பட்டது. எனவே, மேசியாவாகிய ராஜா தாவீதின் வழியே வர வேண்டியிருந்தது.
>
> Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

இயேசுவின் வம்சவரலாறைப் பின்பற்றி, அவருடைய குழந்தைப் பருவக் கதையை நாம் காண்கிறோம்.

## குழந்தைப் பருவக் கதை

இயேசுவின் குழந்தைப் பருவக் கதை மத்தேயு 1:18–2:23 வரை செல்கிறது. லூக்காவின் சுவிசேஷத்தில் உள்ள 116 வசனங்களுடன் ஒப்பிடுகையில், இந்தப் பகுதி மிகவும் சுருக்கமானது, 31 வசனங்கள் மட்டுமே உள்ளன. இந்த பிரிவில், மத்தேயுவின் நோக்கம் மிகச் சிறிய வரையறைக்குள் இருக்கிறது. ஐந்து குறுகிய பகுதிகளில் உள்ள ஒவ்வொன்றும் 'மேசியாவாகிய இயேசு பிறந்தார்' என்கிற ஒரு மைய உண்மையின் மீது கவனம் செலுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஒரு சுருக்கமான கதையைச் சொல்கிறது, பின்னர் அந்தக் கதை மேசியாவுக்கான பழைய ஏற்பாட்டு எதிர்பார்ப்புகளை எவ்வாறு பூர்த்தி செய்கிறது என்பதை விளக்குகிறது.

இயேசுவின் குழந்தைப் பருவக் கதையில் நாம் கற்றுக் கொள்ளும் மிகவும் சுவாரஸ்யமான விஷயங்களில் ஒன்று, அவருக்கு மனிதத் தகப்பன் இல்லை என்பதுதான். மாறாக, தேவன் தாம் அவரின் பிதாவாக இருந்தார். பரிசுத்த ஆவியானவர் மரியாள் கன்னியாக இருந்தபோதிலும் இயேசு அவளின் கருவில் குழந்தையாக உருவாகச் செய்தார்.

இப்போது, கிறிஸ்தவத்திற்கு எதிரான சில விமர்சகர்கள், இது இயேசுவின் வம்சவரலாற்றில் உள்ள பலவீனம் என்று கருத்து தெரிவித்துள்ளனர், ஏனெனில் அவர் உடல் ரீதியாக யோசேப்பின் வழித்தோன்றல் அல்ல, அவர் மூலம் தாவீதின் சிங்காசனத்திற்கு உரிமைகோர முடியாது என்றனர். ஆனால் 1 நாளாகமம் 1-9 இல் உள்ளதைப் போன்ற வேதாகம வம்சவரலாறுகள் பெரும்பாலும் தத்தெடுக்கப்பட்ட பெற்றோர் மூலம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முன்னோர்களை அடையாளம் காட்டுகின்றன என்பது நன்கு அறியப்பட்ட உண்மையாகும்.

மேலும், இயேசு தேவனுடைய குமாரனாக இருந்ததால், அவர் முழு தெய்வீகமானவராகவும் இருந்தார். தேவனுடைய உடன்படிக்கையை அவரால் முழுமையாகக் கடைப்பிடிக்க முடிந்தது என்பதை இது அர்த்தப்படுத்துகிறது. மனித ராஜாக்கள் தேவனுடைய உடன்படிக்கைக்கு ஒருபோதும் முழுமையாகக் கீழ்ப்படிந்ததில்லை. எனவே, ஆபிரகாமுக்கும் தாவீதுக்கும் தேவன் வாக்குத்தத்தம் செய்த முழு உடன்படிக்கை ஆசீர்வாதங்களையும் அவர்களால் ஒருபோதும் பெற முடியவில்லை. ஆகவே, தேவன் தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக, அவருடைய பரிபூரண குமாரனை ராஜாவாக அனுப்பினார், அதனால் அவருடைய ஆசீர்வாதங்கள் நிறைவேறும்.

> மனிதனாக தாவீதின் வழியே மேசியா வருகிறார் என்பது தெளிவாகிறது. மேலும் இதில் பல முக்கியமான சத்தியங்கள் உள்ளன. ஆனால் மேசியாவும் தேவனாக இருக்க வேண்டும், தெய்வீகமாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்வதும் முக்கியம். ஏன் அப்படி? இறுதியில், நாம் அவருக்கு எதிராக பாவம் செய்தோம் என்பதே தேவனுக்கு முன்பாக மனிதர்களாகிய நம் பிரச்சனையாகும். அவர் பதில் அளிக்க வேண்டும். அவரே தீர்வு கொடுக்க வேண்டும். நாம் சில சமயங்களில் பேச விரும்பும் மன்னிப்பைக் குறித்த சிக்கல் என்னவென்றால், தேவனுக்கு முன்பாக நாம் செய்யும் பாவத்தை அவர் கவனிக்காமல் விடுவதில்லை. "எப்படியும் தேர்வில் நீங்கள் வெற்றி அடைவீர்கள்" அல்லது "நீங்கள் உங்களால் முடிந்ததைச் செய்தால் போதும்" என்று அவர் கூறுவதில்லை. தேவன் ஒரு பரிசுத்தர். தேவன் நீதியுள்ளவரும் நியாயமுள்ளவருமாயிருக்கிறார். நம்முடைய பாவத்தை அவர் கண்டுகொள்ளாமல் விட முடியாது. அது அவர் அவரையே மறுதலிப்பதாக இருக்கும். எனவே, நம்மை மன்னிக்க, அவர் தான் முன்முயற்சி எடுக்க வேண்டும். அவரே தனது நீதியான நிபந்தனைகளுக்கான தீர்வை திருப்தியுடன் இறுதியில் வழங்க வேண்டும். தேவனே அதை செய்ய வேண்டும். நீங்கள் பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது, இது மீண்டும் மீண்டும் வருகிறது. யோனா 2:9 யைக் கவனிப்போம்: "இரட்சிப்பு கர்த்தருடையது." தேவன் தான் வழங்க வேண்டும். தேவன் தான் தீர்வை வழங்க வேண்டும். தேவன் தான் மன்னிக்க வேண்டும். எனவே மேசியா மூலம் இரட்சிப்பு ஏற்படப் போகிறது என்றால், அவர்

> நம்மை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அதாவது மனிதனாக அவர் இருக்க வேண்டும். ஆனாலும், அவரும் கர்த்தராக இருக்க வேண்டும். அவரே வருகிற கர்த்தராக இருக்க வேண்டும். அவரே இரட்சிக்கிற கர்த்தராக இருக்க வேண்டும். அவருடைய பரிசுத்தத்தையும் நீதியையும் திருப்திப்படுத்தும் கர்த்தராக அவர் இருக்க வேண்டும், அதனால்தான் மேசியா தெய்வீகமாக இருக்க வேண்டியது அவசியப்பட்டது.
>
> Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

மத்தேயு தனது சுவிசேஷத்தின் முன்னுரையில், ஆபிரகாமுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் தேவன் வாக்குத்தத்தம் செய்த அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்ற தாவீதின் ராஜ குமாரனாகிய இயேசுவை மேசியா ராஜாவாக முன்வைத்தார். இந்த வழியில், மத்தேயு தனது புத்தகத்தின் மீதமுள்ள விஷயமான அற்புதமான சுவிசேஷத்திற்கு மேடை அமைத்தார்.

அறிமுகத்தைத் தொடர்ந்து இந்த சுவிசேஷத்தில் ஐந்து முக்கிய இலக்கியப் பிரிவுகள் உள்ளன. இந்த ஐந்து பிரிவுகளில் ஒவ்வொன்றும் இரண்டு பகுதிகளைக் கொண்டது: இயேசு என்ன செய்தார் என்பதை மத்தேயு விவரித்த ஒரு கதைப் பகுதி, அதைத் தொடர்ந்து ஒரு சொற்பொழிவுப் பகுதி, அதில் மத்தேயு இயேசு சொன்னதைத் தெரிவித்தார்.

## ராஜ்யத்தின் சுவிசேஷம்

மத்தேயு சுவிசேஷத்தின் முதல் பெரிய பிரிவு பரலோகராஜ்யத்தின் சுவிசேஷத்தின் கதையைச் சொல்கிறது. இந்த பகுதி மத்தேயு 3:1–7:29 வரை நீண்டுள்ளது.

### மேசியா வந்து விட்டார்.

கதை பகுதி மத்தேயு 3:1 இல் தொடங்கி 4:25 இல் முடிவடைகிறது. இங்கே, மத்தேயு, மேசியா ராஜா வந்திருப்பதாகவும், அவர் பரலோக ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டு வந்ததாகவும் அறிவித்தார்.

கதையின் முதல் பகுதி மத்தேயு 3: 1-12 ஆகும், அங்கு தேவனுடைய மேசியா விரைவில் வந்து தனது உண்மையான மக்களுக்கு பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான் ஸ்நானகன் அறிவித்தார். 400 ஆண்டுகளாக, பரிசுத்த ஆவியானவர் இஸ்ரவேலில் செயல்படாமல் இருந்தார், ஏனெனில் வழி தவறிய அவருடைய மக்களுக்கு தேவன் கொடுத்த நியாயத்தீர்ப்பாக அது இருந்தது. ஆனால் இப்போது, பழைய ஏற்பாட்டு

தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தபடி, தேவனின் ஆவி ஊற்றப்படும் ஒரு புதிய நாள் இன்னும் வராமலிருந்தது.

மத்தேயு 3:13-17 இல் இயேசுவின் ஞானஸ்நானத்துடன் கதை தொடர்கிறது. இந்த நிகழ்வில், பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மீது இறங்கி, அவருடைய மேசியா ஊழியத்திற்காக அவரை அபிஷேகம் செய்தார், மேலும் பிதா பரலோகத்திலிருந்து, ”இவர் என் நேச குமாரன்” என்று அறிவித்தார், சங்கீதம் 2:7 இல் இருந்து ராஜ பட்டத்தை இயேசுவுக்குப் பயன்படுத்தினார்.

”நான் ஆதரிக்கிற என் தாசன்; என் ஆத்துமாவுக்குப் பிரியமானவர்” என்று தேவனுடைய குரல் ஏசாயா 42:1-2 இன் பாடுபடும் ஊழியராகிய இயேசுவைக் குறிப்பிட்டது. இயேசு ராஜ மேசியாவாக இருந்தார், ஆனால் அவர் வேறு வகையான ராஜாவாக இருப்பார். அவர் தனது அழைப்பை பாடுகளின் மூலம் நிறைவேற்றுவார்.

மத்தேயு 4:1-11 இல் காணப்படும் அடுத்த கதையில், துன்புறுத்தப்பட்ட மேசியா ராஜா இந்த பாத்திரத்தில் வந்ததன் அர்ப்பணிப்பை சாத்தான் சவால் செய்தான். பாடுகள் இல்லாமல் ஒரு மேசியாவாக இருக்க இயேசுவை மூன்று முறை அவன் சோதித்தான், முக்கியமாக, “ஒரு மனிதனைப் போல பசியுடன் இருக்காதேயும். பாடுகள் இல்லாமல் ஜனங்களை விசுவாசிக்க வைத்து ஆச்சரியப்படுத்தும். தேசங்களை பாடுகளின்றி ஆளும்” என்றான். ஆனால் ஒவ்வொரு முறையும் இயேசு தனது பாடு நிறைந்த மேசியாவின் தன்மையை மறுக்கும் எளிதான பாதையை நிராகரித்தார்.

பின்னர் மத்தேயு 4:12-17 இல், இயேசுவானவர் ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் தனது பொது மேசியா பணியைத் தொடங்கினார். மத்தேயு 4:17ல் இயேசுவின் செய்தியை மத்தேயு எவ்வாறு சுருக்கமாகக் கூறினார் என்பதைக் கவனியுங்கள்:

> அதுமுதல் இயேசு: ”மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது” என்று பிரசங்கிக்கத் தொடங்கினார் (மத்தேயு 4:17).

மத்தேயுவின் கூற்றுப்படி, இயேசு பிரசங்கித்த நற்செய்தி என்னவென்றால், பரலோகராஜ்யம் சமீபமாயிருந்தது என்பதே. அவருடைய சொந்த ஊழியத்தின் மூலம், இயேசு பரலோகராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவரவிருந்தார். மேலும் இந்த ராஜ்யம் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுவை ராஜாவாக உண்மையுடன் பின்பற்றும் அனைவருக்குமானது.

> ”பரலோக ராஜ்யம்” என்பது மத்தேயுவின் சுவிசேஷத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது, மேலும் மத்தேயுவின் சுவிசேஷத்தில் மட்டுமே உள்ளது, ”தேவனுடைய ராஜ்யத்திற்கு” ஒத்ததாக இதை நான் நினைக்கிறேன். அவை

இரண்டுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இல்லை என்று கூறும் பெரும்பாலான அறிஞர்களுடன் நான் உடன்படுவேன். இது அருகில் இருப்பதாக இயேசுவால் விவரிக்கப்பட்டுள்ளது அல்லது சில மொழிபெயர்ப்புகள் ”சமீபமாயிருக்கிறது” என்று கூறுகின்றன, தேவனின் இறுதி கால ஆட்சி இயேசுவாகிய நபரிலும் அவரின் வேலையிலும் ஏற்கனவே வந்துள்ளது என்பதை இது குறிக்கிறது. ஆனால் அது அதன் முடிவுக்காக காத்திருக்கும் உணர்வு அங்கே இருக்கிறது. தொழில்நுட்ப சொல் ”நிறைவு” என்பதாகும், இது கிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் நிகழும், தொழில்நுட்ப ரீதியில் சொன்னால், கிறிஸ்தவர்கள் மாறாக இயங்கியல் இருப்பில் வாழ்கின்றனர். தேவனுடைய இறுதி நேர ராஜ்யத்தில் அவர்கள் தங்களுடைய ஒரு காலை வைத்துள்ளனர், ஆனால் தேவனுடைய இறுதி நேர ராஜ்யத்தில் அவர்களின் இன்னொரு கால் இல்லை. கிறிஸ்தவ சீஷத்துவத்தின் ஒரு பெரிய சவாலானது வாழ்க்கை மற்றும் வாழ்க்கை முடிவுகள் மற்றும் வாழ்க்கையைப் பற்றி நாம் எப்படி நினைக்கிறோம், பரலோக ராஜ்யம் ஏதோ ஒரு வகையில் ஏற்கனவே இங்கே உள்ளது மற்றும் மறுபுறம் இன்னும் முழுமையாக வரவில்லை என்பவைகளின் அடிப்படையில் உள்ளது.

Dr. டேவிட் ஆர். பாவுர்

இயேசு சுவிசேஷங்களில் கிராமம் கிராமமாகச் சென்றபோது, “மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது,” அல்லது “சமீபத்தில் இருக்கிறது” என்று பிரசங்கித்துக்கொண்டிருந்த போது அவர் இரண்டு விஷயங்களைக் கூறினார். முதலாவதாக, தேவனுடைய ராஜ்யம் அவருக்குள் இருந்தது, அவர்கள் நடுவில் இருந்தது என்று அவர் சொன்னார். பிசாசுகளைத் துரத்துவதன் மூலமும், பிசாசுகளின் மீது அதிகாரம் செலுத்துவதன் மூலமும், மேலும் அவருடைய சொஸ்தமாக்கும் ஊழியத்தின் மூலமாகவும் அவர் தனது அதிகாரபூர்வமான போதனையின் மூலமும் தன்னை வெளிப்படுத்தினார். எனவே, ராஜாவின் ராஜ்யமும் அதிகாரமும் என்னிடத்தில், அதாவது இங்கே உங்கள் நடுவில் இருக்கிறது என்பதே இயேசு சொன்ன முதல் விஷயம் ஆகும். ஆனால் அவர் சொல்லிக் கொண்டிருந்த இன்னொரு விஷயம் ராஜ்யம் வரப்போகிறது; ராஜ்யம் இன்னும் முழுமையாக வரவில்லை, ஆனால் எதிர்காலத்தில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஒரு வேளையில் தேவனுடைய ஆட்சியின் முழுமை அனைவருக்கும் தெரியும். ஆகவே, “தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது” என்று இயேசு சொன்னபோது அதைப் பற்றியே பேசினார். ஆகவே, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருந்ததால் மனந்திரும்பும்படி மக்களை அழைப்பதன் மூலம், அவர் அவர்களை ராஜாவுக்கு அடிபணியுமாறு அழைப்பு விடுத்தார், அவர்கள் கீழ்ப்படிவதன் மூலமும், உண்மையில் ராஜாவைப் பின்பற்றுவதன் மூலமும் அவர்கள் தேவனுடைய உடன்படிக்கை ஜனங்களாக மீண்டும் இணைக்கப்பட்டனர். எனவே, மனந்திரும்புதல் ராஜாவுக்கு அடிபணிவதை குறிக்கிறது.
>
> Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

மத்தேயு 4:18-22 இல், இயேசு தம் சீஷர்களை அழைத்தார். மேசியா ராஜா தனது ராஜ்யத்தின் தலைவர்களை நியமிப்பதன் ஒப்பனை தான் இது. இதைத் தொடர்ந்து, மத்தேயு 4:23-25 இல், மத்தேயு சுவிசேஷத்தின் அடுத்த இரண்டு பகுதிகளுக்கு முன்னோட்டம் கொடுத்தார். இயேசு கலிலேயா முழுவதும் பயணம் செய்து மக்களுக்குக் கற்பித்தும் அவர்களை குணப்படுத்தியும் வந்ததாக அவர் அறிவித்தார். மத்தேயு 5-7 இயேசுவின் போதனைகளை விளக்குகிறது, அதே சமயம் 8-9 அதிகாரங்கள் அவர் குணமாக்குவதை விளக்குகின்றன.

இப்போது நாம் ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பற்றிய மத்தேயுவின் கதையைப் பார்த்தோம், மத்தேயு 5:1-7:29 இல் தோன்றும் அதனுடன் கூடிய சொற்பொழிவுக்கு வருவோம்.

## மலைப் பிரசங்கம்

இந்த சொற்பொழிவு பொதுவாக மலைப்பிரசங்கம் என்று அழைக்கப்படுகிறது. இந்த போதனையில், ராஜ்யத்தினுடைய குடிமக்களின் நீதியான வாழ்க்கையை இயேசு விவரித்தார். அவர் ராஜ்யத்தை ஏழு முறை வெளிப்படையாகக் குறிப்பிட்டார், முழு பிரசங்கமும் இந்த கருப்பொருளைச் சுற்றியே உள்ளது.

யூத மதத்தின் தலைவர்கள் கற்பனை செய்ததை விட நீதியின் சவால்கள் மிகப் பெரியவை என்று எப்பொழுதும் இயேசு வலியுறுத்தினார். ராஜ்யத்தின் குடிமக்களின் பரலோக பிதா அவர்கள் நினைத்ததை விட நெருக்கமாகவும் ஆசீர்வதிக்கத் தயாராகவும் இருப்பதாகவும் அவர் வலியுறுத்தினார். இந்த இரட்டை எண்ணங்களின் கலவையே பிரசங்கத்திற்கு அதன் தனித்துவமான தன்மையை அளிக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மலைப்பிரசங்கத்திலிருந்து ஒரு உதாரணத்தை மட்டும் கவனியுங்கள்: விபச்சாரம் பற்றிய இயேசுவின் போதனை. தேவனுடைய பிரமாணம் நாம் மேலோட்டமாக வாசிப்பதைக் காட்டிலும் அதிகமாக நம்மிடம் எதிர்பார்க்கிறது என்று இயேசு கற்பித்தார், மேலும் யூத ஆசிரியர்கள் பொதுவாகக் கற்பிப்பதை விட அதிகமாக இது எதிர்பார்க்கிறது. மத்தேயு 5:27-28 இல் இயேசு சொன்னதைக் கவனியுங்கள்:

> ”விபசாரஞ் செய்யாதிருப்பாயாக” என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று (மத்தேயு 5:27-28).

”சொல்லப்பட்டதை” இயேசு குறிப்பிடுகையில், அன்றைய யூத ரபீக்கள் போதித்த வேதாகமத்தின் பொதுவான விளக்கங்களைப் பற்றி பேசினார். பழைய ஏற்பாட்டு கட்டளைகள் விபச்சாரத்தை தடை செய்தன என்று சில ரபீக்கள் கற்பித்தனர், ஆனால் அவர்கள் மனித இருதயத்தின் மிக அடிப்படையான பிரச்சனையைப் பற்றிப் பேச தவறிவிட்டனர். ஆனால் பழைய ஏற்பாட்டின் நாட்களில் கூட உண்மையாக இருந்த ஒன்றை இயேசு சுட்டிக்காட்டினார்: தேவன் வெளிப்புற நடத்தையை கட்டுப்படுத்துவதில் மட்டும் ஆர்வம் காட்டவில்லை; கீழ்ப்படிதல் இருதயத்தில் தொடங்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

> சில சமயங்களில் பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையே இருக்கிற வித்தியாசத்தை நாம் அறிய வேண்டும் என்று நான் நினைக்கிறேன், பழைய ஏற்பாட்டில் தேவனுக்கு இந்த வெளிப்புற அடையாளங்கள் தேவைப்பட்டது: அவருடைய ஜனங்கள் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்றார், அவர் பலியை விரும்பினார், அவர்கள் விசேஷித்த நாட்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அது ஒரு வகையான வெளிப்புற மத வெளிப்பாடு. பின்னர் புதிய ஏற்பாட்டில் இது இப்போது இருதயத்தின் மதமாக உள்ளது. தேவன் நம் இருதயங்களை விரும்புகிறார்; அவர் நம் அன்பை விரும்புகிறார். ஆனால் பழைய ஏற்பாட்டில், குறிப்பாக தீர்க்கதரிசன புத்தகங்களில் உள்ள விஷயங்களை ஒருவர் உன்னிப்பாகப் பார்க்கத் தொடங்கும் போது அது செயல்படாது என்று நான் நினைக்கவில்லை. உதாரணமாக, ”உங்கள் இருதயங்களை கிழித்துக்கொள்ளுங்கள், உங்கள் ஆடைகளை அல்ல” என்று யோவேல் தீர்க்கதரிசி கூறுகிறார். இது ஒரு வெளிப்புற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மதத்திற்கு எதிரான நேரடி அறிக்கையாகும், அங்கு தேவன் அவர்களின் வெளிப்புற வெளிப்பாடுகளை விரும்பவில்லை, ஆனால் அவர் அவர்களின் இருதயங்களை விரும்பினார். அவர் அவர்களுக்குள் உள்ளதை விரும்பினார், ஏனென்றால் அதுவே அவர்களை அவர்களாக ஆக்கியது. உதாரணமாக, சங்கீதம் 103 இல் இதையும் நீங்கள் பார்க்கிறீர்கள். “என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.” அதாவது, இங்கே சங்கீதக்காரன் தேவனுடைய மக்களை அவரை ஸ்தோத்தரிக்கும்படி அழைக்கிறார், அவர்களை அவர்களாக ஆக்கும் எல்லாவற்றையும் கொண்டு கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்கிறார். எனவே, பாசங்கள் என்பது புதிய ஏற்பாட்டில் உள்ள ஒன்று மற்றும் இருதயப்பூர்வமான மதம் பழைய ஏற்பாட்டில் இல்லை என்ற இந்த வகையான கருத்து, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய உடன்படிக்கையின் ஈடுபாட்டின் முழு யதார்த்தத்திற்கு நியாயம் செய்யாது.
>
> Dr. மார்க் கிக்னில்லியட்

இருதயப்பூர்வமான கீழ்ப்படிதலுக்கான இயேசுவின் முக்கியத்துவம், ராஜ்யத்தின் குடிமக்களை 5:5 இல் ”சாந்தகுணமுள்ளவர்கள்” என்றும், 5:6 இல் ”நீதியின் மீது பசி தாகமுள்ளவர்கள்” என்றும், 5:8 இல் ”இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்” என்றும் விவரிக்க வழிவகுத்தது. இப்போது, நிச்சயமாக, பரலோக ராஜ்யம் அதன் முழுமையில் வரும் வரை தம்மைப் பின்பற்றுபவர்கள் இந்த வகையான குடிமக்களாக முற்றிலும் மாற்றப்பட மாட்டார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆனால் அதற்கு முன் அவர்களை நீதிமான்களாக இருக்கும்படி அவர் இன்னும் அறிவுறுத்தினார். மத்தேயு 5:48 இல் இயேசு சொன்னதைக் கவனியுங்கள்:

> ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் (மத்தேயு 5:48).

ஒரு வகையில், இந்த கட்டளையை நிறைவேற்றுவது சாத்தியமற்றது. ஏனெனில் தேவனைப் போல யாரும் பரிபூரணராக இருக்க முடியாது. ஆனால் அது நம்மை மனக்கசப்புக்கு நேராக கொண்டு செல்லக்கூடாது. மாறாக, இயேசு நமக்கு ஒரு கிருபையான, ஊக்கமளிக்கும் வாக்குத்தத்தத்தையும் கொடுத்தார். அவருடைய பிரசங்கம் முழுவதும், ராஜ்யம் ஏற்கனவே நமக்குச் சொந்தமானது என்று அவர் தம்முடைய உண்மையுள்ள சீஷர்களுக்கு உறுதியளித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உதாரணமாக, மத்தேயு 5:3-10 இல் எட்டு ஆசீர்வாதங்களைக் காண்கிறோம். பரலோகராஜ்யம் அதன் முழுமையுடன் வரும்போது எதிர்காலத்தில் ஆசீர்வாதம் கிடைக்கும் என்று நடுவில் இருக்கிற ஆறு காரியங்களும் வாக்குத்தத்தம் அளிக்கின்றன. ஆனால் முதல் மற்றும் கடைசி ஆசீர்வாதங்கள் வேறுபட்டவை. தம்முடைய மக்களுக்கு ஏற்கனவே ராஜ்யத்தின் இந்த ஆசீர்வாதங்கள் இருப்பதாக இயேசு கூறினார். மத்தேயு 5:3, 10 இல் இயேசு இந்த ஆசீர்வாதங்களை கூறிய விதத்தைக் கவனியுங்கள்:

> ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது… நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது (மத்தேயு 5:3, 10).

இயேசுவைப் பின்பற்றுவதற்கான உண்மையான பெரிய சவாலானது, தேவனுடைய ராஜ்ய வல்லமை ஏற்கனவே நம்மை அவருடைய ராஜ்யத்தின் நீதியுள்ள குடிமக்களாக மாற்றுகிறது என்ற சமமான பெரிய வாக்குத்தத்தத்துடன் பொருந்துகிறது.

மத்தேயு தனது சுவிசேஷத்தின் முதல் பெரிய பிரிவில், இயேசுவின் ஊழியத்தின் நோக்கம் மற்றும் செய்தியில் கவனம் செலுத்துவதன் மூலம் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை வலியுறுத்தினார். பரலோக ராஜ்யத்தை தேவனுடைய ஜனங்களுக்கு கொண்டு வந்த மேசியா ராஜா இயேசு ஆவார். அந்த ராஜ்யத்தின் வாழ்க்கையை மாற்றும் வல்லமையைப் பற்றி அவர்களுக்குக் கற்பித்தார். மேலும், அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால், ராஜ்யம் முழுமையடையும் போது அதன் பெரும் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்று அவர் அவர்களுக்கு உறுதியளித்தார்.

## ராஜ்யத்தின் பரவல்

மத்தேயு சுவிசேஷத்தின் இரண்டாவது பெரிய பிரிவு ராஜ்யத்தின் பரவலைக் குறித்து பேசுகிறது. இந்த பகுதி மத்தேயு 8:1–11:1 வரை நீண்டுள்ளது.

### இயேசுவின் அற்புதங்கள் மற்றும் எதிர்வினைகள்

ராஜ்யத்தின் பரவலைக் கையாளும் விவரிப்பு மத்தேயு 8:1–9:38 லிருந்து வருகிறது. இது இயேசுவின் அற்புதங்கள் மற்றும் அவரது அற்புதங்களுக்கு வெவ்வேறு மக்கள் ஆற்றிய எதிர்வினைகள் பற்றிய கதைகளைக் கொண்டுள்ளது.

8:1-4 இல் இயேசுவையும் குஷ்டரோகியையும், 8:5-13 இல் நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனையும், 8:14-17 இல் பேதுருவின் மாமியையும், 8:18-27இல் ஒரு புயலையும் உள்ளடக்கிய பதினொரு பிரிவுகளாக இந்தக் கதைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பகுதி பிரிக்கப்பட்டுள்ளது. 8:28-34 இல் இரண்டு பிசாசு பிடித்தவர்கள், 9:1-8 இல் ஒரு திமிர்வாதக்காரன், 9:9-17 இல் வரி வசூலிப்பவர்கள் மற்றும் பாவிகள், 9:18-26 இல் ஒரு ஸ்திரீ மற்றும் வேறொரு ஸ்திரீ, 9:27-31 இல் இரண்டு குருடர்கள், மற்றும் 9:32-34 இல் மற்றொரு பிசாசு ஆகிய எல்லாவற்றையும் இந்த கதைப் பகுதி பதினோறு பகுதிகளாக பிரிக்கிறது. இந்த பகுதி 9:35-38 இல் இயேசுவின் இரக்கத்தின் சித்தரிப்புடன் முடிவடைகிறது.

இயேசுவின் வாழ்க்கையில் நடந்த இந்த நிகழ்வுகளைப் பற்றி சில அவதானிப்புகளை மட்டுமே செய்ய நேரம் அனுமதிக்கும். 8:1-4 இல் ஒரு குஷ்டரோகியையும், 8:5-13 இல் ஒரு நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனையும், 8:14-17 இல் பேதுருவின் மாமியாரையும், 9:1-8 இல் ஒரு திமிர்வாதத்தையும், 9:20-22 இல் ஒரு பெரும்பாடினால் அவதிப்பட்ட ஸ்திரீயையும், மற்றும் 9:27-31 இல் இரண்டு பார்வையற்ற ஆண்களையும் குணப்படுத்துவதன் மூலம் அவர் தனது ராஜ்ய அதிகாரத்தை வியாதியின் மீது பயன்படுத்தினார்.

அவர் மத்தேயு 9:18-26 இல் மரித்த ஒரு ஸ்திரீயை மீண்டும் உயிர்ப்பித்தார், மரணத்தின் மீதும் அவருக்கு அதிகாரம் மற்றும் வல்லமை இருப்பதை நிரூபித்தார். மத்தேயு 8:23-27 இல் புயலை அமைதிப்படுத்துவதன் மூலம் இயேசு இயற்கையின் மீது தனது கட்டுப்பாட்டை வெளிப்படுத்தினார்.

இதற்கு அப்பால், மத்தேயு 8:28-34 இல் கல்லறைகளுக்கு மத்தியில் வாழ்ந்த இரண்டு மனிதர்களிடமிருந்தும், 9:32-34 இல் பேச முடியாத ஒரு மனிதரிடமிருந்தும் பிசாசுகளை துரத்தியதன் மூலம் இயேசு சாத்தானின் ராஜ்யத்தின் மீது தனது வல்லமையை வெளிப்படுத்தினார். 9:9-17 இல் வரி வசூலிப்பவர்களுடனும் பாவிகளுடனும் இயேசுவின் தொடர்பைக் கையாள்வதில் மத்தேயுவினுடைய சீஷரின் அழைப்பு ஒரு பெரிய பகுதியை அறிமுகப்படுத்துகிறது. இயேசு மத்தேயுவை வரி வசூலிப்பதை விட்டு புதிய வாழ்க்கையைத் தொடங்கும்படி அழைத்தார். இந்த மாற்றம் ஒரு அதிசயம். வரி வசூலிப்பவர்கள் மற்றும் பாவிகளின் மாற்றம் மிகவும் ஆச்சரியமாக இருந்தது, மத்தேயு உடனடியாக இயேசு வரி வசூலிப்பவர்களுடனும் பாவிகளுடனும் விருந்துண்பதை குறிப்பிட்டார், அவர்களின் மகிழ்ச்சிக்கான காரணத்தையும் அவர் விளக்கினார்.

இயேசுவின் வல்லமையில் கவனம் செலுத்துவதோடு மட்டுமல்லாமல், இயேசுவின் வல்லமையை மக்கள் எப்படி புரிந்து கொண்டனர் என்றும் மத்தேயு கவனித்தார். எளிமையாகச் சொன்னால், அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். மத்தேயு 8:27, 34, மற்றும் 9:8, 26, 31, மற்றும் 33 போன்ற இடங்களில் இதைப் பார்க்கிறோம். அவர்களின் ஆச்சரியம் பொதுவாக இயேசுவை எதிர்க்க வழிவகுத்தது.

சிலர் இயேசுவை நம்பாமல் எதிர்த்தார்கள். மற்றவர்கள் - குறிப்பாக யூத தலைவர்கள் - அவரை வெளிப்படையாக விமர்சித்தார்கள். மத்தேயு 8:34 இல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உள்ளதைப் போல சிலர் இயேசுவுக்கு அஞ்சினார்கள். மத்தேயு 9:3 இல் உள்ளதைப் போல மற்றவர்கள் திகிலடைந்து அதிர்ச்சியடைந்தனர். எப்போதாவது, 9:14 இல் உள்ளதைப் போல, அது இன்னும் தவறாக இருந்தாலும் இயேசுவுக்கு எதிரான எதிர்ப்பு நல்ல நோக்கத்துடன் இருந்ததாகத் தெரிகிறது. மத்தேயு 9:34 இல் உள்ளதைப் போல, சில சமயங்களில் மக்கள் இயேசுவை எதிர்த்தார்கள், ஏனென்றால் அவர்கள் உண்மை என்று தெரிந்ததை வேண்டுமென்றே நிராகரித்தனர். துரதிர்ஷ்டவசமாக, இயேசுவின் ஊழியம் தொடர்ந்தபோது இயேசுவுக்கு எதிரான எதிர்ப்பு மேலும் மேலும் முக்கியத்துவம் பெற்றது.

> புதிய ஏற்பாட்டைப் பார்க்கும்போது, மக்கள் தங்கள் கண்களால் அற்புதங்களைக் கண்டபோதும் கிறிஸ்துவை எவ்வாறு நிராகரிக்க முடியும் என்பது மிகப் பெரிய புதிர்களில் ஒன்றாகும். அவர் செய்ததைக் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்டார்கள், வேதம் திரும்பத் திரும்ப இதைப் பற்றி சொல்கிறது. அவர்கள் அதை எப்படிச் செய்ய முடியும் என்கிற அந்தக் கேள்வியை நாம் கருத்தில் கொள்ளும்போது, , நாம் மத்தேயு 22:29 ஐப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். இயேசு பரிசேயர்களை நோக்கி, நீங்கள் வேதவாக்கியங்களையோ, தேவனுடைய வல்லமையையோ அறியாததால், நீங்கள் தவறிழைக்கிறீர்கள் என்றார். இப்போது அவர், அந்தச் சூழலில், குறிப்பாக சதுசேயர்களைப் பற்றி பேசினார், ஆனால் நியாயப் பிரமாண போதகர்களான பரிசேயர்களுக்கும் இது பொருந்தும் என்று நினைக்கிறேன். அவர்கள் மக்களுக்கு தவறான வழியில் கற்பித்தார்கள்; வரவிருந்த மேசியாவின் எதிர்பார்ப்புகள் தவறான போதனையால் உருவாக்கப்பட்டன. இன்று நமக்கு ஒரு பெரிய பாடம் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன் - தேவனுடைய வார்த்தையை தவறாகக் கையாண்டு மக்களுக்கு தவறாகப் போதிப்பவர்கள், மக்கள் தரப்பில் தவறான எதிர்பார்ப்புகளை ஏற்படுத்துகிறார்கள். இஸ்ரவேலில் முதல் நூற்றாண்டில் அதுதான் நடந்தது என்று நான் நினைக்கிறேன். ஒரு மேசியா வருவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள், ஒரு தேசிய வெற்றியை அவர்கள் எதிர்பார்த்தார்கள். இயேசு வந்தார். அவர்கள் பார்த்திராத மற்றும் மீண்டும் பார்க்க முடியாத விஷயங்களை அவர் செய்திருந்தாலும், அவர்கள் அவரை நிராகரித்தனர், ஏனெனில் கிறிஸ்துவின் மீதான தலைவர்களின் தாக்குதல்கள் எப்போதும் அவரது அற்புதங்களை

> இழிவுபடுத்த முயன்றன. இந்தக் காரியங்களைச் செய்வதற்கான வழிமுறையாக அவரை சாத்தானுடன் ஒப்பிட்டார்கள். வருத்தப்படும் விதமாக, இறுதியில், பல தசாப்தங்களாக, தலைமுறைகளாக, தொடர்ந்த தவறான போதனைகள், அதிகாரம், மத அதிகாரம் போன்ற பதவிகளில் இருப்பவர்களின் தாக்குதல்கள், அவர்கள் கண்ட அற்புதங்களை மீறி, இறுதியில் பலரின் இருதயங்களை கிறிஸ்துவிடமிருந்து விலக்கின.
>
> Dr. ஜிம் மாப்பில்ஸ்

9:35-38 இல் இயேசுவின் வல்லமை வாய்ந்த அற்புதங்களைப் பற்றிய இந்த விவரிப்புப் பகுதியை மத்தேயு, ஜனக்கூட்டத்தின் மீது இயேசுவிற்கு இருந்த இரக்கத்தை விவரிப்பதன் மூலம் முடித்தார். மத்தேயு 9:36-38 இல் உள்ள இந்தக தகவலை கவனியுங்கள்.

> அவர் ஜனங்களைக் கண்டபோது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் துன்புறுத்தப்பட்டு ஆதரவற்றவர்களாக இருந்தபடியினால், அவர்கள்மேல் இரக்கம் கொண்டார். தம்முடைய சீஷர்களை நோக்கி: "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார் (மத்தேயு 9:36-38).

தம்முடைய ஜனங்கள் தம்மை ராஜாவாக ஏற்றுக்கொள்ளாததற்கு ஒரு காரணம், அவர்களுடைய தலைவர்கள் பலரால் தவறாக நடத்தப்பட்டதும், மோசமாகப் போதிக்கப்பட்டதும்தான் என்பதை இயேசு புரிந்துகொண்டார். ஆனால் அவருடைய அற்புதங்கள் அவர்களின் இருதயங்களை மென்மையாக்கி அவரைப் பின்பற்ற அவர்களைத் தூண்டுகின்றன என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆகவே, தேவன் சுவிசேஷகர்களையும் நீதியுள்ள தலைவர்களையும் எழுப்ப வேண்டும் என்று ஜெபிக்கும்படி அவர் தனது சீஷர்களுக்கு அறிவுறுத்தினார். காணாமல் போனவர்களை பூமியில் தேவனுடைய பரலோக ராஜ்யத்திற்குள் கொண்டு வந்து, அதன் நீதியுள்ள குடிமக்களாக இருப்பது எப்படி என்று அவர்களுக்குக் கற்பிக்கிறார்.

## ராஜாவின் தூதர்கள்

ராஜ்யத்தின் பரவலைப் பற்றிய மத்தேயுவின் கதையை ஆராய்ந்த பிறகு, மத்தேயு 10:1-11:1 இல் இதோடு தொடர்புள்ள சொற்பொழிவுக்கு வருவோம். இந்த சொற்பொழிவு சீஷர்களை ராஜாவின் தூதர்கள் அல்லது பிரதிநிதிகள் என்று

மையப்படுத்துகிறது. இந்தப் பகுதியில், முந்தைய கதையின் முடிவில் அவர் முன்வைத்த சவாலுக்கு இயேசு பதிலளித்தார். சுவிசேஷகர்களையும் தலைவர்களையும் எழுப்ப தேவனிடம் ஜெபிக்கும்படி தம்மைப் பின்பற்றுபவர்களுக்குக் கட்டளையிட்ட பிறகு, இயேசு தனது தனிப்பட்ட ராஜ்ய ஊழியத்தை விரிவுபடுத்தினார், மேலும் பன்னிரண்டு சீஷர்களுக்கு ஊழியம் செய்கிற அதிகாரத்தை அளித்தார், மேலும் தாம் செய்ததைப் போலவே ராஜ்யத்தின் இருப்பை சொல்லிலும் செயலிலும் அறிவிக்கும்படி கட்டளையிட்டார். மத்தேயு 10:7-8 இல் நாம் வாசிக்கிற போல, இயேசு அவர்களுக்கு இந்த வார்த்தைகளைக் கட்டளையிட்டார்:

> நீங்கள் செல்லும்போது, இந்தச் செய்தியைப் பிரசங்கியுங்கள்: "பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள் (மத்தேயு 10:7-8).

இயேசு தம்முடைய சீஷர்களை வெளியே அனுப்புவதற்கு முன்பாக அவர்களுக்குப் பல எச்சரிக்கைகளைக் கொடுத்தார். அவர்கள் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றும்போது வாழ்க்கை எளிதாக இருக்காது. உலகம் அவர்களுக்கு இரக்கம் காட்டாது. அவர்கள் கஷ்டப்படுவார்கள். அவர்கள் கேலி செய்யப்படுவார்கள், கைது செய்யப்படுவார்கள், கொல்லப்படுவார்கள். ஆனால் அவர்களுடைய ஊழியம் அவர்களுடைய பரலோகத் தகப்பனால் ஆசீர்வதிக்கப்படும் என்றும், இறுதியில் ராஜ்யத்தின் வாழ்க்கை அவர்களுடையதாக இருக்கும் என்றும் இயேசு வாக்குத்தத்தம் அளித்தார். மத்தேயு 10:39 இல் இயேசு தம் சீஷர்களுக்கு எப்படி உறுதியளித்தார் என்பதைக் கவனியுங்கள்.

> தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான். (மத்தேயு 10:39).

இயேசுவின் சீஷர்கள் இயேசுவின் போதனை மற்றும் குணப்படுத்தும் ஊழியத்திற்காக தங்கள் முந்தைய வாழ்க்கையை விட்டுவிட்டார்கள். ஆனால், ராஜாவாகிய இயேசுவின் கீழ் அவர்கள் உண்மையான ராஜ்ய வாழ்க்கையை அனுபவிப்பார்கள் என்று இயேசு அவர்களுக்கு உறுதியளித்தார்.

மத்தேயு சுவிசேஷத்தின் இந்த இரண்டாவது பெரிய பிரிவில், மத்தேயு ராஜ்யத்தின் பரவலை குறிப்பாக இயேசுவின் வல்லமையான செயல்களின் அடிப்படையில் விவரித்ததையும், அவருடைய சீஷர்களுக்கு இயேசு வழங்கிய அறிவுரைகளையும் நாம் பார்த்தோம். நவீன சபையில் நாம் செய்யும் ஊழியத்திற்கு இது ஒரு நல்ல முன்மாதிரியை வழங்குகிறது. நாம் இயேசுவின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வல்லமையை நம்பி, உண்மையுள்ள சீஷர்களாக அவருக்கு சேவை செய்யும்போது, இயேசு தம்முடைய ராஜ்யத்தை நம் மூலமாகவும் கட்டுவார், மேலும் பரலோக ஆசீர்வாதங்களை நமக்கு வெகுமதியாக அளிப்பார்.

## அடையாளங்கள் மற்றும் உவமைகள்

மத்தேயு சுவிசேஷத்தின் மூன்றாவது பெரிய பிரிவு, அடையாளங்கள் மற்றும் உவமைகள் மூலம் ராஜா மற்றும் அவரது ராஜ்யத்தின் காட்சியை விவரிக்கிறது. மேலும் இது மத்தேயு 11:2-13:53 இல் காணப்படுகிறது.

### அடையாளங்கள் மற்றும் எதிர்வினைகள்

மத்தேயுவின் கதை, இயேசு செய்த அடையாளங்கள் மற்றும் அவரது அடையாளங்களுக்கான எதிர்வினைகள் மீது கவனம் செலுத்துகிறது. இது மத்தேயு 11:2-12:50 வரை நீண்டு காணப்படுகிறது. இந்த அடையாளங்கள் ராஜாவும் அவருடைய ராஜ்யமும் இருப்பதை நிரூபித்தன, மேலும் ராஜ்யம் எப்படி இருக்கும் என்ற தவறான எதிர்பார்ப்புகளை சரிசெய்தன. இதனால், ஏற்கனவே வேரூன்றியிருந்த விமர்சனங்கள் வளர்ந்து பரவ ஆரம்பித்தன.

இந்தத் தொடர் அத்தியாயங்கள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன: 11:2-19 இல், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றிய மேசியா என்பதை அவருடைய அடையாளங்கள் நிரூபித்தன என்று யோவான் ஸ்நானகனுக்கு இயேசு உறுதியளித்தார். மேலும் ஜனங்கள் தம் அடையாளங்களைக் கண்டு மனந்திரும்பும்படி இயேசு அழைத்தார். 11:20-30 ல் இயேசு தாம் அற்புதங்களைச் செய்த நகரங்களில் உரையாற்றினார், மேலும் அவர் மனந்திரும்பாதவர்களை எச்சரித்து, தன்னிடம் வருபவர்களுக்கு இளைப்பாறுதலை வழங்கினார். மத்தேயு 11:30ல் அவர் கூறியது போல்:

> என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது (மத்தேயு 11:30).

12:1-21 இல், மத்தேயு இயேசுவின் அடையாளங்களுக்கு பரிசேயர்களின் எதிர்வினைகள் எப்படியிருந்தன என்பதற்கான பல அத்தியாயங்களைத் தொடங்குகிறார். முதலாவதாக, ஓய்வுநாளுக்கான தேவனுடைய நோக்கங்களைப் பற்றி பரிசேயர்களிடம் இயேசு எப்படி விவாதித்தார் என்பதைக் குறிப்பிட்டார். மேலும் ஓய்வுநாளில் ஒரு மனிதனைக் குணப்படுத்துவதன் மூலம் தனது அதிகாரத்தை வெளிப்படுத்தினார். ஓய்வுநாள் குணப்படுத்துவதற்கும் உயிர்களைக் காப்பாற்றுவதற்குமான நாள் என்று இயேசு கற்பித்தார்.

12:22-37 இல், இயேசுவின் அற்புதங்களைக் கண்டு மக்கள் வியப்படைந்தபோதும், பெயல்செபூலின் வல்லமையை அவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பயன்படுத்தியதாகக் பரிசேயர்கள் அவர்மீது குற்றம் சாட்டினார்கள். அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அவர் பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டதாக வேதபாரகர்கள் நம்பினர்.

12:38-50 இல், பரிசேயர்கள் பாசாங்குத்தனமாக மற்றொரு அடையாளத்தைக் கோரினர், ஆனால் அவர்கள் யோனாவின் அடையாளத்தை மட்டுமே பெறுவார்கள் என்று இயேசு எச்சரித்தார். இந்த அடையாளம் என்ன? மூன்று நாட்களுக்குப் பிறகு பெரிய மீனிலிருந்து யோனா வெளியேறியது நினிவேயில் புறஜாதியார் மனந்திரும்புவதற்கு வழிவகுத்தது, பூமியில் மூன்று நாட்களுக்குப் பிறகு இயேசுவின் எதிர்கால உயிர்த்தெழுதல் இன்னும் பல புறஜாதிகளின் மனந்திரும்புதலுக்கு வழிவகுக்கும்.

மனந்திரும்பிய எந்த தேசத்தாரையும் தேவன் எவ்வாறு ஏற்றுக்கொள்வார் என்பதை நிரூபிக்க, இயேசு தனது இயற்கையான யூத தாயும் சகோதரர்களும் தனது குடும்பம் அல்ல என்று சொல்லும் அளவிற்கு சென்றார். மாறாக, அவர் மத்தேயு 12:49-50 இல் கூறியது போல்:

> இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் (மத்தேயு 12:49-50).

இயேசு செய்த அடையாளங்களைப் பற்றிய மத்தேயுவின் கதையை இப்போது நாம் பார்த்தோம், மத்தேயு 13:1-53 இல் இயேசுவின் ராஜ்ய உவமைகள் பற்றிய அவரது சொற்பொழிவுக்கு வருவோம்.

## ராஜ்ய உவமைகள்

மத்தேயு சுவிசேஷம் இயேசுவின் நன்கு அறியப்பட்ட உவமைகளை ஐந்து பிரிவுகளில் தெரிவிக்கிறது. 13:1-23 இல் விதைப்பவரின் உவமை, 13:24-30 இல் களைகளின் உவமை, 13:31-43 இல் கடுகு விதை மற்றும் புளித்தமாவு, 13:44-46 இல் மறைந்திருக்கும் பொக்கிஷம் மற்றும் முத்து, மற்றும் 13:47-53 இல் வலையின் உவமை. இந்த உவமைகள் தேவனுடைய ராஜ்யத்தை விளக்கும் தவறான புரிதல்களை சரிசெய்ய வடிவமைக்கப்பட்டுள்ளன.

13:31-32 இல் உள்ள கடுகு விதையின் உவமை, வசனம் 33 இல் உள்ள புளித்தமாவுவின் உவமை, வசனம் 44 இல் உள்ள பொக்கிஷத்தின் உவமை மற்றும் 45-46 வசனங்களில் உள்ள முத்துவின் உவமை போன்ற சில உவமைகளில் பரலோக ராஜ்யம் மிக உயர்ந்த மதிப்பு மிக்கது என்றும் அதை எந்த விலைக்கிரயமும் செலுத்தி தேட வேண்டும் என்றும் கூறினார். இது முதலில் முக்கியமற்றதாகத் தோன்றலாம், ஆனால் ஒரு நாள் அது அதன் அனைத்து மகிமையிலும் காணப்படும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால் ராஜா இயேசுவையும் அவருடைய ராஜ்யத்தையும் ஏற்றுக்கொள்வதில் இஸ்ரவேல் தோல்வியடைந்ததை மையமாகக் கொண்ட மற்ற உவமைகளையும் இயேசு சொன்னார். மத்தேயு 13:1-23 இல் விதைப்பவரின் உவமையிலும் அதன் விளக்கத்திலும், விசுவாசத்திற்கு பல தடைகள் இருப்பதையும், பெரும்பாலான மக்கள் ராஜ்யத்தை நிராகரிப்பார்கள் என்பதையும் இயேசு தெளிவுபடுத்தினார்.

24-30 மற்றும் 36-43 வசனங்களில் உள்ள களைகளின் உவமையாலும், 47-51 வசனங்களில் உள்ள வலை உவமையாலும் இந்தக் கருத்து வலுப்பெறுகிறது. பலர் ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள், இறுதியில் அழிக்கப்படுவார்கள் என்று இயேசு கற்பித்தார். இந்த உவமைகள் இயேசுவை எதிர்த்தவர்களுக்கு தெளிவான எச்சரிக்கைகளாக இருந்தன; அவிசுவாசிகள் மனந்திரும்புவதற்கும், ஒரே உண்மையான ராஜாவின் சீஷர்களாக மாறுவதற்கும் அவைகள் வாய்ப்பளித்தன.

> கிறிஸ்து வந்தார். அவர் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார்; அவர் தனது ராஜ்யத்தை கொண்டுவந்தார். ஆயினும்கூட, அது இன்னும் அதன் நிறைவிற்காக காத்திருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் அந்த ராஜ்யத்திற்குள் நுழைகிறோம், ஆனால் நாம் தொடர்ந்து நமது முன்னுரிமைகளின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும், நாம் அவரைப் பின்தொடர வேண்டிய விதத்தில் பின்தொடராமலிருப்பதற்கு வருந்த வேண்டும், அவருடைய விருப்பத்திற்கு இணங்க நம் வாழ்க்கையை உண்மையுடன் வாழ விரும்புகிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். அவரது மதிப்புகள் அடிப்படையில் அவருடன் உடன்பட வேண்டும், ராஜ்யம் என்பது இவைகளைப் பற்றியது தான். எனவே, நாம் தொடர்ச்சியாக மனந்திரும்பவும் அறிக்கையிடவும் வேண்டும், அவரை ஒரு தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், ராஜாவாகவும் நினைத்து அவரைப் பின்பற்றி அவருக்கு சேவை செய்ய வேண்டும். இப்படியாக இந்த உலகில் அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுகிறோம்.
>
> Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

> தேவனுடைய ராஜ்யத்தின் வருகையைப் பின்தொடர்வதற்கும் எதிர்நோக்குவதற்கும் கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க வேண்டும். முதலாவதாக, தனிப்பட்ட பரிமாணத்தில், பரலோக ராஜ்யத்தின் அதிகாரம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாழ்க்கையில் நமது வல்லமையாகும். தேவனுக்கு அடிபணியவும், தேவனை மையமாகக் கொண்ட வாழ்க்கையை வாழவும் இது நம்மைத் தூண்டுகிறது, இதனால் நம் வாழ்வில் வெளிப்படும் தேவனின் அதிகாரம் நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் இலக்காக மாறும். இரண்டாவதாக, மீட்பு வரலாற்றின் பார்வையில் பரலோக ராஜ்யம் பற்றிய கருத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அது எவ்வாறு தொடங்குகிறது, வெளிப்படுத்துகிறது மற்றும் அவரது மீட்புத் திட்டத்தை நிறைவு செய்கிறது என்பதை நாம் அறியும்போது, பரலோக ராஜ்யத்தின் போதனைகள் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டை ஒன்றிணைப்பதை நாம் பார்ப்போம். நம் மீட்கும் தேவனுடைய மகத்தான திட்ட வரைவைப் பார்க்கவும் அவருடைய விரிவான நோக்கத்தை எளிதாகப் புரிந்துகொள்ளவும் அவை நமக்கு உதவுகின்றன. மூன்றாவதாக, பரலோக ராஜ்யம் சரியான வேதாகம உலகக் கண்ணோட்டத்தை உருவாக்குகிறது, மேலும் அனைத்தும் தேவனுக்கு சொந்தமானது என்பதைக் காண உதவுகிறது. அவருடைய ராஜ்யம் முடிவடையும், அவர் நியாயந்தீர்ப்பார் மற்றும் பூமியிலுள்ள அனைத்து பொல்லாத ஆவிகளையும் அழித்துவிடுவார், ஏனென்றால் தேவனே முழுமையான ராஜா. எனவே, நாம் இனி நமக்காக மட்டும் வாழவில்லை. நமது அண்டை வீட்டாரையும், சமுதாயத்தையும், இந்த உலகத்தின் நலனையும் கவனித்துக்கொள்ள வேண்டும். நமக்கு அருகில் அல்லது தொலைவில் உள்ள விஷயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாம் சமுதாயத்திற்குள் நுழைந்து, அனைத்து அம்சங்களையும் மாற்றியமைக்க வேண்டும், அது நமது கடமையாகும்.

Dr. ஸ்டீபன் சான், மொழிபெயர்ப்பு

## விசுவாசம் மற்றும் மகத்துவம்

மத்தேயு சுவிசேஷத்தின் நான்காவது பெரிய பிரிவு 13:54 இல் தொடங்கி 18:35 வரை விசுவாசம் மற்றும் மகத்துவத்தின் மீது கவனம் செலுத்துகிறது. அவருடைய ராஜ்யத்தில் மகத்துவத்தை அடையும் இயேசுவின் உண்மையுள்ள சீஷராக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதை இந்தப் பிரிவு வெளிப்படுத்துகிறது.

## இயேசுவின் மீது வைத்த இடறுகிற விசுவாசம்

இந்தப் பகுதியின் விவரிப்புப் பகுதி 13:54–17:27 முழுவதும் இருக்கிறது மற்றும் பதின்மூன்று அத்தியாயங்களை உள்ளடக்கியது, அதில் ஒரு ஸ்திரீயைத் தவிர மற்ற அனைவரும் இயேசுவில் முழு விசுவாசம் வைப்பதற்கு பல தடைகள் இருந்தன. முதல் இரண்டு அத்தியாயங்கள் இயேசுவின் மீதான விசுவாசம் முற்றிலும் நிராகரிக்கப்பட்ட இரண்டு நேரங்களை மையமாகக் கொண்டது. முதலாவதாக, இயேசு 13:54-58 இல் நாசரேத்தில் உள்ள தனது சொந்த ஊருக்கு வந்தபோது, அவரது முன்னாள் அயலவர்கள் அற்புதங்களைச் செய்யும் திறனை மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் இன்னும் கோபமடைந்து அவரை நிராகரித்தனர். 13:58 இல் நாசரேத்து மக்கள் விசுவாசம் இல்லாததால் பல அற்புதங்களைப் பெறவில்லை என்று வாசிக்கிறோம்.

அடுத்து, 14:1-12 ஏரோது மற்றும் யோவான் ஸ்நானகனின் மரணத்தைப் பற்றியது. ஏரோது யோவானுக்கு செய்ததற்காக தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு பாத்திரமாயிருந்தான். ஆனால் இயேசுவின் அற்புதங்களைப் பற்றிய அறிக்கைகளை ஏரோது மறுக்கவில்லை என்று வசனம் 1 விளக்குகிறது. மாறாக, ஏரோதைத் தொந்தரவு செய்ய மரித்தோரிலிருந்து திரும்பி வந்த யோவான் ஸ்நானகன் தான் இயேசு என்று அவருடைய ஆலோசகர்கள் நம்பினர்.

அடுத்த மூன்று அத்தியாயங்கள் இயேசுவின் சீஷர்கள் மற்றும் அவர்கள் எவ்வாறு விசுவாசத்தில் வளர வேண்டும் என்பதை மையமாகக் கொண்டது. மத்தேயு 14:13-21 இயேசு ஐயாயிரம் பேரை போஷித்த கதையாகும். இயேசு தம்மைப் பின்தொடர்ந்த கூட்டத்தை போஷிக்குமாறு சீஷர்களிடம் கூறினார், ஆனால் வசனம் 15 இல் அவருடைய சீஷர்கள் அவரிடம் உணவு குறைவாக இருப்பதாக சந்தேகப்பட்டு புகார் செய்தனர். எனவே, இயேசு அவர்களின் உணவைப் பெருக்கி ஐயாயிரம் பேருக்கு உணவளித்து தம் வல்லமையை நிரூபித்தார்.

14:22-36 இல், இயேசு தண்ணீரில் நடந்தார். முதலில், பேதுரு படகில் இருந்து இறங்கி இயேசுவின் மீது இருந்த விசுவாசத்தைக் காட்டினார், ஆனால் பேதுரு ஆபத்தைக் கண்டு சந்தேகமடைந்து கடலில் மூழ்கத் தொடங்கினார். “அற்ப விசுவாசியே… ஏன் சந்தேகப்பட்டாய்?” என்று அவரைக் காப்பாற்றிய பிறகு, இயேசு வசனம் 31 இல் கூறினார்.

அதிகாரம் 15:1-20 இயேசுவுக்கும் சில பரிசேயர்களுக்கும் இடையே இருந்த ஒரு மோதலை தெரிவிக்கிறது. பேதுரு இயேசு சொன்ன ஒரு எளிய விஷயத்திற்கு விளக்கம் கேட்டார். ”நீங்கள் இன்னும் உணர்வில்லாமல் இருக்கிறீர்களா?” என்று வசனம் 16 இல் இயேசு பதிலளித்தார்.

15:21-28 இல், பிசாசு பிடித்த மகளுடன் வந்த கானானிய ஸ்திரீ வருவதைப் பற்றி பேசுகிறது. இயேசுவை யாரோ ஒருவர் உறுதியாக நம்புவது இங்கே இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அத்தியாத்தில் மட்டுமே இருக்கிறது. மற்றவர்களைப் போலல்லாமல், தனக்கு உதவி செய்யும்படி அவள் இயேசுவிடம் கெஞ்சினாள். மேலும் 28ஆம் வசனத்தில் இயேசு, “ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது!” என்று ஒப்புதல் அளிக்கும் வகையில் பதிலளித்தார்.

மத்தேயு பின்னர் இயேசுவினுடைய சீஷர்களின் பலவீனமான விசுவாசத்தைப் பற்றி பேசினார். 15:29-39 இல், நான்காயிரம் பேரை போஷித்தல் பற்றி எழுதினார். 33ஆம் வசனத்தில், இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளிப்பதைக் கண்டாலும், போதிய உணவு எங்கே கிடைக்கும் என்று சீஷர்கள் கேட்டார்கள்.

16:1-12 இல், இயேசு பரிசேயர்களுடனும் சதுசேயர்களுடனும் விவாதித்தார். ஒரு கட்டத்தில், அவர் தம் சீஷர்களிடம் திரும்பி, ”பரிசேயர் சதுசேயரின் புளித்த மாவு” பற்றி எச்சரித்தார், மேலும் அவர்கள் அப்பத்தைக் கொண்டு வராததால் அவர் கோபமடைந்தார் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் இயேசு ஆயிரக்கணக்கானோருக்கு அப்பம் கொடுத்த காலங்களை அவர்களுக்கு நினைவூட்டினார், மேலும் 8 ஆம் வசனத்தில் அவர் தம் சீஷர்களை ”அற்ப விசுவாசிகளே” என்று அழைத்தார்.

இதைத் தொடர்ந்து, நெருங்கிய தொடர்புடைய இரண்டு அத்தியாயங்களைக் காண்கிறோம். ஒருபுறம், 16:13-20 இல் பேதுருவின் நன்கு அறியப்பட்ட விசுவாச அறிக்கையிடுதல். 16:16 இல், ”நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்று பேதுரு இயேசுவைப் பற்றி அறிவித்தார். பேதுருவின் விசுவாசத்திற்காக இயேசு அவரை பாராட்டி ஆசீர்வதித்தார்.

ஆனால் மறுபுறம், 16: 21-27 இல், இயேசு பேதுருவை கடுமையாகக் கண்டித்தார். தாம் பாடுபட்டு மரிக்க எருசலேமுக்குப் போகிறேன் என்று இயேசு சீஷர்களிடம் சொல்லத் தொடங்கினார். பேதுரு எதிர்த்தபோது, இயேசு 23 வது வசனத்தில் இவ்வாறு கடுமையாக பதிலளித்தார்: “அப்பாலே போ சாத்தானே.” பேதுரு தேவனைப் போல அல்லாமல், மனிதர்களைப் போல சிந்திக்கிறார் என்று இயேசு விளக்கினார்.

இந்தக் கண்டிப்பைத் தொடர்ந்து, 17:1-13 இல் இயேசுவின் மறுரூபமாதலுக்கு வருகிறோம். இயேசுவின் மகிமையைக் கண்ட சீஷர்கள் அந்த இடத்தில் ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்பினர். ஆனால், 12 ஆம் வசனத்தில், தாம் மரித்து உயிர்த்தெழுந்த பின்னரே அவருடைய உண்மையான மகிமை காணப்படும் என்பதை இயேசு அவர்களுக்கு நினைவூட்டினார்.

17:14-23 இல், பிசாசு பிடித்த இளைஞனைப் பற்றி வாசிக்கிறோம். இயேசுவின் சீஷர்கள் பிசாசை விரட்ட முயன்றனர் ஆனால் தோல்வியடைந்தனர். அதைச் செய்தபின், இயேசு 20 ஆம் வசனத்தில், “உங்கள் அவிசுவாசத்தினாலே தான்” என்றார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இறுதியாக, 17:24-27 இல், வரிப்பணம் வாங்குகிறவர்கள் இயேசுவின் சீஷர்களிடம் வந்து, இயேசு ஆலய வரியைச் செலுத்தினாரா என்று கேட்டார்கள். இயேசு பணம் செலுத்தினார் என்று ஒருவேளை பயத்தின் காரணமாக பேதுரு விரைவாக பதிலளித்தார். பின்னர் பேதுரு பணத்திற்காக இயேசுவிடம் வந்தார், இயேசு ஒரு அற்புதத்தை நிகழ்த்தி, பேதுரு கவலைப்பட எந்த காரணமும் இல்லை என்று விளக்கினார்.

இயேசுவை நிராகரித்தவர்களையும், விசுவாசியான கானானியப் பெண்ணையும் மத்தேயு குறிப்பிட்டார், ஆனால் அவருடைய முக்கிய கவனம் அவருடைய சீஷர்கள் அவர் மீதுள்ள விசுவாசத்தில் வளர வேண்டும் என்பதில் இருந்தது.

மீண்டும், மத்தேயு 18:1-35 இல் இயேசுவின் சொற்பொழிவுடன் தனது கதைகளைப் பின்பற்றினார். இந்த சொற்பொழிவு தேவனுடைய ராஜ்யத்தின் குடும்பத்தில் உண்மையான மகத்துவத்தை மையமாகக் கொண்டுள்ளது, தேவனுடைய ராஜ்யத்தின் சகோதர சகோதரிகளிடையே பணிவான சேவையிலிருந்து வரும் மகத்துவத்தை மையமாகக் கொண்டுள்ளது.

## ராஜ்ய குடும்பத்தில் மகத்துவம்

முந்தைய அதிகாரத்தின் கடைசி பகுதியில், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை தேவனின் குமாரர்கள் என்றும் ராஜா என்றும் பேசினார். இந்த அடையாளம் மத்தேயு தனது சுவிசேஷத்தின் இந்த பகுதியை ஒரு முக்கிய கேள்வியுடன் தொடங்க வழிவகுத்தது. மத்தேயு 18:1 இல் நாம் வாசிக்கிறபடி:

> பரலோக ராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான்? (மத்தேயு 18:1).

நான்கு முக்கிய பாகங்களில் உதாரணங்கள் மற்றும் உவமைகளுடன் அறிவுறுத்தல்களை கலந்து இயேசு இந்தக் கேள்விக்கு பதிலளித்தார். முதலாவதாக, 18: 2-4 இல், இயேசு தம் சீஷர்களை சிறு குழந்தைகளைப் போல மனத்தாழ்மையுடன் வாழுமாறு அறிவுறுத்தினார்.

தம்முடைய எதிரிகளின் எதிர்ப்பை எதிர்கொண்டு, இயேசு தம்முடைய சீஷர்களுக்கு பரலோகராஜ்யத்தில் எப்படி தேவனுடைய பிள்ளைகளாக வாழ்வது என்று கற்றுக்கொடுத்தார். ராஜ்யத்தின் எதிர்கால நிறைவு இன்னும் வரவில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். எதிரிகளுக்கும் பாவங்களுக்கும் எதிரான போராட்டங்கள் தேவனுடைய பிள்ளைகளின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

மேலும் 5-14 வசனங்களில், அவர்களுடைய பரலோகத் தகப்பன் தன் காணாமல் போன ஆடுகளைக் கவனித்துக்கொள்வதைப் போல பலவீனமானவர்களைக் கவனித்துக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உதாரணமாக, மத்தேயு 18:10, 14 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.... இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல (மத்தேயு 18:10, 14).

மத்தேயு 18:15-20 இல் இயேசு இந்த யோசனையை கட்டமைத்தார், அங்கு பாவம் அவர்களின் உறவுகளை சீர்குலைத்தாலும், தம்மைப் பின்பற்றுபவர்கள் தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களாக ஒருவரையொருவர் கையாள வேண்டும் என்று கோரினார். மேலும் 21-35 வசனங்களில், அவர்களுடைய பரலோகத் தகப்பன் மன்னித்ததைப் போலவே பாவம் செய்யும் “சகோதரனை” மன்னிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தேவனின் மகிமை நம் நாளில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது, ஏனென்றால் தேவன் பல வல்லமையுள்ள செயல்களைச் செய்து பூமியில் அவருடைய ராஜ்யத்தை வளர்க்கிறார். ஆனால் இயேசுவின் நாளில் இருந்ததைப் போலவே, தேவனுக்கு எதிர்ப்பும் அதிகரித்து வருகிறது என்பதை இது அடிக்கடி அர்த்தப்படுத்துகிறது. அதிர்ஷ்டவசமாக, பாடுகள் மற்றும் சோதனைகளுடன் நமது போராட்டங்களில் நமக்கு உதவ பல விலைமதிப்பற்ற பரிசுகளை தேவன் நமக்குத் தருகிறார். சகிப்புத்தன்மை மற்றும் சமாதானம், மற்றும் அவரின் பிரசன்னம் ஆகியவை அவரின் பரிசுகளில் சிலவாகும். மேலும் மிகவும் சிறப்பு வாய்ந்த பரிசுகளில் ஒன்று, நம் தகப்பனாகிய தேவனுடன் நமக்குள்ள உறவாகும். தேவன் நம்மைக் கவனித்து, நம்மைப் பாதுகாக்கிறார், அவர் நம் பலவீனத்தைப் புரிந்துகொண்டு அனுதாபப்படுகிறார். மேலும், சபையையும் தேவனுடைய குடும்பத்தில் உள்ள நம் சகோதர சகோதரிகளையும் நமக்கு சேவை செய்யக்கூடிய மற்றும் நம்மை நேசிக்கக்கூடிய ஒரு மனித குடும்பமாக அவர் நமக்குத் தருகிறார்.

## தற்போதைய எதிர்ப்பு மற்றும் எதிர்கால வெற்றி

பரலோக ராஜ்யத்தின் தற்போதைய எதிர்ப்பும் அதன் எதிர்கால வெற்றியும் மத்தேயு சுவிசேஷத்தின் ஐந்தாவது பெரிய பிரிவின் கருப்பொருள் ஆகும். இந்தக் கதை 19:1–22:46 வரை நீண்டு, இயேசு தனது வாழ்க்கையில் இந்தக் கட்டத்தில் எப்படி பெரும் எதிர்ப்பை எதிர்கொண்டார் என்பதைக் காட்டுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## தீவிரமடையும் எதிர்ப்பு

இந்த அதிகாரங்கள் இயேசுவின் இயக்கத்தின் அடிப்படையில் மூன்று முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 19:1–20:16 இல், யூதேயாவில் இயேசு எதிர்ப்பை எதிர்கொண்டார். அங்கு அவர் பரிசேயர்களையும் விவாகரத்து பிரச்சனையையும் சமாளித்தார். செல்வம் மற்றும் அதிகாரத்தை குறித்த தவறான புரிதலால் வளர்ந்த எதிர்ப்பையும் அவர் சமாளித்தார்.

முன்னதாக சுவிசேஷத்தில், இயேசுவுக்கும் யூதத் தலைவர்களுக்கும் இடையிலான பதட்டங்களின் ஆரம்ப கட்டத்தை மத்தேயு குறிப்பிட்டார். இந்த பிரிவில், முழு விரோதம் உருவாகிவிட்டதாக அவர் தெரிவித்தார். உதாரணமாக, பரிசேயர்கள் சில சமயங்களில் மத்தேயு 19:3-9;21:16, 23; மற்றும் 22:15-40 இல் உள்ளதைப் போல, இயேசுவைப் பிடிக்க வடிவமைக்கப்பட்ட கேள்விகளைக் கேட்டார்கள். ஒரு உதாரணத்திற்கு, மத்தேயு 22:15 இல் உள்ள மத்தேயுவின் அறிக்கையைக் கவனியுங்கள்:

> அப்பொழுது, பரிசேயர் போய், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனைபண்ணினார்கள் (மத்தேயு 22:15).

அதே நேரத்தில், இயேசு சில சமயங்களில் யூதத் தலைவர்களுக்கு சவால் விடுத்தார். 21:28-22:15 இல் உள்ள இரண்டு குமாரர்கள், குத்தகை விவசாயிகள் மற்றும் திருமண விருந்து ஆகியவற்றின் உவமைகளில் இதைக் காண்கிறோம்.

ஆனால் மோதல் எப்போதும் வாய்மொழி பரிமாற்றங்களோடு நிற்கவில்லை. மத்தேயு 21:12-16 இல் உள்ள பணத்தை மாற்றுபவர்களின் மேசைகளை இயேசு கவிழ்த்து, அவர்களை ஆலயத்துக்கு வெளியே துரத்தியதைப் போல, சில நேரங்களில் அது மிகவும் நேரடியானதாகவும் வலிமையானதாகவும் இருந்தது. 23:13-35 இன் ஏழு சபிக்கும் எச்சரிக்கைகளில் அவரது வார்த்தைகள் குறிப்பாக குத்தும் வகையில் இருந்தன. மத்தேயு 23:15 இல் இயேசு அவர்களை எப்படிக் கடிந்துகொண்டார் என்பதைக் கவனியங்கள்:

> ”மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்” (மத்தேயு 23:15).

நிச்சயமாக, இந்த அதிகாரங்களில் இயேசுவும் யூதத் தலைவர்களும் மட்டுமே பாத்திரங்கள் அல்ல. 21:1-11 இல் வெற்றிகரமான எருசலேமில் அவருடைய நுழைவு போன்ற சந்தர்ப்பங்களில் மக்கள் கூட்டம் இன்னும் இயேசுவைக் கௌரவித்த விதத்தால் யூதத் தலைவர்களின் விரோதப் போக்கு மோசமடைந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்தப் பகுதி முழுவதும், இந்த மோதலை முன்னோக்கி வைக்கும்படி இயேசு தம் சீஷர்களை ஊக்குவித்தார். மத்தேயு 19:27-30 இல், ஒரு நாள் அவர்கள் மகிமையில் அவருடன் அமர்வார்கள் என்று அவர் உறுதியளித்தார். ஆனால் 20:17-19 இல், அந்த மகிமையான நாட்கள் அவருடைய துன்பமான மரணத்திற்குப் பிறகுதான் வரும் என்றும் அவர் எச்சரித்தார்.

மேலும், இயேசு தம்முடைய சீஷர்கள் தாழ்மையான துன்ப வாழ்க்கைக்குப் பின்னரே மகிமையை அடைவார்கள் என்று வலியுறுத்தினார். இயேசு இந்த காரியத்தை மூன்று வெவ்வேறு நேரங்களில் அவர்களிடம் விளக்கினார். மத்தேயு 19:30 இல் இயேசு இவ்வாறு கூறினார்:

> ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் (மத்தேயு 19:30).

பின்னர் மத்தேயு 20:16 இல் அவர் இவ்வாறு கூறினார்:

> பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள் (மத்தேயு 20:16).

அவர் இதை மத்தேயு 20:26-28 இல் மீண்டும் கூறினார்:

> உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் (மத்தேயு 20:26-28).

இயேசுவின் ராஜ்யம் விசித்திரமாகத் தோன்றியது. அவரைப் பின்பற்றுபவர்கள் துன்பப்படுவார்கள், இஸ்ரவேலின் ராஜாவே இஸ்ரவேல் மக்களால் கொல்லப்படுவார். வெற்றிக்கு முன் வெளிப்படையான தோல்வி வரும்.

20:17-34 இல் இயேசு எருசலேமுக்குச் செல்வதைத் தீவிரப்படுத்தும் எதிர்ப்பின் அடுத்தப் பிரிவு இருக்கிறது. தாம் பாடுபட்டு மரிக்க எருசலேமுக்குப் போகிறேன் என்று இயேசு தெளிவாக கூறினார். ராஜ்யத்தில் தனது குமாரர்களுக்கு அதிகாரம் தேடிய இரண்டு சீஷர்களின் தாயிடமிருந்து அவர் எதிர்ப்பை மட்டுமே எதிர்கொண்டார். பின்னர், இயேசு தனது வெற்றிப் பிரவேசத்தில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியபோது, எருசலேமுக்குள் திரளான மக்களால் வரவேற்கப்பட்டார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அடுத்த பகுதியில், 21:12-22:46 இல், இயேசு எருசலேம் மற்றும் ஆலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் செல்லும்போது எதிர்ப்பை எதிர்கொண்டார். அவர் பணம் மாற்றுபவர்களை வெளியேற்றினார், தேவனால் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைப் பற்றி எச்சரிக்கும் உவமைகளைச் சொன்னார். மேலும், இயேசுவும் மதத் தலைவர்களும் ராயனுக்கான வரிகள், மரித்தவர்களின் உயிர்த்தெழுதல், மிகப்பெரிய கட்டளை மற்றும் மேசியா யாருடைய குமாரன் என்ற கேள்வி குறித்து இறையியல் ரீதியாக விவாதித்தார்கள்.

ஆனால் இயேசு தம்முடைய எதிரிகளை மிகவும் சிறப்பாக கையாண்டார், இந்த வார்த்தைகளை நாம் மத்தேயு 22:46 இல் வாசிக்கிறோம்:

> அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை (மத்தேயு 22:46).

பரலோக ராஜ்யத்திற்கு எதிராக தீவிரமடைந்து வரும் எதிர்ப்பைப் பற்றிய மத்தேயுவின் கதையை ஆய்வு செய்தோம், இப்போது அதனுடன் வரும் சொற்பொழிவை நாம் பார்க்க போகிறோம்.

## எதிர்கால வெற்றி

இந்த பகுதி மத்தேயு 23:1–25:46 வரை நீண்டுள்ளது. இந்த உரையில், பரலோக ராஜ்யத்தின் எதிர்கால வெற்றியை இயேசு விவரித்தார்.

இந்த பகுதி மத்தேயு 23:1-38 இல் இயேசுவின் எதிரிகளுக்கு எதிரான ஏழு துயரங்கள் பற்றிய அறிவிப்புகளுடன் தொடங்குகிறது. இந்த சொற்பொழிவு குறிப்பாக பரிசேயர்கள், அவர்களின் தவறான போதனைகள், தேவனுடைய மக்களை துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் அவர்களின் பாசாங்குத்தனங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

இந்தச் சொற்பொழிவின் முடிவில், மத்தேயு 23:37-38 இல் இயேசு எருசலேமைப் பற்றிய தனது உணர்வுகளை இவ்வாறு சுருக்கமாகக் கூறினார்:

> எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்(மத்தேயு 23:37-38).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவின் சொற்பொழிவின் அடுத்த பகுதி பெரும்பாலும் ஒலிவ மலை சொற்பொழிவு என்று அழைக்கப்படுகிறது, அது மத்தேயு 24:1-25:46 இல் காணப்படுகிறது. ஒலிவ மலையில் இயேசு இந்த வார்த்தைகளை தம் சீஷர்களிடம் பேசியதால் இது பெரும்பாலும் ஒலிவ மலை சொற்பொழிவு என்று அழைக்கப்படுகிறது.

ஒலிவ மலை சொற்பொழிவை மூன்று முதன்மை பிரிவுகளாகப் பிரிக்கலாம்: 24:4-28 இல், பரலோக ராஜ்யம் பூமிக்கு வந்தாலும் அதன் மகிமை மற்றும் வல்லமையின் முழுமையில் இன்னும் வெளிப்படாத இந்த விசித்திரமான யுகத்தின் பிரசவ வேதனைகளை இயேசு விவரித்தார். 24:29-31 இல், அவர் ராஜ்யத்தின் முழுமையைப் பற்றி பேசினார், மனுஷகுமாரன் மேகங்களின் மீது வரும் நாளை முன்னறிவித்தார், மேலும் பரலோகராஜ்யம் அதன் எல்லா வல்லமையிலும் மகிமையிலும் வரும். பின்னர் 24:32-25:46 இல், வரவிருக்கும் மகிமையின் நாளைக் கவனமாகக் கவனிக்கும்படி இயேசு தம் மக்களை அறிவுறுத்தினார், ஏனென்றால் அது எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது.

> சரி, இயேசு எப்போது திரும்பப் போகிறார் என்பதைப் பொறுத்த வரையில், நாம் ஒரு குறிப்பிட்ட நேரத்தை குறிக்க முடியாதபடிக்கு அது இருக்குமாறு பார்த்துக்கொண்டார். அவர் திரும்பும் நாள் அல்லது மணிநேரம் யாருக்கும் தெரியாது என்றார். அவ**ர**து மனித இயல்பில் கூட அவர் திரும்பும் நேரம் அவருக்கு தெரியாது. எனவே, நாம் ஊகித்து அதை கண்டுபிடித்து விடலாம் என்று நினைப்பது இயேசுவுக்குக் கீழ்ப்படியாத காரியமாகிவிடும். ஆனால் அவர் திரும்புவது நெருங்கிவிட்டது என்பதற்கான அறிகுறிகளை நாம் எதிர்பார்க்கக்கூடாது, எதிர்நோக்கக்கூடாது, மற்றும் தேடக்கூடாது என்று சொல்ல முடியாது. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய போதனையின் முக்கிய நோக்கம் முதன்மையாக நம்மை நிதானப்படுத்துவதும், ஊக்குவிப்பதும், நம்பிக்கையைத் தருவதும், பரிசுத்த வாழ்க்கைக்கு நம்மை வழிநடத்துவதும், கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்ப்பதும் ஆகும். எனவே சரியான நேரம் நமக்குத் தெரியாவிட்டாலும், எந்த நேரத்திலும் அவர் திரும்பி வருவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும், இதனால் நாம் அவரை ஆவலுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்த்த முடியும்.
>
> Dr. கே. எரிக் தோனேஸ்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவர் திரும்பி வருவார் என்பதில் முழு நம்பிக்கை இருக்க வேண்டும். அவர் மீண்டும் வருவார் என்பதில் நாம் முழு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும், மேலும் அவர் தொடங்கிய அனைத்தையும் அவர் முடிப்பார். நாமும் உண்மையாக இருக்க வேண்டும். அப்போஸ்தலருடைய நடபடிகள் 1 இல் இயேசு புறப்பட்டுச் சென்றபோது, அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்தார்கள், "நீங்கள் எதற்காக வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? என்று தேவதூதன் கூறுகிறான். நீங்கள் சுவிசேஷத்தை தேசங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அவர் திரும்பி வருவார், ஆனால் நாம் மகா கட்டளையை நிறைவேற்றுவதில் பரபரப்பாக இருக்க வேண்டும். ராஜா வந்துவிட்டார் என்ற அறிவிப்பை தேசங்களுக்கு எடுத்துச் சொல்லி, நம் ராஜாவின் சேவையில் மும்முரமாக இருக்க வேண்டும். அவர் மீண்டும் வருகிறார். மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் அந்த ராஜ்யத்தில் பிரவேசிக்கிறவர்களை நாம் சீஷத்துவத்தில் நடத்த வேண்டும், அவர்கள் தேவனுடைய மகிமைக்காக வாழும்படிக்கு அல்லது அவர்கள் தேவனுக்கு ஏற்றபடி வாழும்படிக்கு அவர்களை வளர்க்க வேண்டும். நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் நாம் தேவனின் மகிமைக்காக வாழ வேண்டும், அவருடைய வருகையை நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டும், ஒவ்வொரு காலகட்டத்திலும், "கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று சபையுடன் சேர்ந்து கூற வேண்டும்.
>
> Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

அவருடைய சுவிசேஷத்தின் இந்த ஐந்தாவது பெரிய பிரிவில், யூதத் தலைவர்கள் இயேசுவை நிராகரித்ததாகவும், அவரைக் கொல்லவும் திட்டமிட்டதாகவும் மத்தேயு தெரிவித்தார். ஆனால் உலகில் உள்ள அனைத்து திட்டமிடல்களும் ராஜ்யத்தின் எதிர்கால வெற்றியைத் தடுக்க முடியாது என்பதை இயேசு தெளிவுபடுத்தினார். மேலும் அவர் சொன்னது சரிதான் என்பதை வரலாறு நிரூபிக்கிறது. யூதத் தலைவர்கள் அவரைக் கொன்றனர். ஆனால் அவரது ராஜ்யம் காலங்காலமாக வளர்ந்து வருகிறது. ஒரு நாள், வரலாறு கடைசி பகுதியையும் சரி என்று நிரூபிக்கும். இயேசு தம்முடைய ராஜ்யத்தை அதன் முழுமையிலும் கொண்டு வருவதற்கும், அவருடைய விசுவாசமுள்ள மக்களுக்கு ராஜ்யத்தின் இறுதி ஆசீர்வாதங்களை வழங்குவதற்கும், வல்லமையுடனும் மகிமையுடனும் மீண்டும் வருவார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# இயேசுவின் ஊழியத்தின் உச்சக்கட்டம்

மத்தேயு சுவிசேஷத்தின் கதை முடிவை மத்தேயு 26:1–28:20 இல் பார்க்க முடிகிறது. இங்கே, மத்தேயு மேசியா ராஜாவாவின் கைது, சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் இயேசுவின் ஊழியத்தின் உச்சக்கட்டத்தை விவரிக்கிறார்.

மத்தேயு சுவிசேஷத்தின் முடிவை நாம் ஆராயும்போது, மத்தேயுவின் ராஜ்யத்தை மையமாகக் கொண்ட மூன்று கருப்பொருள்கள் மீது கவனம் செலுத்துவோம், அவையாவன: மோதல், சீஷத்துவம் மற்றும் வெற்றியின் கருப்பொருள்கள். முதலில் மோதலின் கருப்பொருளுக்கு வருவோம்.

## மோதல்

இயேசு கொண்டுவந்த ராஜ்யம், யூதர்கள் மேசியா கொண்டுவருவார் என்று எதிர்பார்த்த ராஜ்யத்திலிருந்து மிகவும் வித்தியாசமானது, இது அவர்களை இயேசுவுடனும் அவருடைய ராஜ்யத்துடனும் நேரடி மோதலுக்கு வழிவகுத்தது. நாம் பார்த்தது போல், இந்த மோதல் மத்தேயு சுவிசேஷம் முழுவதும் தீவிரமடைகிறது, ஆனால் அது கதை முடிவில் முடிவடைகிறது. உதாரணமாக, 26:3-4 இல் இயேசுவுக்கு எதிரான யூதர்களின் சதியில் நாம் அதைப் பார்க்கிறோம்; 26:14-16, வசனம் 47, மற்றும் வசனங்கள் 57-68 இல் அவரது கைது மற்றும் விசாரணையில் நாம் இதைப் பார்க்கிறோம்; மற்றும் 27:20-25 இல் அவர் சிலுவையில் அறையப்படுவதற்காக அவர்கள் போட்ட கூக்குரலில் நாம் அதைப் பார்க்கிறோம். இயேசு சிலுவையில் அறையப்பட்டதற்கான பொறுப்பை யூதர்களே ஏற்றுக்கொள்ளும்போது அது ஒரு முடிவுக்கு வருகிறது. ஒரு உதாரணத்திற்கு, மத்தேயு 27:25 இல் உள்ள மத்தேயுவின் அறிக்கையைக் கவனியுங்கள்:

> அதற்கு ஜனங்களெல்லாரும்: ”இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக!” என்று சொன்னார்கள் (மத்தேயு 27:25).

இயேசு சிலுவையில் பாடுபட்டபோது, யூதர்கள் அவரை கேலி செய்தனர், இஸ்ரவேலின் மேசியா ராஜா என்று அவர் கூறியதை கேலி செய்தனர். மத்தேயு 27:41-42 இல் நாம் வாசிக்கிறபடி:

> அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி: ”மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும்!” (மத்தேயு 27:41-42).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முரண்பாடாக, யூதர்கள் இயேசுவை எதிர்த்தார்கள், அவர் தேவனுக்கு எதிராக காரியம் செய்தவர் என்றனர். மற்றும் சிங்காசனத்திற்காக ஏமாற்றுகிறார் என்பதன் அடிப்படையில், உண்மையில் அவர்கள் தங்களை இரட்சிக்க வல்லமையுள்ள ஒரே ராஜாவை நிராகரிக்கிறார்கள்.

மோதலின் கருப்பொருளைத் தவிர, சீஷத்துவத்தின் கருப்பொருள் மத்தேயுவின் முடிவுரையின் ராஜ்ய முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

## சீஷத்துவம்

குறிப்பாக, பாடுபடும் மேசியாவைப் பின்பற்றுவது எவ்வளவு கடினம் என்பதை மத்தேயு வலியுறுத்தினார். இயேசுவினுடைய ஊழியத்தின் இந்த முக்கியமான தருணத்தில் இயேசுவினுடைய சீஷர்களின் தோல்விகளை அறிக்கை செய்வதன் மூலம் அவர் இதை வலியுறுத்தினார். யூதாஸ் அவரை மத்தேயு 26:14-16 மற்றும் வசனங்கள் 47-50 இல் காட்டிக்கொடுத்தார், மேலும் அவர் 27:3-10 இல் இந்த காரியத்தை செய்ததற்காக தற்கொலை செய்து கொண்டார். 26:36-46 இல் கெத்செமனேயில் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் அவருடன் விழித்திருக்க தவறிவிட்டனர். 26:69-75 இல் இயேசுவைத் தனக்குத் தெரியாது என்று பேதுரு திரும்பத் திரும்ப மறுதலித்தார். கடைசியாக, 26:56 இல் இயேசுவின் சீஷர்கள் அனைவரும் அவரைக் கைவிட்டனர்.

உண்மை என்னவென்றால், இயேசுவைப் பின்பற்றுவது மிகவும் கடினம். பாடுபடும் ஒரு மேசியா ராஜாவை நாம் நம்புகிறோம், மேலும் அவர் நம்மையும் பாடுபடுவதற்கு அழைத்தார். நாம் அவருக்கு உண்மையாக இருந்தால், நாமும் பாடுகளையும் துன்பங்களையும் அனுபவிக்க நேரிடும், மேலும் நாம் வீழ்ந்து போக சோதிக்கப்படுவோம். பரலோகராஜ்யம் இன்னும் முழுமையாக வரவில்லை. இதன் காரணமாக, கிறிஸ்தவ வாழ்க்கையின் பல அம்சங்கள் இன்னும் வரவில்லை.

மோதல் மற்றும் சீஷத்துவத்தின் கருப்பொருள்களைக் கருத்தில் கொண்டு, ராஜ்யத்தின் வெற்றியின் கருப்பொருளுக்குத் திரும்பத் தயாராக இருக்கிறோம்.

## வெற்றி

வெற்றியின் கருப்பொருள் இயேசுவின் உயிர்த்தெழுதலில் தெளிவாகக் காணப்படுகிறது, இது மேசியா ராஜா தனது மக்களின் எதிரிகள் அனைவரையும் மரணத்தையும் வென்றார் என்பதற்கான சான்றாகும். மேலும் இயேசு பரமேறுவதற்கு முன் கூறிய கடைசி வார்த்தைகளில் வெற்றியின் கருப்பொருளையும் காண்கிறோம். மத்தேயு சுவிசேஷத்தில் பதிவுசெய்யப்பட்ட இயேசுவின் இறுதி வார்த்தைகள் மத்தேயு 28:18-20 இல் காணப்படுகின்றன, மேலும் அவை பொதுவாக மகா கட்டளை என்று அழைக்கப்படுகின்றன. அவர்

இல்லாத நேரத்தில் ஊழியம் செய்ய அவர்களை நியமித்தார். அவருடைய சீஷர்களுக்கு அவை கர்த்தரின் இறுதி அறிவுறுத்தல்களாக இருந்தன. இந்த அறிவுறுத்தல்கள் கிறிஸ்து அனைத்து ராஜ்ய அதிகாரத்தையும் தைரியமாக கோருவதில் இருந்து தொடங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மத்தேயு 28:18 இல் உள்ள இயேசுவின் பிரகடனத்தைக் கவனியுங்கள்.

> வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 28:18).

> இயேசு ஒருவரே அனைத்து ஆதிக்கத்தையும், அனைத்து அதிகாரத்தையும், சட்டப்பூர்வமாக உரிமை கோர முடியும். அவருடைய வல்லமை அழியாது ஏனெனில் அது வல்லமையும் அன்பும் கலந்ததாகும். அன்பினால் தூண்டப்பட்ட வல்லமை. அன்பால் கட்டுப்படுத்தப்பட்ட வல்லமை. பாருங்கள், உங்களிடம் அன்பு மட்டும் இருந்தால், உங்களுக்கு ஒரு நல்ல உணர்வு இருக்கும், ஆனால் எதையும் மாற்றும் வல்லமை உங்களிடம் இல்லாததால் நீங்கள் உதவியற்றவராக இருக்கலாம். அன்பு இல்லாமல் அதிகாரம் மட்டும் இருந்தால் அழிக்கவும் கொல்லவும் வெறுக்கவும் மட்டுமே முடியும். அன்பையும் வல்லமையையும் ஒன்றாகக் கொண்டுவருபவர் தேவனே. ”தேவன் உலகத்தை மிகவும் நேசித்தார், அவர் தம் குமாரனை அனுப்பினார்.” அவர் ஒருவரே அனைத்து அதிகாரங்களையும் சட்டப்பூர்வமாகக் கோர முடியும், ஏனென்றால் அவர் மட்டுமே இந்த பூமியில் ஒருபோதும் பாவம் செய்யவில்லை, ஒருபோதும் பொய் சொல்லவில்லை, ஒருபோதும் ஏமாற்றவில்லை. கொல்லப்பட்டு மரித்து புதைக்கப்பட்ட பிறகு, திரும்பி வந்தவரும் அவர் மட்டுமே. எனவே, அவர் உயிர்த்தெழுந்த கர்த்தர். இது மனித வரலாற்றின் புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும். அவர் தேசங்களுக்கு நம்பிக்கையைக் கொண்டுவருகிறார். எனவே, தேவனுடைய ராஜ்யம் மிகவும் வல்லமை வாய்ந்த வழிகளில் செயல்படுகிறது, அங்குதான் உலக சுவிசேஷம் மற்றும் தேசங்களை சீர்திருத்துவது ”பெரிய அடித்தளம்” என்று அழைக்கப்படுகிறது. பெரிய அடித்தளம் இல்லாமல் உங்களிடம் மகா கட்டளை இருக்காது. பின்னர் அவர் ”நான் முடிவு பரியந்தம் உங்களுடன் இருப்பேன்” என்கிற ஒரு பெரிய வாக்குத்தத்தத்துடன் அதை முடிக்கிறார். எனவே, கர்த்தரும் ராஜாவுமாகிய இயேசு அனைத்து அதிகாரமும் கொண்ட ஆட்சியாளர் ஆவார், எனவே நாம்

**சென்று** சீஷர்களை உருவாக்கி அவர்களுக்கு போதித்து அவரின் வல்லமையில் அவருடைய ஆட்சியை அறிவிக்கிறோம்.

Dr. பீட்டர் குஷ்மிக்

அனைத்து அதிகாரமும் வெற்றி பெற்ற ராஜாவுடையது. யூதர்கள் அவரை நிராகரித்தனர்; ரோமர்கள் அவரை சிலுவையில் அறைந்தனர்; அவர்கள் அனைவரும் அவரை கேலி செய்தார்கள். ஆனால் கல்லறையால் அவரைப் பிடித்து வைத்திருக்க முடியவில்லை, மேலும் உயிர்த்தெழுதல் மேசியா ராஜாவின் மாபெரும் வெற்றியாகும். அவர் மூலம் பரலோக ராஜ்யம் பூமிக்கு வந்தது. மத்தேயுவின் கூற்றுப்படி *அது* சுவிசேஷத்தின் நற்செய்தியாகும்.

மத்தேயு சுவிசேஷத்தின் பின்னணியையும் அதன் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தையும் இப்போது ஆராய்ந்துவிட்டோம், மத்தேயு வலியுறுத்திய சில முக்கிய கருப்பொருள்களைக் கருத்தில் கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

# முக்கிய கருப்பொருள்கள்

நம் பாடத்தின் இந்த பகுதியில், மத்தேயு தனது சுவிசேஷம் முழுவதும் வலியுறுத்திய 'இயேசுவின் ராஜ்யம் மற்றும் சுவிசேஷத்தின் பழைய ஏற்பாட்டு பாரம்பரியம் மற்றும் ராஜ்யத்தின் குடிகள்' ஆகிய இரண்டு முக்கிய கருப்பொருள்களில் நம் கவனத்தைத் திருப்புவோம்.

இயேசுவின் ராஜ்யம் மற்றும் சுவிசேஷத்தின் பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தைக் குறித்த மத்தேயுவின் முக்கியத்துவத்துடன் ஆரம்பிக்கலாம்.

## பழைய ஏற்பாட்டு பாரம்பரியம்

மத்தேயு சுவிசேஷம் உண்மையில் பழைய ஏற்பாடு இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்தது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்கான ஒரு கண்கவர் விவரம் ஆகும். இயேசு காட்சிக்கு வருகிறார், அவர் அவதரித்த இஸ்ரவேல் ஆவார். அவர் எகிப்துக்குச் செல்கிறார். அவர் சோதிக்கப்படுவதற்காக வனாந்தரத்திற்குச் செல்ல கட்டாயப்படுத்தப்படுகிறார். அவர் ஒரு மலைக்குச் சென்று மீண்டும் பிரமாணத்தை வழங்கத் தொடங்குகிறார். புதிய மோசேயின் இந்த கற்பனை படங்கள் அனைத்திற்கும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அல்லது அவதரித்த இஸ்ரவேலுக்குமான மூலமும் நோக்கமும் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. ஏனென்றால், இஸ்ரவேல் அழைக்கப்பட்டபோதும் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டபோதும் அதன் தெரிந்தெடுத்தலானது ஒருபோதும் அனுபவிக்கப்பட வேண்டிய ஒரு பாக்கியமாக இருக்கவில்லை. தேசங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டிய பொறுப்பு இஸ்ரவேலுக்கு இருந்தது. ஆயினும்கூட, இஸ்ரவேலின் நீண்ட மற்றும் வியத்தகு பாவ வரலாற்றின் காரணமாக, அது ஒருபோதும் தனக்காகவோ அல்லது தேசங்களுக்காகவோ அழைக்கப்பட்டதாக இருக்க முடியாது. எனவே, இங்கே நீங்கள் இயேசுவை தேவனின் குமாரனாக, இஸ்ரவேல் அவதாரமாக, காட்டப்படுகிறார், மேலும் இஸ்ரவேல் தனக்காகவோ அல்லது தேசங்களுக்காகவோ செய்ய முடியாததை அவர் இஸ்ரவேலுக்காக செய்கிறார். இயேசுவை இங்கே அல்லது அங்கே ஒரு வசனத்தில் கண்டறிவதை விட, அவரை எப்படி பழைய ஏற்பாடு எதிர்நோக்குகிறது என்பதைப் பற்றிய ஒரு கடினமான, ஆழமான வாசிப்பை இது தருகிறது என்று நினைக்கிறேன். இது இஸ்ரவேலின் முழு வரலாறு ஆகும். இது இஸ்ரவேலின் தெரிந்தெடுத்தல் ஆகும். இயேசுவின் வருகையை எதிர்பார்க்கும் இஸ்ரவேலின் முழு தோல்வியையே மத்தேயு குறிப்பாக தனது முதல் ஐந்து அல்லது ஆறு அதிகாரங்களில் எடுத்துரைக்கிறார்.

Dr. மார்க் கிக்னில்லியட்

எல்லாவற்றிற்கும் மேலாக, உடைக்க முடியாத அன்பின் கயிறுகளால் தேவன் தம் மக்களுடன் தன்னைப் பிணைத்துக்கொள்கிறார் என்பதே வேதாகமத்தின் கதையாகும். ஆசீர்வாதத்தில் அவர்களுடன் இருப்பேன் என்ற வாக்குத்தத்தத்தைக் காப்பாற்றுவதில் அவர் உண்மையாயிருக்கிறார் என்பதே கதை. அதனால்தான் மத்தேயு தனது தலைமுறை தேவ ஜனங்களிடம், அவர்கள் இன்னும் பண்டைய வாக்குத்தத்தங்களை நம்ப முடியும் என்றும், இயேசுவில் தேவன் செயல்படுகிறார் என்றும் அவர்கள் இன்னும் நம்ப முடியும் என்றும் கூறினார். மேசியா ராஜாவான இயேசு கிறிஸ்துவின் கூற்றுகள் மற்றும் ஊழியத்தை ஆதரிப்பதற்காக பழைய ஏற்பாட்டு காரியங்களை கொண்டு வருவதில் மத்தேயு மிகவும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

இயேசுவின் ராஜ்யம் மற்றும் சுவிசேஷத்தின் பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தை மத்தேயு விளக்கும் ஐந்து வழிகளை சுருக்கமாக ஆய்வு செய்வோம், அவையாவன: மத்தேயுவின் பழைய ஏற்பாட்டின் மேற்கோள்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மற்றும் குறிப்புகள், பரலோக ராஜ்யத்தின் மீதான அவரது முக்கியத்துவம், இயேசுவை மேசியா ராஜாவாக விவரித்தல், நம்பிக்கையற்ற யூதத் தலைவர்களுடன் இயேசுவின் மோதல் மற்றும் இயேசுவின் பணிவு மற்றும் மென்மை. மத்தேயுவினுடைய பழைய ஏற்பாட்டின் மேற்கோள்கள் மற்றும் குறிப்புகளுடன் ஆரம்பிக்கலாம்.

## மேற்கோள்கள் மற்றும் குறிப்புகள்

மற்ற எந்த சுவிசேஷ எழுத்தாளரையும் விட மத்தேயு பழைய ஏற்பாட்டை அதிகம் மேற்கோள் காட்டினார். பழைய ஏற்பாட்டை மத்தேயு எத்தனை முறை மேற்கோள் காட்டினார் என்பதை அறிஞர்கள் விவாதித்தனர், ஆனால் நிச்சயமாக அவர் குறைந்தது 40 முறை மேற்கோள் காட்டினார், மேலும் அவர் அதை பல முறை குறிப்பிட்டிருக்கிறார்.

மத்தேயு பொதுவாக பயன்படுத்தும் ஒரு உத்தி, ”அது நிறைவேறும் படிக்கு” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியது ஆகும். பழைய ஏற்பாட்டிற்கும் இயேசுவின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களுக்கும் இடையே வெளிப்படையான தொடர்புகளை ஏற்படுத்த மத்தேயு இந்த சொற்றொடரைப் பயன்படுத்தினார்.

உதாரணமாக, மத்தேயு 8:17 இல் மத்தேயு எழுதியதைக் கவனியுங்கள்:

> ”அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்” என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது (மத்தேயு 8:17).

இந்த பழைய ஏற்பாட்டின் மேற்கோள்களுக்கு முன், மத்தேயு இயேசுவின் பல குணப்படுத்துதல்களை குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவருடைய வாசகர்கள் இயேசுவை ஒரு குணப்படுத்துபவராக பார்க்க அவர் விரும்பவில்லை. மாறாக, பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்காக இயேசு மக்களைக் குணப்படுத்தினார் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.

> மத்தேயுவின் பார்வையில் முக்கியமானது என்னவோ அது நம் பார்வையிலும் முக்கியமானதாக இருக்க வேண்டும் என்று நான் கூறுவேன். அது என்னவென்றால், மக்கள் ஏங்கிக்கொண்டிருந்ததும் காத்துக்கொண்டிருந்ததுமான வரவிருக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் வெளிப்பாடு இயேசுவில் இருந்தது. எனவே, அவர்கள் ஒரு வரலாற்று வரைபடத்தில் ஒரு துல்லியமான கணிப்பை நிறைவேற்ற ஒரு மேசியாவைத் தேட வேண்டிய அவசியமில்லை, ஆனால்

> அவர்கள் சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும், மறுசீரமைப்பிற்காகவும், இரட்சிப்பிற்காகவும் ஏங்கினார்கள். மேலும் பழைய ஏற்பாடு தேவனுடைய ராஜ்யம் வரும்போது, அது ஒரு குறிப்பிட்ட நபரான மேசியாவால் அறிவிக்கப்படும் என்றும், அந்த அறிவிப்பில், தேவனின் ஆட்சி தொடங்கும் என்றும் போதித்தது. பழைய ஏற்பாடு வாக்குத்தத்தம் செய்த அனைத்து மறுசீரமைப்பு மற்றும் இரட்சிப்பு மற்றும் ஆசீர்வாதங்கள் ஆகியவை நடைமுறைக்கு வரத் தொடங்கும். எனவே, பொதுவாக அப்போஸ்தலர்களும், குறிப்பாக மத்தேயுவும், இந்த கணிப்புகள் அனைத்தையும் யார் நிறைவேற்றினார்கள் என்பதைப் பார்க்க, தங்கள் மடியில் ஒரு விளக்கப்படத்துடன் வெறுமனே உட்காரவில்லை, ஆனால் அவர்கள் பார்த்த ஒரு நபரின் படைப்புகளில், அவரின் போதனைகளில், அவருடைய குணாதிசயங்களில், மற்றும் அவரைப் பற்றிய அனைத்திலும், தேவனுடைய ராஜ்யம் வெளிப்ப**டை**யாகத் தெரிந்தது. உண்மையில், தேவனுடைய ராஜ்யம் இயேசுவில் இருந்தது, அவரால் அறிவிக்கப்படவில்லை, ஆனால் அவர் அந்த ராஜ்யத்தைக் கொண்டு வந்தார். எனவே, இயேசுவின் வல்லமை மற்றும் போதனை மற்றும் செயல்பாட்டின் அனுபவத்திலிருந்து, மத்தேயு உட்பட எல்லா அப்போஸ்தலர்களும் பழைய ஏற்பாட்டில் இயேசு எவ்வாறு எதிர்பார்க்கப்பட்டார் என்பதைப் பார்க்க பழைய ஏற்பாட்டுக்குத் திரும்பிச் சென்றனர். இயேசுவை அனுபவிக்கும் நிலைப்பாட்டில் இருந்து அவர்கள் தங்கள் பழைய ஏற்பாட்டை வாசித்தபோது, பழைய ஏற்பாட்டு வேதாகமம் அவரைக் குறித்து குறிப்பாக சாட்சியளித்திருப்பதை அவர்கள் கண்டனர். எனவே, நாம் பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது, நம்முடைய கண்ணில் நகைக்கடையில் உள்ள பெரிதாகக் காட்டும் கண்ணாடியை வைத்து வாசிக்காமல், சுவிசேஷங்களின் முக்கிய விஷயமாக வரும் கிறிஸ்துவையே சந்திக்க விரும்புகிறோம். அவர் தேவனுடைய ராஜ்யத்தின் சாட்சியாகவும் உருவகமாகவும் வருகிறார்.
>
> — Rev. மைக்கேல் ஜே. குளோடோ

இயேசுவின் பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தின் மீதான மத்தேயுவின் முக்கியத்துவத்தைக் காணக்கூடிய இரண்டாவது வழி, பரலோக ராஜ்யத்தின் மீது அவர் வலியுறுத்துவதில் காணப்படுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பரலோக ராஜ்யம்

பழைய ஏற்பாட்டில், தேவன் தம் ஜனங்களை ஆசீர்வதிப்பார் என்று வாக்குத்தத்தம் அளித்திருந்தார்; தாவீதின் ராஜ குமாரன் மூலமாக அவருடைய ஆசீர்வாதம் வரும். இயேசுவில் தேவனுடைய ராஜ்ய ஆசீர்வாதம் அந்த பண்டைய வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றம் என்று மத்தேயு அறிவித்தார்.

மத்தேயு சுவிசேஷத்தில், இயேசுவே பொதுவாக இந்த உண்மையை மக்களுக்கு நினைவூட்டுகிறார். தேவன் தனது பழைய ஏற்பாட்டு ராஜ்ய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர் என்று அவர் தொடர்ந்து கற்பிக்கிறார். அது பாடுகளை உள்ளடக்கியிருந்தாலும், பழைய ஏற்பாட்டில் உள்ள தீர்க்கதரிசனங்கள் சொல்லும் அனைத்தையும் அவர் செய்யவில்லை என்றாலும், இயேசுவால் தனது ராஜ்யத்தை நற்செய்தியாக முன்வைக்க முடிந்தது. இயேசு இறுதியில் அவர் தொடங்கிய அனைத்தையும் முடிக்க திரும்புவார் என்றும் இறுதியில் தேவன் வாக்குத்தத்தம் செய்த அனைத்தையும் நிறைவேற்ற அவர் திரும்புவார் என்றும் பழைய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய வார்த்தையை தனது ஜனங்கள் நம்ப வேண்டும் என்று இயேசு வலியுறுத்தினார்.

உண்மையில், பரலோக ராஜ்யம் பற்றிய பழைய ஏற்பாட்டில் உள்ள இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை பழைய ஏற்பாட்டிற்கு அடிபணியவும் அதை நம்பவும் தொடர்ந்து அழைப்பு விடுத்தார். தேவனுடைய ராஜ்யத்தின் சக குடிமக்களாக ஒருவரையொருவர் நேசிக்கவும் ஒருவருக்கொருவர் சேவை செய்யவும் அவர் அவர்களுக்கு அறிவுறுத்தியதன் அடிப்படை இதுவாகும்.

பரலோகம் மற்றும் பூமியின் தேவன் அனைத்து வரலாற்றையும் கட்டுப்படுத்துகிறார் மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு உண்மையுள்ளவர் என்ற அறிவு, கிறிஸ்துவில் அவருடைய வாக்குத்தத்தங்கள் இன்னும் நல்லவை என்று நம்புவதற்கு ஒவ்வொரு காலத்திலும் நம்மையும் அவருடைய மக்களையும் ஊக்குவிக்க வேண்டும். ஒரு நாள் தேவன் உண்மையில் எல்லாவற்றையும் புதியதாகவும் சரியானதாகவும் ஆக்குவார் என்று நம்புவதற்கு அவை நம்மை ஊக்குவிக்க வேண்டும். தேவன் தம்முடைய ராஜ்யத்தை முழுமையாகக் கொண்டுவருவதற்காக நாம் பொறுமையுடன் காத்திருக்கும்போது அவை நமக்குப் பலத்தையும் சகிப்புத்தன்மையையும் அளிக்க வேண்டும்.

இயேசுவின் ராஜ்யம் மற்றும் சுவிசேஷத்தின் பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தை மத்தேயு வலியுறுத்தியது மூன்றாவது வழி, இயேசு எதிர்பார்க்கப்படும் மேசியா ராஜா என்பதை வலியுறுத்துவதாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## மேசியா ராஜா

இந்தப் பாடத்தில் இயேசுவின் வம்சவரலாறைப் பற்றி நாம் விவாதித்தபோது இந்தக் கருத்தை முன்பு குறிப்பிட்டோம். மற்ற அனைத்து சுவிசேஷ எழுத்தாளர்களையும் விட மத்தேயு இயேசுவை "தாவீதின் குமாரன்" என்று அடிக்கடி அழைத்தார் என்பதும் காணப்படுகிறது. யூதர்களின் ராஜா, இஸ்ரவேலின் ராஜா, உங்கள் ராஜா மற்றும் ராஜா உள்ளிட்ட பல ராஜ பட்டங்களை இயேசுவுக்கு மத்தேயு பயன்படுத்தினார். மேலும், மத்தேயு இயேசுவுக்கு ராஜ பட்டங்களைப் பயன்படுத்தும் சில வசனங்கள் வேறு எந்த சுவிசேஷத்திலும் இல்லை. உதாரணமாக, மத்தேயு 2:2 இல், மத்தேயு இந்த கேள்வியை சாஸ்திரிகளிடமிருந்து அறிக்கை செய்தார்:

> யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? (மத்தேயு 2:2).

வேறு எந்த சுவிசேஷத்திலும் இந்த வசனம் இல்லை, அல்லது இயேசுவின் மேசியா அரசாட்சிக்கு இது ஒரு பெரிய முக்கியத்துவம் ஆகும்.

இயேசுவின் ராஜ்யம் மற்றும் சுவிசேஷத்தின் பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தின் மீதான நான்காவது வலியுறுத்தல், விசுவாசமற்ற யூதத் தலைவர்களுடன் நிகழ்ந்த இயேசுவின் மோதல் ஆகும்.

## விசுவாசிக்காத யூத தலைவர்கள்

இஸ்ரவேலில் இருந்த பல தலைவர்களுடன் நிகழ்ந்த இயேசுவின் மோதல் இயேசு மேசியா அல்ல என்பதை நிரூபித்தது என்பதை ஆரம்ப வாசகர்கள் நினைக்க வாய்ப்புண்டாகி இருக்கலாம். அவர்கள் இந்த எண்ணத்தைப் பெற்றுவிடக்கூடாது என்பதை உறுதிப்படுத்த, யூதத் தலைவர்கள் விசுவாசமில்லாமல் இருந்தபோதிலும் தேவன் இயேசுவின் மூலம் தம் வாக்குத்தத்தங்களைக் காப்பாற்றுகிறார் என்பதை மத்தேயு தெளிவுபடுத்தினார்.

காலங்காலமாக, பரிசேயர்கள் மற்றும் நியாயப்பிரமாண போதகர்களின் போதனைகளை இயேசு நிராகரித்தார். மத்தேயு 9:14-17 இல் ஒய்வுநாளில் உபவாசம் இருத்தல், 12:1-13 இல் ஒய்வு நாள், 15:1-20 இல் கை கழுவுதல் ஆகிய அவர்களின் கருத்துக்களை அவர் சரிப்படுத்தினார். மேலும் மலைப் பிரசங்கத்தின் பெரும்பகுதி - குறிப்பாக 5:17-48 தேவனின் நியாயப்பிரமாணத்தைப் பற்றிய யூதர்களின் பார்வையுடனும் அந்தச் பிரமாணத்தை இயேசு நிறைவேற்றியதுடனும் வேறுபடுகிறது.

> மலைப் பிரசங்கத்தில், "இப்படி பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள், ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்..." என்ற வார்த்தைகளை இயேசு சொன்னபோது சில நேரங்களில் மக்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். இயேசு போதித்தது பழைய ஏற்பாட்டுடன் முரண்படுகிறதோ என்று நினைத்திருப்பார்கள். ஆனால், பழைய ஏற்பாட்டில் தேவன் சொன்னது எப்படி பல்வேறு வேத அறிஞர்கள் மற்றும் போதகர்களால் காலங்காலமாக விளக்கப்பட்ட சில வழிகளை இயேசு மறுக்கிறார் என்பதே மிகத் தெளிவான வாசிப்பு வழி என்று நான் நினைக்கிறேன். தேவனுடைய பிரமாணத்தை சரியாக விளக்குவதற்கும், தேவனுடைய பிரமாணத்தில் எழுதப்பட்டதை எடுத்துக்கொண்டு, அந்த நாளில் அதைக் கேட்பவர்களுக்குப் பயன்படுத்துவதற்கும் சரியான திறன் கொண்டவராக தன்னை அமைத்துக்கொள்கிறார்.

Rev. Dr. சைமன் வைபர்ட்

இயேசு மலைப்பிரசங்கத்தில் இந்த சொற்றொடரைப் பயன்படுத்தி, ”நீங்கள் இப்படி கேட்டீர்கள், ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்…” என்று பேசும்போது, பழைய ஏற்பாட்டு பிரமாணம் இப்போது ரத்து செய்யப்படுகிறது என்று அவர் கூறவில்லை. உண்மையில், ”நான் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்தேன்” என்று அவர் மிகவும் வெளிப்படையாக கூறுகிறார். ஆனால் இயேசு என்ன செய்கிறார் என்றால், அவர் நன்கு அறியப்பட்ட ரபீக்களின் நுட்பத்தைப் பயன்படுத்துகிறார், நியாயப்பிரமாண போதகர்கள் தங்கள் சொந்த கற்பித்தல் அதிகாரத்தைப் பற்றி பேச இதை பயன்படுத்துகிறார்கள். ”நியாயப்பிரமாணத்தின் போதனைகளைப் பற்றி பாரம்பரியத்தில் உள்ள வெவ்வேறு நபர்கள் இதைச் சொல்வதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்…” மேலும் இது தற்போதைய அதிகாரத்தை விட கூடுதல் அதிகாரத்துடன் வருகிறது. எனவே, இந்த நன்கு அறியப்பட்ட கற்பித்தல் நுட்பத்துடன் இயேசு தனது கற்பிக்கும் அதிகாரத்தை நிறுவுகிறார். பழைய ஏற்பாட்டு சட்டத்தை தள்ளுபடி செய்யாமல், இறையியல் ரீதியாகவும், கிறிஸ்தவ ரீதியாகவும் மிக முக்கியமான ஒன்றைக் கூறுவது அவசியம், அதாவது ”எனக்கும் பிரமாணத்தைப் பற்றிய எனது போதனைக்கும் சம்பந்தமாக பழைய ஏற்பாட்டு பிரமாணத்தை விளக்குவது முக்கியம்.”



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

இல்லை, இயேசு பழைய ஏற்பாட்டுடன் முரண்படவில்லை. ஆனால் மத்தேயு சுவிசேஷத்தில் நாம் காணும் கருப்பொருள்களில் ஒன்று, இயேசு புதிய மோசே, மேலும் அவர் மோசேயை விட உயர்ந்தவர் என்பதுதான். எனவே, மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு வெளிப்பாடு நம்மிடம் உள்ளது, இது தேவனின் அதிகாரப்பூர்வ வார்த்தையாகும், ஆனால் இயேசு நியாயப்பிரமாணத்தின் சர்வாதிகார வியாக்கியான அறிஞராக இருக்கிறார். மலைப் பிரசங்கத்தில் நாம் காணும் பல மோசே என்ன பொருள் கொண்டார் என்பதை துல்லியமாக விளக்குகின்றன. எனவே, “கொலை செய்யாதிருப்பாயாக” என்ற கட்டளையை இயேசு ஒழிக்கவில்லை. கோபத்தில்தான் கொலை ஆரம்பமாகிறது என்பதை எளிமையாக நமக்கு விளக்குகிறார். அந்த பகுதி எவ்வாறு தொடங்குகிறது என்பதை நினைவில் கொள்க? ”நான் நியாயப்பிரமாணத்தை அழிக்க வரவில்லை, அதை நிறைவேற்ற வந்தேன்” என்று இயேசு கூறுகிறார், இதை நியாயப்பிரமாணத்தின் சரியான விளக்கமாக நான் நினைக்கிறேன். ஆனால் அவர் உண்மையில் நியாயப்பிரமாணத்தின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றுவதாக வாதிடுகிறார் என்று நான் நினைக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் வருகை மற்றும் அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மற்றும் அவரது ஊழியத்தின் வெளிச்சத்தில் நியாயப்பிரமாணம் விளக்கப்பட வேண்டும். இயேசு பழைய ஏற்பாட்டு பிரமாணத்தை ஒழிக்கவில்லை, ஆனால் அவர் அதை நிறைவேற்றுகிறார் என்று நாம் அவரை புரிந்து கொள்கிறோம்.

Dr. தாமஸ் ஆர். ஸ்கிரைனர்

இயேசு உண்மையில் பழைய ஏற்பாட்டின் மேசியாவின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றினார். ஆனால் பல யூதர்கள் அவரை நிராகரித்தனர், ஏனெனில் அவர்களின் எதிர்பார்ப்புகள் பழைய ஏற்பாட்டுடன் முழுமையாக ஒத்துப்போகவில்லை. இயேசுவைப் பின்பற்ற முயற்சிக்கும் அனைவருக்கும் அவர்களின் தவறான புரிதல்கள் எச்சரிக்கையாக இருக்கின்றன. தேவனின் கிரியை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றிய நமது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சொந்த எண்ணங்கள் நம் பார்வையை மறைக்க அனுமதிப்பது எளிது என்று அவர்கள் எச்சரிக்கை கொடுக்கிறார்கள். தேவன் என்ன செய்ய முடியும் என்பதற்கு செயற்கையான வரம்புகளை வைக்க வேண்டாம், ஆனால் நம் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் அவர் வரையறுக்க அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் எச்சரிக்கை கொடுக்கிறார்கள்.

இயேசுவின் பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தை மத்தேயு வலியுறுத்திய ஐந்தாவது வழி, இயேசுவின் பணிவு மற்றும் சாந்தம் பற்றிய அவரது விளக்கத்தில் தெளிவாகத் தெரிகிறது.

## தாழ்மை மற்றும் சாந்தம்

இயேசு காலத்து யூதர்கள், பழைய ஏற்பாட்டின்படி, தேவன் தம்முடைய மக்களை விடுவிப்பதற்காக தம் வலிமைமிக்க வீரரை அனுப்புவார் என்பதை சரியாகப் புரிந்திருந்தனர். ஆனால் தேவனின் வலிமைமிக்க விடுதலையானது, தம்முடைய ஜனங்களுக்காக அவர் கொண்டிருந்த மென்மையான இரக்கத்தில் வேரூன்றியுள்ளது என்று மத்தேயு வலியுறுத்தினார். மேலும் அவர் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்து இந்தக் கருத்தைக் கூறினார்.

உதாரணமாக, மத்தேயு 11:29 இல், இயேசு இந்த வார்த்தைகளால் அதிக பாரமுள்ளவர்களை அழைத்தார்:

> நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத்தேயு 11:29).

இங்கே, மேசியா தம் மக்களுக்கு இளைப்பாறுதலை அளிப்பார் என்பதை நிரூபிக்க இயேசு எரேமியா 6:16 ஐ மேற்கோள் காட்டினார். இதேபோல், மத்தேயு 12:15-21 இல், மத்தேயு இயேசுவின் இரக்க குணமளிக்கும் ஊழியத்தைக் குறித்து பேசினார், மேலும் இயேசு என்ன செய்கிறார் என்பதை விளக்க ஏசாயா 42:1-4 ஐ மேற்கோள் காட்டினார். மத்தேயு 12:19-20 இல் உள்ள இயேசுவின் விளக்கத்தைக் கவனியுங்கள்:

> வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார்; அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை. அவர் நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப்பண்ணுகிறவரைக்கும், நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கி எரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார் (மத்தேயு 12:19-20).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசு கடுமையான இராணுவ ராஜா அல்ல, பல யூதர்கள் ரோமுக்கு எதிரான போரில் அவர் அவர்களை வழிநடத்த வேண்டுமென எதிர்பார்த்தனர். மாறாக, அவர் சாந்தமாகவும் இரக்கமுள்ளவராகவும் இருந்தார். பழைய ஏற்பாட்டிற்கு இணக்கமாக, மத்தேயு இயேசுவை வெற்றிகொள்ளும் ராஜாவாகவும் தேவனுடைய மக்களின் அதிகாரமிக்க போதகராகவும் சித்தரித்தார். அதே சமயம், இயேசு தாழ்மையான, இரக்கமுள்ள ராஜா என்று மத்தேயு வலியுறுத்தினார். நம்முடைய சொந்த வாழ்க்கையிலும் ஊழியங்களிலும் இயேசுவைப் பின்பற்றுவதற்கான அழைப்பு, இயேசு நமக்கு உதாரணமாக காட்டிய அதே வகையான இரக்கத்துடன் சத்தியத்தைப் பேசுவதற்கு நம்மை சவால் செய்கிறது.

மத்தேயு இயேசுவினுடைய ராஜ்யத்தின் பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தையும் சுவிசேஷத்தையும் பல வழிகளில் வலியுறுத்தினார். அதே நேரத்தில், சராசரி எதிர்பார்ப்புகளை மீறும் வகையில், பண்டைய எதிர்பார்ப்புகள் அனைத்தையும் இயேசு நிறைவேற்றினார் என்பதை அவர் தெளிவுபடுத்தினார். அவர் அவற்றை நிறைவேற்றினார் என்பதே நற்செய்தி தான். இயேசு பரலோக ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவந்ததால், ராஜ்யம், நியாயப்பிரமாணம் மற்றும் குறிப்பாக ராஜா என அனைத்தும் நிறைவேறி விட்டன.

இயேசுவின் ராஜ்யம் மற்றும் சுவிசேஷத்தின் பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தைப் பார்த்து, தேவனுடைய ஜனங்கள் என்கிற கருப்பொருளைக் கருத்தில் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்.

## தேவனுடைய ஜனங்கள்

மத்தேயு சுவிசேஷத்தில், மற்ற வேதாகம புத்தகங்களில் உள்ளதைப் போலவே, தேவனுடைய மக்கள் தேவனுக்கு சொந்தமானவர்கள் ஆவார்கள், ஒரு மதிப்புமிக்க உடைமையாக அவர்களை அவர் வைத்திருக்கிறார் மற்றும் அவர் ராஜாவாக ஆளும் விசேஷித்த தேசமாக இருக்கிறார்கள். மேலும் அவர்கள் தேவனுடன் நேரடியாக உறவுகொள்வது மட்டுமல்ல; அவர்கள் அவரைச் சேர்ந்த அனைவருடனும் நெருங்கிய உறவில் உள்ளனர்.

தேவனுடைய ஜனங்கள் என்ற கருப்பொருளை மூன்று பகுதிகளாக ஆராய்வோம். முதலில், மத்தேயு தேவனுடைய மக்களை சபையாக அடையாளப்படுத்துவதைப் பார்ப்போம். இரண்டாவதாக, அவர் அவர்களை "தேவனுடைய குடும்பம்" என்றும் அழைப்பதைக் காண்போம். மூன்றாவதாக, தேவனுடைய ஜனங்கள் இயேசுவிடமிருந்து பெற்ற அழைப்பைப் பற்றி சிந்திப்போம். சபை தேவனுடைய ஜனங்கள் என்ற கருத்துடன் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## சபை

பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் தேவனுடைய ஜனங்களாக இருந்தனர். ஆனால் புதிய ஏற்பாட்டில், தேவனுடைய மக்கள் பொதுவாக "சபை" என்று அழைக்கப்படுகிறார்கள். "சபை" என்பதற்கான நமது நவீன சொல், மத்தேயுவில் *எக்ளசியா* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில், எக்ளசியா என்பது எபிரெய வார்த்தையான கஹால் என்பதன் மொழிபெயர்ப்பாகும், இதை எபிரெய பழைய ஏற்பாடு பொதுவாக இஸ்ரவேல் மக்களின் கூட்டம் அல்லது சபையைக் குறிக்கப் பயன்படுத்தியது. சொல்லகராதியில் இஸ்ரவேலின் "சபை" என்பது கிறிஸ்தவ "சபை" என்று மாறியதற்கு இயேசுவும் மத்தேயுவும் கிறிஸ்தவ சபையை இஸ்ரவேலின் தொடர்ச்சியாவே பார்த்தார்கள் என்பதை நிரூபிக்கிறது.

பழைய ஏற்பாட்டில் *கஹால்* அல்லது "சபை" என்ற எபிரெய வார்த்தையின் பயன்பாட்டைக் கவனியுங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் லேவியராகமம் 16:33; எண்ணாகமம் 16:47; நியாயாதிபதிகள் 20:2; மற்றும் சங்கீதம் 22:22 இல் "சபை" என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்; . உண்மையில், பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களின் கூட்டம் மிகவும் முக்கியமானது, ஏனெனில் கடைசி நாட்களில் தேவனுடைய மக்கள் மீட்கப்படுவார்கள் என்று முன்னறிவித்தபோது யோவேல் தீர்க்கதரிசி இஸ்ரவேலை அடையாளம் காண பயன்படுத்திய பெயர்களில் இது ஒன்றாகும். யோவேல் 2:16 இல் அவர் இவ்வாறு அறிவித்தார்:

> ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள் (யோவேல் 2:16).

இந்த வசனத்தின் எபிரெய மூலத்தில், "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை *கஹால்* ஆகும். ஆனால் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில், எக்ளசியா என்கிற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் பொதுவாக "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மத்தேயு 16:18 இல் இயேசுவிடமிருந்து வந்த வார்த்தைகளை பதிவு செய்ய மத்தேயு இதே மொழியைப் பயன்படுத்தினார்:

> நான் என் சபையை கட்டுவேன் (மத்தேயு 16:18).

இங்கே, இயேசு தனது சபையைக் கட்டுவதாகக் கூறினார், அதாவது அவரது *கஹால்* அல்லது கடைசி நாட்களில் அவரது சபையை காட்டுவதாகக் கூறி யோவேலின் தீர்க்கதரிசனத்தை எதிரொலித்தார்.

> மத்தேயு சுவிசேஷத்தில் இயேசு தனது சபையைக் கட்டுவேன் என்று கூறுகிறார். கிரேக்க புதிய ஏற்பாட்டில் உள்ள சபை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> என்று பொருள் தரும் எக்ளசியா என்ற வார்த்தை, உண்மையில் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களின் கூட்டமான கஹால் பற்றிய யோசனையை வெளிப்படுத்த பயன்படுத்தப்பட்ட கிரேக்க சொல் என்பதை நினைவில் கொள்வது ஒரு நல்ல தொடக்க புள்ளியாக இருக்குமென்று நான் நினைக்கிறேன், அதனால் புதிய ஏற்பாட்டு சபை பழைய ஏற்பாட்டு சபையின் ஒரு தொடர்ச்சியாகும்.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

மத்தேயு 16 இன் நிகழ்வுகள் இயேசு தன்னை ஒரு மேசியா ராஜா என்று கூறுவதற்கு எதிர்ப்பு வளர்ந்து வரும் நேரத்தில் நடந்ததை நாம் ஏற்கனவே பார்த்தோம். இஸ்ரவேல் சபையுடன் இயேசு தம் சீஷர்களை குறிப்பிட்டதற்கான காரணங்களில் இந்த எதிர்ப்பும் ஒன்றாகும். அவருடைய மேசியா சபை அல்லது சபையைக் கட்டுவதற்கான தனது திட்டத்தில் அவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இயேசுவின் வார்த்தைகளும் சபை அவருக்கு சொந்தமானது என்பதை தெளிவுபடுத்தியது. அது பேதுருவுக்கு சொந்தமானது அல்ல. அது இஸ்ரவேலுக்கு சொந்தமானது அல்ல. இது அதன் உறுப்பினர்களுக்கு சொந்தமான ஒரு ஜனநாயக நிறுவனம் அல்ல. அது மேசியாவின் சபையாகும். யோசேப்பிடம் தேவதூதன் கூறிய வார்த்தைகளை தெரிவித்தபோது மத்தேயு தனது சுவிசேஷத்தின் அறிமுகத்தில் ஏற்கனவே கூறியிருந்தார். 1:21 இல் மத்தேயுவின் பதிவைக் கவனியுங்கள்:

> அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் (மத்தேயு 1:21).

இந்த வசனத்தில், இயேசு பிறப்பதற்கு முன்பே, மரியாளின் வயிற்றில் உள்ள குழந்தை, தேவனின் மக்கள் அனைவருக்கும் சொந்தமான மேசியா என்று தூதன் யோசேப்புக்கு உறுதியளித்தான். அவர் அவர்களின் ராஜா, அவர்கள் அவருடைய மக்கள்.

> எனவே நாம் இயேசுவைத் தனித்தனியாகப் பின்பற்றுபவர்கள் மட்டுமல்ல, இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலமும், ஆவியை அவருடைய புதிய சபையாகிய நமக்குக் கொடுத்ததன் மூலமும் கொண்டுவந்த இந்தப் புதிய சிருஷ்டிப்பின் உருவகமாக இருக்கிறோம். நாம் சபையில் தேவனுடைய ராஜ்யத்தின் பிரசன்னமாக இருக்கிறோம். அங்கே மக்கள் இரக்கத்தையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மன்னிப்பையும் காணலாம், பற்றாக்குறையின் போது அவர்கள் தங்கள் தேவையைப் பெற்றுக்கொள்ளலாம், அவர்கள் தனிமையில் இருக்கும்போது தோழமையைக் காணலாம். எனவே, சபை உண்மையில் புதிய வானங்கள் மற்றும் பூமியின் முன்னறிவிப்பாகும், ஒரு நாள் முழு சிருஷ்டிப்பும் இதை தெரிந்து கொள்ளும்.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

தேவனுடைய ஜனங்கள் அழுத்தத்தில் இருக்கும்போதும் வாழ்க்கையின் நிகழ்வுகள் அவர்களை இழுத்துச் செல்வதைப் போல அச்சுறுத்தும் போதும், அவர்களைச் சுற்றி இருள் சூழ்ந்திருப்பதை கிட்டத்தட்ட உணரும்போதும் "நான் என் சபையைக் கட்டுவேன். நான் என் மேசியா சபையைக் கட்டுவேன்" என்று இயேசு கூறுகிறார். அவர் நம்முடைய ராஜா என்றும் அவர் நம்முடைய நலன்களை மனதில் வைத்திருப்பதாகவும், அவர் நிச்சயமாக நம்மைக் காப்பாற்றி ஆசீர்வதிப்பார் என்றும் உறுதியளிக்கிறார். இது *இந்த* வாழ்க்கையில் நடக்காமல் இருக்கலாம். ஆனால் அது *நடக்கும். அதில்* நாம் உறுதியாக இருக்க முடியும்.

தேவனுடைய மக்களை சபை என்று விவரிப்பதோடு மட்டுமல்லாமல், மத்தேயு அவர்களை தேவனின் குடும்பமாக அடையாளப்படுத்தினார்.

## தேவனின் குடும்பம்

தேவனுடைய மக்கள் தங்களுக்கும் தேவனுக்கும் மற்றும் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள உறவை விவரிக்க 150 முறைக்கு மேல் "பிதா," "குமாரன்" மற்றும் "சகோதரன்" போன்ற குடும்ப மொழியை மத்தேயு சுவிசேஷம் பயன்படுத்துகிறது. குடும்ப மொழியை அடிக்கடி பயன்படுத்திய மற்றொரு சுவிசேஷ எழுத்தாளர் யோவான் மட்டுமே. ஆனால் யோவான் அதைப் பயன்படுத்தியபோது, அவர் பொதுவாக இயேசுவுக்கும் அவருடைய பரலோக பிதாவுக்கும் இடையிலான உறவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

இதற்கு நேர்மாறாக, மத்தேயு அதைப் பயன்படுத்தியபோது, அவர் தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையிலான உறவைப் பற்றிப் பேசினார். அவர் தேவனின் குடும்பத்தைப் பற்றி பேசினார். மேலும் முதன்மையாக, தேவன் தன் பிள்ளைகளுக்குக் காட்டும் அக்கறையையும் பாதுகாப்பையும் வலியுறுத்துவதற்காக மத்தேயு இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார். உதாரணமாக, மத்தேயு 6:4 இல், தம்முடைய மக்கள் மீதான தேவனின் அக்கறையைப் பற்றி இயேசு இவ்வாறு பேசினார்:

> அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் (மத்தேயு 6:4).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மேலும் அவர் இதே மொழியை 6 ஆம் வசனத்திலும், மீண்டும் 18 ஆம் வசனத்திலும் பயன்படுத்தினார். தேவன் தனது பிள்ளைகளின் மீது அக்கறை கொண்டிருந்தார், மேலும் அவர்களுக்கு ஊக்கமளித்து அவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தார் என்பது அவருடைய கருத்து.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தபோது, மத்தேயு 6:8 இல் தம்முடைய அறிவுரைகளை முன்வைத்து அவர்களிடம் சொன்னார்:

> உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார் (மத்தேயு 6:8).

தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்றும், நம்முடைய ஜெபங்களைக் கேட்பார் என்றும் நாம் உறுதியாக இருக்கலாம், ஏனென்றால் அவர் நம்முடைய அன்பான தகப்பன் என்பதை நாம் அறிவோம்.

> எனது கற்பித்தல் பகுதி ஆவிக்குரிய உருவாக்கம் ஆகும், மேலும் கர்த்தரின் ஜெபத்தைப் பற்றி நான் சொல்லும் ஒரு விஷயம் என்னவென்றால், எந்த நேரத்திலும் ஒரே நேரத்தில் ஜெபிக்கும் இலட்சக்கணக்கான மக்கள் இருக்கக்கூடும் என்பதை உணர்ந்து ஜெபத்தைத் தொடங்குகிறோம். தேவன் அந்த ஜெபங்கள் ஒவ்வொன்றிலும் தனித்தனியாக கவனம் செலுத்த முடியும் என்பதால் நாம் தேவனை ”தேவன்” என்று அழை**க்**கிறோம். ஆனால் அது நம்மை ஒரு பரிசுத்த ஐக்கியத்திற்குள் கொண்டுவருகிறது, பரலோக உறுப்பினர்களாக நாம் ஆகிறோம். அதன் பிறகு, ”பிதாவே” என்ற வார்த்தை வருகிறது. அதனால் அந்த ஜெபத்தில் நான் யாராக இருந்தாலும் அல்லது நான் எங்கிருந்தாலும், நான் பிதாவை நோக்கி அப்பா என்று போகிறேன், தேவனை தகப்பனாக நினைத்து அவரிடம் போகிறேன். மேலும் போலந்தில் உள்ள ஒருவர் தேவனை ”அப்பா” என்றும், நான் அமெரிக்காவில் தேவனை ”அப்பா” என்றும் அழைத்தால், நாங்கள் சகோதர சகோதரிகள் என்று அர்த்தம். எங்களுக்கு ஒரே தகப்பன் இருந்தால், நாங்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, மத்தேயு இதை ஒரு வல்லமையான முறையில் பரலோக ராஜ்யத்தின் கருத்துடன் அணுகுகிறார், அதை அவர் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார். ஆனால் நான் ஜெபிக்கும் தருணத்தில் அவர்கள் நான் ஜெபிப்பதை ஜெபிக்கும்போது, மற்றவர்களுடன் நான் ஜெபிக்கிறேன் என்கிற உணர்வை நோக்கி நம்மை இழுப்பது ஜெப



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாழ்க்கையே. நாம் ஒரே குடும்பம் என்பது தான் இதன் அர்த்தமாகும்.

Dr. ஸ்டீவ் ஹார்ப்பர்

தேவன் நம்மைத் தம் குடும்பத்தில் தத்தெடுத்துக் கொண்டார் என்ற உண்மையைப் பற்றி சிந்திப்பதை விட ஊக்கமளிக்கும் விஷயம் ஒன்றும் இல்லை. மன்னிக்கப்படுவது ஒரு பெரிய விஷயம், ஆனால் ஜே. ஐ.பாக்கர் தனது தேவனை அறிதல் என்கிற புத்தகத்தில் சொல்வது போல், நீதிமானாக்கப்படுவது ஒரு பெரிய விஷயம், ஆனால் தேவனின் குடும்பத்தில் தத்தெடுக்கப்படுவது இன்னும் பெரிய விஷயமாகும். தேவனை நம் பிதாவாகக் கொண்டிருப்பது, உண்மையில், நம் வாழ்வில் தேவனுடைய கிரியையின் உச்சம் ஆகும். நாம் நீதிபதியால் மன்னிக்கப்படவில்லை, நாம் தேவனுடைய குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டுள்ளோம், அவர் நம் தந்தை, நாம் அவருடைய குழந்தைகள். எனவே, நாம் கிறிஸ்துவுடன் தேவனின் இணை வாரிசுகளாக இருக்கிறோம். இயேசுவிடம் வரப்போகும் எல்லாமே நம்முடையதாகிறது. அதுவே நமது சுதந்திரமும் கூட. நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்த ஒரு காலம் இருந்தது, அப்பொழுது நம்முடைய சுதந்திரம் தேவனுடைய கோபமாக மட்டுமே இருந்தது. மேலும் கோபாக்கினை மாறி இப்போது கிறிஸ்துவுடன் இணை வாரிசுகளாக இருக்கிறோம். நாம் தெய்வீக சுபாவத்தின் பங்காளிகளாக இருக்கிறோம் மற்றும் நாம் உண்மையில் கிறிஸ்துவின் சகோதரர்கள் என்று அழைக்கப்படுகிறோம், ஏனென்றால் அவரில் நமக்கு புத்திரசுவிகாரம் உள்ளது. கிறிஸ்துவின் நீதியை பெறும்பொருட்டு அநீதியின் கந்தையான துணிகளை நாம் விற்று விட்டோம். ஆனால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறோம், அவருடைய குடும்பத்தில் இருப்பதற்கு அழைக்கப்படுகிறோம். அதுவே நாம் நினைத்துப் பார்க்க முடியாத மிகப்பெரிய ஆசீர்வாதமாகும்.

Dr. கே. எரிக் தோனேஸ்

மத்தேயு 6:25-34 இல், தேவனுடைய பிள்ளைகளை அவர் பராமரிக்கிறார் என்பதை உறுதிப்படுத்துவதற்கு இயேசு இரண்டு வெவ்வேறு உதாரணங்களைப் பயன்படுத்தினார். தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின்

மிகச்சிறியவற்றின் தேவைகளைக் கவனித்துக்கொள்வதைச் சுட்டிக்காட்டி, ”வானத்துப் பறவைகள்” மற்றும் ”காட்டுப் புஷ்பங்கள்” பற்றி அவர் பேசினார். இந்த சிறிய விஷயங்களில் கூட தேவன் அக்கறை காட்டினால், அவர் நிச்சயமாக தம்முடைய மக்களுக்காக அதிக அக்கறை காட்டுவார் என்பது அவருடைய கருத்து. நம்முடைய பரலோகத் தகப்பன் நமக்கு இன்னும் சிறந்த உணவு, உடை மற்றும் பாதுகாப்பைக் கொடுப்பார்.

ஊழியத்தின் பெரும் சிரமங்களைப் பற்றி தம் சீஷர்களை எச்சரித்தபோது, தேவன் ஒரு தகப்பனாக செய்யும் கவனிப்பையும் பாதுகாப்பையும் இயேசு வலியுறுத்தினார். உதாரணமாக, 10:19-20 இல், அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று இயேசு அவர்களிடம் கூறினார். ஆனால் பிதாவின் ஆவி அவர்களுடன் இருக்கும் என்றும் அவர் கூறினார். அவர்களுடைய ஊழியத்தின் காரணமாக அவர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும்போது, அவர்களுடைய பிதா அவர்களைப் பாதுகாப்பார் என்பதை அவர் அவர்களுக்கு நினைப்பூட்டினார். உதாரணமாக, மத்தேயு 10:29-31 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது… ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் (மத்தேயு 10:29-31).

> பல விசுவாசிகளுக்கு, ஒரு கிறிஸ்தவனாக இருப்பது மிகவும் கடினம். உலகின் பல பகுதிகள் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றன. அவர்கள் சரீரத்தின் ஒரு பகுதியாக இருப்பதே அவர்களின் வாழ்க்கையின் பெரிய மகிழ்ச்சியாகும், மேலும் அவர்கள் தங்களை தேவனுடைய மக்களாக அடையாளம் காண முடியும். தேவன் நம் தகப்பன் என்று வேதம் சொல்கிறது. ரோமர் 8 இல் கூறுவது போல், தேவனை அப்பா என்று அழைக்கும் மாபெரும் பாக்கியம் நமக்கு இருக்கிறது. தேவன் நம்மை தொடர்ந்து கவனித்து வருகிறார் என்ற உண்மையும் நம்மிடம் உள்ளது. மேலும் தேவன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு அன்பைக் கொடுப்பதையும் காண்கிறோம். எனவே, விசுவாசியைப் பொறுத்தவரை, கிறிஸ்துவின் மூலம் வரும் இந்த ஊக்கமே அவனுடைய வாழ்க்கையின் இருதயம் ஆகும், ஏனென்றால் தேவன் இப்போது நம் பிதாவாக இருக்கிறார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

Dr. ஜெப் லோமேன்

தேவனுடைய மக்களை சபையாகவும், தேவனுடைய குடும்பமாகவும் கருதிய நாம், தேவனுடைய மக்களின் அழைப்பைக் கருத்தில் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

## அழைப்பு

தேவனுடைய மக்கள் அவருடைய சபையாகவும் அவருடைய குடும்பமாகவும் இருப்பதில் பெரும் பாக்கியம் பெற்றவர்கள். ஆனால் அவருடைய மக்களாக நாம் அழைக்கப்படுவதில் கஷ்டம், ஆபத்து, துன்பம் ஆகியவையும் அடங்கும். இயேசுவே நம்முடைய பாடுபடும் மேசியா ராஜாவாக இருக்கிறார். நாம் அவரைப் பின்பற்றும்போது, நாமும் துன்பப்படுகிறோம். உதாரணமாக, மத்தேயு 10:34-36 இல், நம்முடைய அழைப்பு சச்சரவுகளால் வகைப்படுத்தப்படுகிறது என்று இயேசு கூறினார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள். சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், ”மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே” (மத்தேயு 10:34-36).

மேலும் மத்தேயு 16:24-25 இல் அவர் இவ்வாறு கூறினார்:

> ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான் (மத்தேயு 16:24-25).

தான் நிராகரிக்கப்பட்டதைப் போலவே தம் மக்களும் நிராகரிக்கப்படுவார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். நாம் பாடு படுவதே நம்முடைய ராஜாவுக்கு மகிமையைக் கொடுக்கும் வழியாகும். நமக்கும் அதுவே உண்மையாகும்.

> சிலுவையில் அவர் ஒரு போரில் தோற்றுவிட்டார் என்று மக்கள் நினைத்திருக்கலாம், கல்லறையில் கூட அவர் முடிந்து



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> விட்டார் என்று நினைத்தார்கள், ஆனால் அவர்கள் மூன்றாம் நாள் காலையைப் பற்றி மறந்துவிட்டார்கள். ”நீங்கள் இந்த சரீரத்தை இடித்து விடுங்கள், மூன்று நாட்களில் நான் உயிரோடு எழுப்புவேன்” என்று இயேசு கூறினார். எனவே, ஒவ்வொரு மூலையிலும் சபை எவ்வாறு புறக்கணிக்கப்பட்டது, விமர்சிக்கப்பட்டது, இழிவுபடுத்தப்பட்டது என்பதைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, இயேசு செயல்படுத்திய சபை இன்று செயல்படும் அதே சபை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். அது எவ்வளவு நீடித்தது மற்றும் எவ்வளவு கடந்து சென்றது என்பதைப் பாருங்கள், இன்னும் அது இருக்கிறது. மேலும் நான் இன்னும் கொஞ்சம் படி மேலே செல்லலாம். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் மாம்சமாக மாறிய வார்த்தையாகும். அவர்களால் அப்போது அவரைக் கொல்ல முடியவில்லை, இப்போதும் அவரைக் கொல்ல முடியாது. எனவே, நாம் ஒரு பகுதியாக இருக்கிறோம் … நாம் அவருடைய சபையாக இருக்கிறோம், மேலும் அவர் எதையும் அனுமதிக்க மாட்டார், நரகத்தின் வாசல்கள் கூட மேலோங்கி அவரது பணியை நிறுத்த முடியாது. இந்த சபைக்கு ஒரு பணி உள்ளது, மேலும் தொலைந்து போனவர்களைக் கொண்டு வந்து சீஷர்களாக உருவாக்க உலகம் முழுவதும் சபை செல்ல வேண்டும். அது என்ன ஒரு மகிழ்ச்சியாக இருக்கிறது, சபை நிலைத்திருக்கும் என்பதை அறியும்போது, நீங்களும் நானும் ஒரு பெரிய பாதுகாப்பைப் பெற முடிகிறது மற்றும் இப்போது கூட உண்மையிலேயே உயிர்த்தெழுந்த தருணத்தை உணர முடிகிறது.
>
> Dr. வில்லி வெல்ஸ், Jr.

இயேசு தம்முடைய மக்களின் துன்பங்களுக்கு முடிவுகட்டுவதாகவும், நம்முடைய கஷ்டங்களிலிருந்து நமக்கு இளைப்பாறுதலைத் தருவதாகவும், நமக்கு அமைதியை நிலைநாட்டுவதாகவும், நம்மை அளவில்லாமல் ஆசீர்வதிப்பதாகவும் வாக்குத்தத்தம் பண்ணுகிறார். ஆனால் இன்னும் அது நடக்கவில்லை. எல்லாவற்றையும் புதிதாக்க அவர் திரும்பும் வரை, பாடுபடும் நம் ராஜாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதே நமது அழைப்பாகும்.

> நாம் ஜீவனைப் பெறவும், அதை மிகுதியாகப் பெறவும் தாம் வந்ததாக இயேசு சொன்னார். ஆனால், இந்த வாழ்க்கையில், நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்த பிறகு, நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இன்னும் துன்பம், வலி, நோய் ஆகியவற்றை அனுபவிக்கிறோம் என்று நீங்கள் அறிவீர்கள்; நாம் இன்னும் இறக்கிறோம். நமக்கு இன்னும் ஏமாற்றங்களும் லட்சியங்களும் உள்ளன. நாம் இன்னும் எரிச்சல்களையும், அதற்காக வருத்தங்களையும் அனுபவிக்கிறோம். நாம் இங்கே அடையாளம் காண வேண்டிய ஒரு பகுதி என்னவென்றால், இந்த மிகுதியான வாழ்க்கையைப் பெறுவதன் அர்த்தத்தின் ஒரு பகுதி, இந்த விஷயங்களுக்கு மத்தியில் கிறிஸ்துவைக் கொண்டிருப்பதாகும். நாம் ஒருபோதும் எரிச்சல் அல்லது விரக்தி அடையாதிருந்தால், நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்குத் தெரியாத விஷயங்களை நாம் தெரிந்துகொள்வோம். நாம் துக்கத்தையும் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்கவில்லை என்றால் நமக்கு ஒருபோதும் அவை என்னவென்று தெரியாது. இங்கு மிக முக்கியமான ஒன்று இருப்பதாக நான் நினைக்கிறேன். “நீங்கள் ஜீவனைப் பெறவும், நிறைவான வாழ்வைப் பெறவும் நான் வந்தேன்” என்று இயேசு கூறினார். ஆனால், நாம் எதற்கோ ஏங்குகிறோம் என்று உங்களுக்குத் தெரியும். ”கிறிஸ்துவில்” இருப்பதன் ஒரு பகுதி, அவர் கொண்டு வரப் போகும் முழுமைக்காக ஏங்குவதாகும். கிறிஸ்து தனது சபைக்காக வரும் ஒரு நாள் வருகிறது. அனைவருக்கும் தெரியும் வகையில் கிறிஸ்து எல்லாவற்றையும் ஆளும் ஒரு நாள் வருகிறது. பிதாவாகிய தேவனின் மகிமைக்காக இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று எல்லா முழங்கால்களும் முடங்கும் மற்றும் எல்லா நாவும் அறிக்கையிடும் ஒரு நாள் வருகிறது. எல்லா கண்களும் வறண்டு, எல்லா கண்ணீரும் துடைக்கப்படும் ஒரு நாள் வருகிறது. கிறிஸ்துவில் மிகுதியான வாழ்க்கையைப் பெறுவது நாம் கிறிஸ்துவில் இளைப்பாறுவதாகும், வரப்போகிற காரியங்களை அறிந்து இந்த வாழ்க்கையிலும் இந்த வீழ்ச்சியுற்ற உலகத்திலும் வரும் அனைத்து மகிழ்ச்சிகளையும் துன்பங்களையும் அனுபவிக்கிறோம். நிறைவான வாழ்வு என்பது கிறிஸ்து வரும்வரை அவரை நம்புவதாகும்.

Dr. ஆர். ஆல்பர்ட் மோஹ்லர், Jr.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முடிவுரை

மத்தேயு சுவிசேஷத்தின் இந்த ஆய்வில், அதன் ஆசிரியர், அசல் வாசகர்கள் மற்றும் சந்தர்ப்பத்தின் அடிப்படையில் அதன் பின்னணியை ஆராய்ந்தோம்; அதன் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை நாம் ஆய்வு செய்துள்ளோம், மேலும் அதன் பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தின் முக்கிய கருப்பொருள்கள் மற்றும் தேவனுடைய மக்களின் முக்கியத்துவம் ஆகியவற்றை நாம் பரிசீலித்தோம்.

பரலோகராஜ்யம் பற்றிய பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்கள் இயேசுவின் மேசியா ராஜாவிலும் அவரின் வேலையிலும் நிறைவேறியுள்ளன என்ற நற்செய்தியை மத்தேயு சுவிசேஷம் அறிவிக்கிறது. நமக்காகவும் நம் மூலமாகவும் இயேசு தம்முடைய ராஜ்யத்தை நிறுவி தொடர்ந்து கட்டியெழுப்புகிறார் என்பது நற்செய்தியாகும். ஆனால் இந்த நல்ல செய்தி எப்போதும் எளிதானது அல்ல. நாம் பார்த்தபடி, பாடுபடும் மேசியா ராஜாவைப் பின்பற்றுவதற்கான நமது அழைப்பை தீவிரமான சொற்களில் மத்தேயு விவரித்தார். ஆனால் பரலோகப் பிதாவின் ஆசீர்வாதங்களையும் அவர் தீவிரமான சொற்களில் விவரித்தார். பரலோகராஜ்யம் அதன் முழு மகிமையுடன் பூமிக்கு வரும் வரை, நம்முடைய ராஜாவை உண்மையாகப் பின்பற்றவும், நம்முடைய பாடுகளில் சோர்ந்து போகாமல் இருக்கவும் உதவும் ஆசீர்வாதங்கள் இவையாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# சுவிசேஷங்கள்

பாடம் 2

மத்தேயு எழுதின சுவிசேஷம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.